# தின பூமி

thinaboomi.com

பூமி: 31 சுற்று: 252 ஆவணி 17 | RNI Regn. No.61494/94 MA / 36 / 2015-2017

மதுரை, செவ்வாய், செப்டம்பர் 02, 2025 | ▸சென்னை ▸மதுரை ▸திருச்சி ▸கோவை ▸நெல்லை ▸சேலம் ▸வேலூர் ▸புதுச்சேரி | பக்கம் 8 ₹3.00







### பகுதி செயலாளர் வக்கீல் அசோகன் தலைமையில் நடந்த கூட்டம்

# எடப்பாடியார் வருகையின்போது வடக்கு தொகுதி அ.தி.மு.க.வின் கோட்டை என்பதை நிரூபிக்க வேண்டும்

## முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ பேச்சு

**மதுரை, ஆக 13-**

மதுரை மாநகர் மாவட்ட வடக்கு 5- ம் பகுதி செயலாளர் வக்கீல் அசோகன் தலைமையில் நடந்த கூட்டத்தில் எடப்பாடியார் வருகையின் போது வடக்கு தொகுதி அ.தி. மு.க.வின் கோட்டை என்பதை நிரூபிக்க வேண்டும் என்று மதுரையில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே. ராஜூ எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

மதுரைக்கு வருகை தரும் அ.தி.மு.க.பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது குறித்து வடக்கு 5-ம் பகுதி அ.தி.மு.க.சார்பில் அதன் பகுதி செயலாளர் வக்கீல் அசோகன் தலைமையில் நடந்த கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே. ராஜூ எம்.எல்.ஏ. ஆலோசனைகளை வழங்கி பேசினார். இதில் மகளிரணி செயலாளர் பா.வளர்மதி, பொறுப்பாளர் ஆனிமுத்து, வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், பேராசிரியர் ஜெயபால், ஏ.பார்த்திபன், வி.பி.ஆர்.செல்வகுமார், அண்ணாநகர் ரவிச்சந்திரன் மற்றும் வி.எஸ். பாண்டியராஜன், டி.ராமச்சந்திரன், பி.குமார், பி.தனபால், கே.கே.நகர் மணி, தினேஷ்அலெக்ஸ்சாண்டர், ஜெ.சுந்தர், முகமது ஷாமாஸ், மேலமடை பாண்டியராஜா, அக்னி ராஜ், என்.சுகுமாறன், கே.பழனிச்சாமி, சுலைமான் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



மதுரையில் எழுச்சி பயணம் மேற்கொள்ள வந்த அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிச்சாமிக்கு வடக்கு மாநகர் மாவட்ட வடக்கு 5ஆம் பகுதி அ.தி.மு.க. செயலாளர் வக்கீல் அசோகன் உள்ளிட்ட வடக்கு 5ஆம் பகுதி அ.தி.மு.க. நிர்வாகிகள் வரவேற்பு அளித்தனர்



இந்த கூட்டத்தில் மதுரை மாநகர மாவட்ட அ.தி.மு.க. செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. பேசியதாவது-

கடந்த ஏழாம் தேதி எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம் என்ற தாரக மந்திரமாக பல மாவட்டங்களில் மக்களை சந்தித்து வருகிறார். இது மக்களிடையே பெரிய ஆதரவை தருகிறது. மீண்டும் அதிமுக ஆட்சிக்கு வருவது உறுதி.சிக்கலான சூழ்நிலையில் கூட நல்ல ஆட்சி தந்திருக்கிறார் எடப்பாடி பழனிச்சாமி நல்லாட்சி தருவார் என்று மக்கள் நம்புகிறார்கள்.இந்த இயக்கம் பேரறிஞர் அண்ணாவால் உருவாக்கப்பட்டு எம்ஜிஆர்,ஜெயலலிதா ஆகியோரின் வழிகாட்டுதலோடு எடப்பாடியாரின் தலைமையில் இந்த இயக்கம் சீரோடும் சிறப்போடும் இயங்கிக் கொண்டிருக்கிறது .சுமார் ஒன்றரை கோடி தொண்டர்களோடு ஒரு இயக்கம் இருக்கிறது என்றால் அது அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் மட்டும்தான். இந்த இயக்கத்தில் நான் எம்ஜிஆர் இளைஞர் அணியில் தான் முதலில் சேர்ந்தேன் அப்போது கட்சியின் கொள்கை, எம்ஜிஆரின் பேச்சு, ஏழை எளிய மக்களின் கனவு என்று எண்ணற்ற லட்சியத்தோடு இயக்கத்தில் பயணம் செய்தோம்.

நான் ஒரு தொண்டனாக இருந்த போது கூட நான் அமைச்சர் ஆவேன் என்று நான் நினைக்கவில்லை. ஆனால் இந்த இயக்கத்திற்கு முழு மனதோடும் விசுவாசத்தோடும் உழைத்தால் அம்மா என்னை சட்டமன்ற உறுப்பினர் ஆக்கி அமைச்சராக்கி அழகு பார்த்தார்கள். ஒரு சிறிய தொண்டனுக்கு அ.தி.மு.க.வின் பெரிய பொறுப்புகளை கொடுத்து அழகு பார்த்தார்கள். கட்சியின் விசுவாசத்துடன் உழைக்கும் தொண்டனுக்கு கட்சியின் உயர்ந்த பதவி கிடைப்பது அ.தி.மு.க.வில் மட்டுமே மற்ற எந்த கட்சியிலும் கிடையவே கிடையாது. எனவே நீங்கள் பயபக்தியுடன், பொறுமையுடனும், நிதானத்துடனும் பொதுமக்களை நேரில் சந்தித்து களப்பணியாற்றினால் கண்டிப்பாக உங்களுக்கு அ.தி.மு.க.வில் பெரிய பதவி உண்டு. எனவே நமது பொதுச்செயலாளர் அடுத்த மாதம் இந்த வடக்கு தொகுதிக்கு வருகின்ற பொழுது வடக்கு தொகுதி அ.தி.மு.க.வின் கோட்டை என்பதை நீங்கள் நிரூபிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.






மக்களை காப்போம்!
தமிழகத்தை மீட்போம்!!
புரட்சித் தமிழரின் எழுச்சிப் பயணம்
மதுரை டாக்டர். பா.சரவணன் Ex.MLA


தின பூமி
thinaboomi.com

மக்களை காப்போம்!
தமிழகத்தை மீட்போம்!!
புரட்சித் தமிழரின் எழுச்சிப் பயணம்
மதுரை டாக்டர். பா.சரவணன் Ex.MLA

பூமி: 31 சுற்று: 252 ஆவணி 17
RNI Regn. No.61494/94 MA / 36 / 2015-2017
மதுரை, செவ்வாய், செப்டம்பர் 02, 2025
சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



**மார்க்கெட் விலை நிலவரம்**




| BSE | NSE |
|---|---|
| 554.84 | 198.20 |
| பாயின்ட் 80,364.49 | பாயின்ட் 24,625.05 |



**தங்கம்**
1 சவரன் ₹77,640
1 கிராம் ₹9,705



**வெள்ளி**
1 கிலோ ₹136,000
1 கிராம் ₹136.00



**டாலர்** ₹88.16

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34



# ஆப்கானிஸ்தானில் நிலநடுக்கம்: பலி எண்ணிக்கை 800 ஆக உயர்வு

**காபூல், செப். 02-**



ஆப்கானிஸ்தானில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில் 800-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தானில் நேற்று முன்தினம் இரவு 11:47 மணிக்கு சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. பாகிஸ்தானின் எல்லை அருகே அமைந்துள்ள அந்நாட்டின் நகங்கர் மாகாணம் ஜலாலாபாத்தை மையமாக கொண்டு 8 கிலோ மீட்டர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6.0 ஆக பதிவானது.

நிலநடுக்கத்தால் வீடுகள், கட்டிடங்கள் அதிர்ந்தன. இரவு மக்கள் உறங்கிக் கொண்டிருந்த நேரத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பலரும் பதற்றத்துடன் வீடுகளை விட்டு வெளியேறி சாலைகளில் தஞ்சமடைந்தனர். இந்த நிலநடுக்கம் ஏற்பட்ட 20 நிமிடம் கழித்து அதே மாகாணத்தில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 4.5 ஆக பதிவானது. அடுத்தடுத்து 2 நிலநடுக்கத்தால் நகங்கர் மாகாணத்தில் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

இந்த நிலையில், ஆப்கானிஸ்தானில் அடுத்தடுத்து ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கங்களால் 800 பேர் வரை உயிரிழந்ததாக தகவல் வெளியாகி உள்ளது. அடுத்தடுத்த நிலநடுக்கங்களால் கட்டடங்கள் இடிந்து விழுந்த நிலையில் 1,000க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். நிலநடுக்கங்களால் குனார் மாகாணத்தில் உள்ள 3 கிராமங்கள் முழுமையாக உருக்குலைந்ததாக தலிபான் அரசு தரப்பில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. கட்டிடங்கள் இடிந்ததில் இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணியில் மீட்புப்படை வீரர்கள் ஈடுபட்டுள்ளனர்.

# கொடைக்கானல்: ஒரே இடத்தில் இனி நுழைவு கட்டணம் வசூல்

**கொடைக்கானல், செப். 02-**

கொடைக்கானல் சுற்றுலா இடங்களுக்கு செல்ல நேற்று முதல் ஒரே இடத்தில் நுழைவு கட்டணம் வசூலிக்கும் நடைமுறை அமலுக்கு வந்தது.

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் உள்ள முக்கிய சுற்றுலா தலங்களான குணா குகை, மோயர் சதுக்கம், தூண் பாறை, பைன் மரக்காடுகள் ஆகியவை வனத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. இங்கு தினமும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை சுற்றுலா பயணிகள் பார்வையிட அனுமதிக்கப்படுகின்றனர்.

ஒவ்வொரு சுற்றுலா இடத்திற்கும் அந்தந்த இடத்தில் தனியாக நுழைவு கட்டணம் வசூலிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் சுற்றுலா பயணிகளின் வசதிக்காக, நேற்று (திங்கட்கிழமை) முதல் அனைத்து வனத்துறை சுற்றுலா இடங்களுக்கும் ஒரே இடத்தில் நுழைவு கட்டணம் வசூலிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, வனத்துறை சுற்றுலா இடம் தொடங்கும் பகுதியான தூண் பாறையில், அனைத்து வனத்துறை சுற்றுலா இடங்களுக்கும் சேர்த்து சுற்றுலா பயணிகளிடம் நுழைவு கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

தமிழகம் மற்றும் வெளி மாநில சுற்றுலா பயணிகளில் பெரியவர்களுக்கு ரூ.30, சிறியவர்களுக்கு ரூ.20, வெளிநாட்டினருக்கு ரூ.1,000 என நுழைவு கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதேபோல், உள்நாட்டை சேர்ந்த சுற்றுலா பயணிகள் வரும் கார், வேன் உள்ளிட்ட வாகனங்களுக்கு ரூ.50, பைக்கிற்கு ரூ.20, வெளிநாட்டினர் வரும் கார் மற்றும் வேனுக்கு ரூ.500, பைக்கிற்கு ரூ.100-ஆக நுழைவு கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வனத்துறை சுற்றுலா இடங்களில் தனித்தனியாக டிக்கெட் பெறுவதற்கு பதிலாக ஒரே இடத்தில் டிக்கெட் பெறும் முறை சுற்றுலா பயணிகளுக்கு சுலபமாக இருக்கும் என வனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

### உண்ணாவிரத போராட்டம்:

# சசிகாந்த் செந்தில் எம்.பி.க்கு துரை வைகோ திடீர் ஆதரவு

**சென்னை, செப். 02-**

சசிகாந்த் செந்தில் உண்ணாவிரத போராட்டத்திறகு துரை வைகோ ஆதரவு தெரிவித்துள்ளார்.

தமிழக அரசுக்கு வழங்க வேண்டிய கல்வித்தொகையை வழங்காத மத்திய அரசை கண்டித்து திருவள்ளூர் கலெக்டர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் உள்ள எம்.பி. அலுவலகத்தில் திருவள்ளூர் காங்கிரஸ் எம்.பி. சசிகாந்த் செந்தில் கடந்த 29-ந் தேதி காலவரையற்ற உண்ணாவிரத போராட்டத்தை தொடங்கினார். இந்த போராட்டத்தில் காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

உண்ணாவிரத போராட்டம் நேற்று 4-வது நாளாக தொடர்ந்து வருகிறது. இதற்கிடையில் போராட்டத்தின் போது திடீரென சசிகாந்த் செந்திலுக்கு ரத்த அழுத்தம் அதிகரித்து உடல்நிலை பாதிக்கப்பட்டது. இதையடுத்து அவர் ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக திருவள்ளூர் அரசு மருத்துவ கல்லூரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

ஆஸ்பத்திரியிலும் அவர் போராட்டத்தை தொடர்ந்ததால் அவரது உடல்நிலை மேலும் பாதிக்கப்பட்டது. அதையடுத்து அவர் நேற்று முன்தினம் மேல் சிகிச்சைக்காக ஆம்புலன்சு மூலம் சென்னை ராஜீவ்காந்தி அரசு ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டார். ஆஸ்பத்திரியில் அவருக்கு ரத்த அழுத்த பிரச்சினைக்கு சிகிச்சை அளித்து வருவதாகவும், தொடர்ந்து சசிகாந்த் செந்திலை டாக்டர்கள் கண்காணித்து வருவதாகவும் ஆஸ்பத்திரியின் மருத்துவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தநிலையில், ஆஸ்பத்திரியில் இருந்தபடியே உண்ணாவிரத போராட்டத்தை தொடரும் சசிகாந்த் செந்திலை மதிமுக முதன்மை செயலாளர் துரை வைகோ நேரில் சந்தித்து உடல்நலம் குறித்து விசாரித்தார். மேலும் அவரின் உண்ணாவிரத போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார். இதுகுறித்து சசிகாந்த் செந்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

மருத்துவமனையிலேயே மூன்றாவது நாளாக உண்ணாவிரத போராட்டத்தை தொடர்ந்து வந்த நிலையில் மருத்துவர்கள் அறிவுரைப்படி சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறேன். நேற்று நான்காவது நாளாக எனது உண்ணா விரத போராட்டம் ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் தொடர்கிறது. மதிமுக கழக செயலாளர் மற்றும் திருச்சி நாடாளுமன்ற உறுப்பினர் துரை வைகோ நேரில் வந்து ஆதரவு தெரிவித்து உடல்நலம் குறித்து விசாரித்தார்" என்று தெரிவித்துள்ளார்.

### ரஷ்ய, சீன அதிபர்களுடன் பிரதமர் மோடி:

# இந்தியாவுடனான நட்பு குறித்து அமெரிக்கா கருத்து

**வாஷிங்டன், செப். 02-**

இந்தியாவுடனான நட்பு குறித்து அமெரிக்கா கருத்து தெரிவித்துள்ளது.

அமெரிக்க அதிபராக கடந்த ஜனவரி மாதம் பொறுப்பேற்றுக் கொண்ட டொனால்டு டிரம்ப், பொருளாதார ரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். இதன் ஒரு பகுதியாக உலக நாடுகளுக்கு பரஸ்பர வரி விதிக்கும் அறிவிப்பை டிரம்ப் வெளியிட்டார். இதன்படி இந்தியாவுக்கு 25 சதவீத வரியை டிரம்ப் விதித்தார்.

அத்துடன், உக்ரைன் மீது தாக்குதல் நடத்தி வரும் ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதால், கூடுதலாக 25 சதவீத வரியை டிரம்ப் அறிவித்தார். அதன்படி, இந்தியாவில் இருந்து அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு மொத்தமாக 50 சதவீத வரி விதிக்கப்பட்டது. இந்த வரி விதிப்பு கடந்த 27-ம் தேதி முதல் அமலுக்கு வந்துள்ளது.

ஆனால், வர்த்தக வரி விதிப்பு தொடர்பாக அமெரிக்காவின் நிர்பந்தத்திற்கு அடிபணிய மாட்டோம். எவ்வளவு நெருக்கடிகள் வந்தாலும் இந்திய விவசாயிகள், சிறு வணிகர்களை பாதிக்க விட மாட்டேன் என்று பிரதமர் மோடி திட்டவட்டமாக கூறிவிட்டார். அமெரிக்காவின் வரி விதிப்பால் இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு ஏற்படும் பாதிப்பை சரிகட்ட மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இந்த நிலையில், இந்தியாவுடனான நட்பு தொடர்ந்து புதிய உயரங்களை எட்டுகிறது என அமெரிக்கா தெரிவித்துள்ளது. இது குறித்து இந்தியாவில் உள்ள அமெரிக்க தூதரகம் 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "அமெரிக்கா-இந்தியா இடையிலான கூட்டாண்மை தொடர்ந்து புதிய உயரங்களை எட்டுகிறது. இது 21 ஆம் நூற்றாண்டை வரையறுக்கும் மிகச்சிறந்த உறவு.

நமது மக்கள் மற்றும் நமது முன்னேற்றத்திற்கான சாத்தியக்கூறுகளை நாங்கள் முன்னிலைப்படுத்துகிறோம். புதுமை, தொழில்முனைவு, பாதுகாப்பு மற்றும் இருதரப்பு உறவுகள் என அனைத்து துறைகளிலும் நமது இருநாட்டு மக்களுக்கு இடையிலான நீடித்த நட்பு தான் இந்தப் பயணத்தின் எரிசக்தியாக விளங்குகிறது" என்று பதிவிடப்பட்டுள்ளது.

### தெற்கு ஆப்பிரிக்காவில் பயங்கரம்:

# போலீஸ் வேன், சிறைத்துறை பேருந்து மோதல்: 16 பேர் பலி

**விண்ட்ஹொக், செப். 02-**

தெற்கு ஆப்பிரிக்காவில் போலீஸ் வேன், சிறைத்துறை பஸ் நேருக்கு நேர் மோதியதில் 16 பேர் உயிரிழந்தனர்.

தெற்கு ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள நாடு நமீபியா. இந்நாட்டின் ஹர்டெப் மாகாணம் மெரிண்டெல் நகரில் நேற்று முன் தினம் மாலை சிறைத்துறை பஸ்சில் போலீசார், கைதிகள் உள்பட 13 பேர் பயணித்தனர்.

அந்த பஸ் நெடுஞ்சாலையில் சென்றுகொண்டிருந்தது. அப்போது, போலீசார் 6 பேருடன் வந்தகொண்டிருந்த போலீஸ் வேன் டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து சிறைத்துறை பஸ் மீது மோதியது.

இந்த கோர விபத்தில் 14 போலீசார் உள்பட 16 பேர் உடல் நசுங்கி உயிரிழந்தனர். மேலும், 3 பேர் படுகாயமடைந்தனர். தகவலறிந்து விரைந்து சென்ற மீட்புக்குழுவினர் படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். இந்த விபத்து தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

### திருவள்ளூர் அருகே

# மாவட்ட மேலாளர் அலுவலகத்தை முற்றுகையிட்ட டாஸ்மாக் ஊழியர்கள்

**சென்னை, செப். 02-**

காக்களூர் மேற்கு மாவட்ட மேலாளர் அலுவலகத்தை அனைத்து டாஸ்மாக் கூட்டுக் குழுவினர் திடீரென முற்றுகையிட்டனர்

டாஸ்மாக் மதுக்கடைகளில் காலி பாட்டில்களை திரும்ப கொடுத்தால், 10 ரூபாய் வழங்கும் திட்டம் நேற்று முதல் அமலுக்கு வருகிறது. இதற்கான பணியாளர்கள் கூட்டம் சமீபத்தில் நந்தது. இதில், பணியாளர்கள், டாஸ்மாக் கடைகள் அருகிலேயே காலி மதுபாட்டில்களை வாங்கி வைத்துக் கொள்ள, தனியாக இடம் பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்கான வாடகையை பணியாளர்களே செலுத்த வேண்டும் என, டாஸ்மாக் நிர்வாகம் அறிவுறுத்தி உள்ளது. இதற்கு பணியாளர்கள் மத்தியில் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

இந்தநிலையில், திருவள்ளூர் அருகே காக்களூர் மேற்கு மாவட்ட மேலாளர் அலுவலகத்தை அனைத்து டாஸ்மாக் கூட்டுக் குழுவினர் திடீரென முற்றுகையிட்டனர். அப்போது திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தில் காலி பாட்டில்கள் திரும்பப் பெறும் திட்டத்திற்கு ஊழியர்களின் கோரிக்கைகளை எடுத்துரைக்க நீதிமன்ற உத்தரவின்படி குழு அமைத்து நல்ல முடிவு எடுக்க வேண்டும். அதுவரையில் மேற்கு மாவட்டத்தில் ஸ்டிக்கர் ஒட்டமாட்டோம், காலி பாட்டில்களை வாங்க மாட்டோம் என்பதை வலியுறுத்தி டாஸ்மாக் மேலாளர் அலுவலகத்தை முற்றுகையிட்டு 200-க்கும் மேற்பட்டோர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தநிலையில் திருவள்ளூர் சுற்றுவாட்டாரத்தில் அனைத்து மதுக்கடைகளும் மூடப்பட்டுள்ளதால் மதுகிடைக்காத விரக்தியில் மதுபிரியர்கள் பரிதவிப்புடன் திரும்பி செல்கின்றனர்.

### அமெரிக்கா அதிக வரி விதிப்பு விவகாரம்:

# உதவித்திட்டம் அறிவிக்க ஓ.பி.எஸ். வலியுறுத்தல்

**சென்னை, செப். 02-**

அமெரிக்காவின் 50 சதவீத வரி விதிப்பு உதவித்திட்டம் அறிவிக்க வேண்டும் என்று ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பொருளாதாரத்தில் முக்கியப் பங்கு வகிப்பதோடு மட்டுமல்லாமல், அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவதிலும், மத்திய, மாநில அரசுகளின் வருவாயை பெருக்குவதிலும், வேலை வாய்ப்புகளை உருவாக்குவதிலும், ஆயத்த ஆடைகள் மற்றும் ஜவுளித்துறை, இயந்திரங்கள் துறை, வைரம் மற்றும் நகைகள் துறை, வாகன உதிரிபாகங்கள் துறை, மென்பொருள் துறை ஆகியவை சிறந்து விளங்குகின்றன என்று சொன்னால் அது மிகையாகாது. இப்படிப்பட்ட இன்றியமையாத் துறைகளுக்கு அமெரிக்காவின் ஐம்பது சதவீத வரி விதிப்பு மிகப்பெரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ளதோடு, நாட்டின் ஏற்றுமதிக்கு கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து அமெரிக்க நாட்டிற்கு ரத்தினக் கற்கள், ஆபரணங்கள், ஆடைகள், பாதணிகள், மரச்சாமான்கள், தொழில்துறை ரசாயனங்கள் உள்ளிட்டவை ஏற்றுமதி செய்யப்பட்டு வந்த நிலையில், சென்ற மாதம் 27-ம் தேதியிலிருந்து இந்தியப் பொருட்கள் மீது அமெரிக்க நிர்வாகம் 50 சதவீத வரியை விதித்துள்ளது. இதன் காரணமாக 87 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்த இந்தியாவின் ஏற்றுமதி 50 பில்லியன் டாலராக குறையக்கூடும் என்றும், இதன் காரணமாக இந்திய ஏற்றுமதித் துறையின் போட்டித் தன்மை, நிலைத் தன்மை மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவை அச்சுறுத்தலுக்கு ஆளாகும் என்றும் கூறப்படுகிறது.

ஜவுளித்துறையில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக விளங்குகின்ற சூழ்நிலையில், தமிழ்நாட்டிலிருந்து அமெரிக்காவுக்கு ஆயத்த ஆடைகள் மற்றும் ஜவுளிப் பொருட்கள் அதிகமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தற்போதைய அமெரிக்க அரசினுடைய ஐம்பது சதவீத வரி விதிப்பின் விளைவாக ஜவுளித்துறைக்கு மிகப்பெரிய ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையில், அமெரிக்காவில் உற்பத்தியாகும் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் இந்திய ஆடைகளுக்கு வரி விதிப்பிலிருந்து விலக்கு பெற்றுத் தரவும், பொருட்கள் கப்பலில் ஏற்றப்படும் இடத்தில் உள்ள மொத்த விலை மதிப்பில் 20 சதவீத ஊக்கத் தொகை அளிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்கம் மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே அமெரிக்க அரசின் ஐம்பது சதவீத வரி விதிப்பால் பாதிக்கப்பட்டுள்ள தொழில்களை ஆபத்திலிருந்து பாதுகாக்கும் வகையிலும், நாட்டின் ஏற்றுமதிக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பினை ஈடுகட்டும் வகையிலும், மானியம், வரி விலக்குச் சலுகைகள், ஊக்கத் தொகை, பிற நாடுகளுக்கான ஏற்றுமதியை விரிவுபடுத்துதல் ஆகியவை அடங்கிய ஓர் உதவித் திட்டத்தை உடனடியாக அறிவிக்க வேண்டுமென்று மத்திய அரசை அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# கேரளாவில் கோவில் யானை தாக்கியதில் பாகன் உயிரிழப்பு


**திருவனந்தபுரம், செப். 02-**

கேரளாவில் கோவில் யானை தாக்கியதில் பாகன் உயிரிழந்தார்.

கேரள மாநிலம் ஹரிப்பாடு சுப்பிரமணிய சுவாமி கோயில் யானையான ஸ்கந்தன், திடீரென மிரண்டு பாகனை தாக்கியுள்ளது. தன் மீது அமர்ந்து இருந்த பாகனை கீழே தள்ளிய கோவில் யானை, ஆக்ரோஷமாக தாக்கியது. இதில் படுகாயம் அடைந்த பாகன் முரளிதரன் நாயர் (வயது 58) மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். எனினும் சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந்தார்.

முதல் பாகன் முரளிதரன் நாயரை ஸ்கந்தன் யானை தாக்கியபோது, அவரை காப்பாற்ற துணைப் பாகன் முயற்சி செய்தார். இதில் துணைப் பாகன் சுனில் குமாரும் படுகாயம் அடைந்தார். அவர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கேரளாவில் கோவில் யானை தாக்கியதில் பாகன் உயிரிழந்த இந்தச் சம்பவம் பெரும் சோகத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

**02-09-2025**



# இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** தெய்வ சிந்தனையால் குடும்பத்தோடு புனிதப் பயணங்கள் சென்று மகிழ்வீர்கள். இறையருளால் குழந்தைப் பிறப்புக்கான வாய்ப்பு உருவாகும். கோவில், திருப்பணிகள் ஈடுபடுவதால், புகழ் ஓங்கும்.

**ரிஷபம்:-** கடன் கொடுத்தவர்கள் தொல்லை அதிகரிக்கும். அதனால் குடும்பத்தில் நிம்மதி, குறையும். கருத்து வேறுபாடுகள் எழலாம். புதிய தொழில் முதலீடுகளை ஒத்திப் போடுவது நல்லது.

**மிதுனம்:-** புதிய கலைப் பயிற்சிகள் தேர்ச்சி ஏற்படும். சாதுர்யமான வாக்கு வன்மையால் சம்பாத்தியம் உயரும். தொழில் அல்லது வியாபாரம் மூலம் வரவு திருப்திகரமாக இருக்கும்.

**கடகம்:-** வியாபார விரிவாக்கங்கள் வெற்றி பெற்று, எதிர்பார்த்த வரவுகள் வந்து சேரும். தக்க தருணத்தில் நல்ல நண்பர்களின் உதவி கிடைக்கும். மனதில் சொந்த வீடு வாங்கும் எண்ணம் உருவாகும்.

**சிம்மம்:-** கஷ்டங்கள் அதிகம் ஏற்படாது என்றாலும், காரியத் தடைகள் ஏற்படலாம். வேதனைகளை சாதனைகளாக மாற்றுங்கள். உறவுகளுக்குள் அடிக்கடி கருத்து வேறுபாடுகளால் சண்டைகள் எழலாம்.

**கன்னி:-** வீட்டில் களவு போக வாய்ப்பு உள்ளதால் எச்சரிக்கையோடு இருத்தல் அவசியம். உடல் பாதிப்பு காரணமாக தொல்லைகள் ஏற்படும். பயணங்களின் போது வாகன சுகம் குறையும். தனநாசம் ஏற்படலாம்.

**துலாம்:-** திறமையான நடவடிக்கைகள் மூலம் உங்கள் எதிர்பார்ப்பை விட அதிக அளவுக்கு இலாபங்கள் கிடைக்கும், புதிய கூட்டாளி ஒருவர் உங்கள் வியாபாரம் ,தொழில் ஆகியவற்றில் கை கோர்க்கலாம்.

**விருச்சிகம்:-** பங்குச் சந்தை ஈடுபாடுகள் தவிர்ப்பது நல்லது. பிள்ளையின் உடல்நிலை உங்களுக்குக் கவலையை தரலாம், மேலதிகாரிகளிடம் வாக்குவாதம் செய்யாதிருப்பது நல்லது.

**தனுசு:-** தீர்க்கமான முடிவுகள் அதற்குரிய பரிசினை தவறாமல் அளிக்கும். மேல் வருமானத்திற்கான புதிய வழிகள் உருவாகலாம். தாராளமான பணவரவுக்கு குடும்பத்தினர் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள்.

**மகரம்:-** உங்களால் சுலபமாகச் செய்ய முடியாத காரியங்களை, பிறரைச் செய்யச் சொல்லி வற்புறுத்தாதீர்கள். உறவுகளிடையே மனக்கசப்பு உருவாகலாம். கோபத்தைக் குறைத்தால் நன்மை ஏற்படும்.

**கும்பம்:-** புதிய தொழில் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். உங்கள் கடினமான உழைப்பு இன்று, அதற்குரிய சன்மானத்தை அளிக்கும். புதிய சேமிப்புகளில் முதலீடு செய்ய முனைவார்கள்.

**மீனம்:-** விருந்தினர் வருகையால் இல்லத்தரசிகளுக்கு வேலைப்பளு கூடும். குடும்பத்திற்காக உங்கள் சந்தோஷங்களை தியாகம் செய்வீர்கள். அரசு ஆதரவால் நன்மைகள் நடக்கும்.

# டி.டி.வி. தினகரன் என்.டி.ஏ. கூட்டணியில் தான் இருக்கிறார்

### நயினார் நாகேந்திரன் தகவல்

**திருநெல்வேலி,செப். 02-**

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் டிடிவி தினகரன், தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தான் தொடர்ந்து இருக்கிறார் என்றும், இதில் யாருக்கும் எந்த சந்தேகமும் வேண்டாம் என்றும் தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் பேசிய நயினார் நாகேந்திரன் கூறியதாவது, அம்மா மக்கள் முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன், கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் எங்களோடு கூட்டணியில் இருந்துதான் போட்டியிட்டார். நேற்று வரையிலும் அவர் எங்களுடன்தான் பயணிக்கிறார். எனவே, அவர் எங்கள் கூட்டணியில் இருக்கிறாரா இல்லையா என்பதில் யாருக்கும் எந்தவிதமான சந்தேகமும் தேவையில்லை.

அ.தி.மு.க.-தான் பின்னர் உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்தித்து புதிய கூட்டணியை ஏற்படுத்தியது. டி.டி.வி. தினகரன் எங்களுடன்தான் இருக்கிறார். முதல்வர் ஸ்டாலின், பல லட்சம் கோடி முதலீடுகளை ஈர்க்க வெளிநாடு சென்றிருப்பதாகக் கூறப்படுகிறது. இதற்கு முன்பும் அவர் அமெரிக்கா, ஐரோப்பா எனப் பல நாடுகளுக்குச் சென்று வந்தார்.

அப்போது, அந்தப் பயணங்கள் மூலம் வந்த முதலீடுகள் எவ்வளவு, போடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் தற்போதைய நிலை என்ன என்பது குறித்து ஒரு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்று நான் கோரிக்கை விடுத்தேன். ஆனால், வெள்ளை அறிக்கை வெளியிடப் படவில்லை. இப்போதும் அவர் வெளிநாடு சென்றி ருக்கிறார். வழக்கம் போலவே, இந்த முறையும் அவர் எந்த முதலீட்டையும் கொண்டு வராமல் சும்மாதான் திரும்பி வருவார்.

தமிழகத்தின் பொறுப்பு டி.ஜி.பி. நியமனம் குறித்து பல்வேறு விதமான கருத்துகள் ஊடகங்களில் விவாதிக்கப்பட்டு வருகின்றன. அது குறித்து நாம் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்" என்று நயினார் நாகேந்திரன் கூறினார்.

# டீ, காபி விலை உயர்வு அமல்

**சென்னை, செப். 02-**

சென்னை மாநகரில் டீ கடைகளில் டீ, காபி விலை உயர்வு அமலுக்கு வந்தது.

சென்னையில், 1,000க்கும் அதிகமான டீ கடைகள் இயங்கி வருகின்றன. பால் விலை மற்றும் காஸ் விலை உயர்வு உட்பட பல காரணங்களால், 2022ம் ஆண்டு, சென்னையில் 10 ரூபாய்க்கு விற்கப்பட்ட டீயின் விலை, 2 ரூபாய் உயர்த்தப்பட்டு, 12 ரூபாய்க்கும், 12 ரூபாய்க்கு விற்கப்பட்ட காபி விலை, 3 ரூபாய் உயர்த்தப்பட்டு, 15 ரூபாய்க்கும் விற்பனையானது.

இந்நிலையில், சென்னையில் மூன்று ஆண்டுகளுக்கு பின், நேற்று முதல் டீ, காபி விலையை உயர்த்த, டீ கடை உரிமையாளர்கள் திட்டமிட்டனர். நேற்று முன்தினம் வரை 12 ரூபாய்க்கு விற்கப்பட்ட டீ, நேற்று முதல் 3 ரூபாய் அதிகரித்து, 15 ரூபாய்க்கு விற்கப்பட உள்ளது. காபி விலையும் 5 ரூபாய் அதிகரிக்கப்பட்டு, 20 ரூபாய்க்கு விற்கப்பட உள்ளது. அதேபோல, ராகி மால்ட், பூஸ்ட், ஹார்லிக்ஸ் போன்றவற்றின் விலையும் அதிகரிக்கிறது. பால், லெமன் டீ விலையில் மாற்றம் இல்லை.

போண்டா, பஜ்ஜி, சமோசா விலையும் 3 ரூபாய் உயர்த்தப்பட்டு, 15 ரூபாய்க்கு விற்கப்பட உள்ளன. பார்சல் டீ, காபி விலையும், 10 முதல் 20 ரூபாய் வரை அதிகரித்துள்ளது. விலை உயர்வு குறித்து டீ கடை உரிமையாளர்கள் கூறுகையில், 'அதிகரித்து வரும் மின் கட்டணம், காஸ் விலை, அத்தியாவசிய பொருட்கள் விலை உயர்வு காரணமாக, டீ, காபி விலையை உயர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது' என்றனர். சென்னை பெருநகர டீ கடை உரிமையாளர்கள் சங்கத்தின் செயலர் சுந்தர் கூறியதாவது: டீ, காபி விற்பனை விலையை எங்கள் சங்கம் முடிவு செய்வது கிடையாது. அந்தந்த கடை உரிமையாளர்கள், தங்கள் பகுதி சூழலுக்கு ஏற்ப கட்டணத்தை நிர்ணயம் செய்து, வியாபாரம் செய்கின்றனர். நேற்றும், சென்னையின் பல பகுதிகளில் 10 ரூபாய்க்கு டீ, காபி விற்பனை செய்யப்படுகிறது. அதேபோல இடத்திற்கேற்ப 20 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. தற்போது, பல்வேறு பொருட்களின் விலை மற்றும் மின் கட்டண உயர்வு காரணமாக, பல டீ கடைகளில் கட்டணத்தை உயர்த்துவதாக அறிவித்துள்ளனர். பொருட்களின் தரத்திற்கு ஏற்ப விலை உயர்வு இருக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

### மிசோரம் மாநிலத்தில்

# ரூ.8 ஆயிரம் கோடியில் ரயில் பாதை: பிரதமர் செப்.13-ல் திறந்து வைக்கிறார்

ஐஸ்வால், செப். 02-

மிசோரம் மாநிலத்தில் ரூ.8 ஆயிரம் கோடியில் புதிதாக ரயில் பாதை திட்டத்தை பிரதமர் மோடி வரும் 13-ம் தேதி திறந்து வைக்கிறார்.

இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் கடைசி எல்லையில் இருக்கும் மாநிலம் மிசோரம். இம்மாநிலத்தின் மொத்த நிலப்பரப்பில் 91 சதவீதம் காடுகள்தான். இந்தியா சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் ஆனபோதும் மிசோரம் தலைநகர் ஐஸ்வால் ரயில் போக்குவரத்துடன் இணைக்கப்படவில்லை.

மிசோரமின் ஒரு பகுதியான பைராபி வரை மட்டுமே ரயில் போக்குவரத்து இருந்து வந்தது. அசாம் மாநிலம் சில்சாரில் இருந்து பைராபி வரையிலான இவ்வழித்தடம் கடந்த 2016-ம் ஆண்டு மே மாதம்தான் பிரதமர் மோடியால் தொடங்கி வைக்கப்பட்டது. இவ்வழித் தடத்தின் ரயில் பாதை சுமார் 103 கிலோமீட்டர் என்ற போதிலும் அசாம் மாநில எல்லைக்குள்தான் இவ்வழித்தடத்தின் பெரும்பாலான பகுதி உள்ளது. மிக குறைந்த தூரம் மட்டுமே மிசோரம் மாநில எல்லையில் இருந்தது. இந்தியாவில் 'குறைவான ரயில்பாதை கொண்ட மாநிலம் மிசோரம்' என்ற பெயரும் இருந்தது.

அதைப்போக்கும் வகையில், மிசோரத்தின் பைராபி முதல் சாய்ராங் இடையே 51.38 கிலோமீட்டர் தூரத்துக்கு புதிய ரயில் பாதை அமைத்து மிசோரமின் தலைநகரான ஐஸ்வாலை இணைத்து ரயில் போக்குவரத்து பட்டியலில் அதனை கொண்டுவர 1999-ல் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் அரசு முடிவு செய்தது. சாய்ராங், மிசோரமின் தலைநகரான ஐஸ்வாலுக்கு மிக அருகில் தான் உள்ளது. ஆனால் இந்த திட்டம் கைவிடப்பட்டது.

பின்னர், 2014-ம் ஆண்டு பிரதமராக மோடி பொறுப்பேற்றவுடன், அதே ஆண்டு நவம்பர் 29-ந்தேதி இத்திட்டத்துக்கு அடிக்கல் நாட்டினார். இத்திட்டத்தை அமைப்பதற்கு நடைமுறையில் உள்ள சிக்கல்கள், பிரச்சினைகள் அனைத்தையும் தாண்டி எப்படியாவது நடைமுறைக்கு கொண்டுவர தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் ரயில்வே அமைச்சகம் மேற்கொண்டது.

இதன் காரணமாக இத்திட்டத்துக்கான 51.38 கிலோமீட்டர் தூர ரயில் பாதையில், 5 ரயில்நிலையங்கள், 12.48 கிலோமீட்டர் நீளமுள்ள மலைகளை குடைந்து 48 சுரங்கப்பாதைகள், 55 உயரமான பாலங்கள், 87 சிறிய பாலங்கள், 5 சாலை மேம்பாலங்கள் உருவாக்கப்பட்டன. இத்திட்டத்தின் மூலம் சாய்ராங் ரயில்நிலையம் உலகத்தரத்தில் மேம்படுத்தப்பட்டுள்ளது. ரூ.8,071 கோடி செலவில் இந்த ரயில் பாதையை ரயில்வேத்துறை நேர்த்தியாக வடிவமைத்து சாதனை புரிந்துள்ளது. இந்தப்பாதை ஐஸ்வாலை அசாமின் சில்சார் நகரத்துடனும், நாட்டின் பிற பகுதிகளுடனும் இணைக்கும். இந்த ரயில் நிலையத்தை வரும் 13-ந்தேதி பிரதமர் மோடி தொடங்கி வைக்க உள்ளார்.

### பாரதத்தாயின் வீர மகன்:

# பூலித்தேவருக்கு கவர்னர் புகழாரம்

சென்னை, செப். 02-

பாரதத் தாயின் வீர மகன் பூலித்தேவர் என்று கவர்னர் ஆர்.என்.ரவி புகழாரம் கூறியுள்ளார்.

மாமன்னர் பூலித்தேவனின் 310-வது பிறந்தநாளையொட்டி கவர்னர் ஆர்.என்.ரவி வெளியிட்டுள்ள எக்ஸ் தளப் பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:-

பாரதத் தாயின் வீர மகன் பூலித்தேவரின் பிறந்தநாளில், தேசம் அவருக்கு உளமாற மரியாதை செலுத்துகிறது. தொலைநோக்குப் பார்வைமிக்க தலைவர், சாதுர்யமான உத்திவகுப்பாளர் மற்றும் அச்சமற்ற போர்வீரரான அவர் கொடுங்கோல் பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சிக்கு எதிராக உறுதிபட நின்று, பாரத விடுதலைக்கான ஆரம்பகால மற்றும் மிகவும் வலிமையான போராட்டங்களில் ஒன்றை வழிநடத்தினார்.

அவரது லட்சியங்கள், தியாகங்கள் மற்றும் மரபுகள், விடுதலை போராட்டத்துக்கு வலுவான அடித்தளமிட்ட இடைவிடாத போராட்டத்தில் மக்களை ஒன்றிணைத்தன. அவை நீடித்த வலிமையின் மூலாதாரமாகத் தொடர்ந்து வலுவான, மீள்தன்மை மற்றும் வளமான வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதற்கான நமது தேசிய உறுதிப்பாட்டை ஊக்குவிக்கின்றன. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### ஷாங்காய் மாநாட்டுக்கு பிறகு

# புதினுடன் ஒரே காரில் சென்ற பிரதமர் மோடி



தியான்ஜின், செப். 02-

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட பிரதமர் மோடி, மாநாட்டுக்குப் பின்னர் ரஷ்ய அதிபர் புதினுடன் ஒரே காரில் சென்ற நிகழ்வு கவனம் பெற்றுள்ளது.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (எஸ்சிஓ) கடந்த 2001-ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இந்த அமைப்பில் சீனா, ரஷ்யா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், இந்தியா, பாகிஸ்தான், ஈரான், பெலாரஸ் ஆகிய நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. இந்த அமைப்பின் 2 நாள் உச்சி மாநாடு சீனாவின் தியாஞின் நகரில் நடந்தது.

இந்த மாநாட்டைத் தொடர்ந்து ரஷ்யா - இந்தியா இடையேயான இருதரப்பு பேச்சுவார்த்தை நடைபெற்றது. இந்நிலையில் இருதரப்பு பேச்சுவார்த்தை நடைபெறும் இடத்துக்கு அதிபர் புதின், பிரதமர் மோடி இருவரும் ஒன்றாக காரில் சென்றனர்.

அது தொடர்பான புகைப்படத்தை தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்த மோடி, "இந்திய - ரஷ்ய இருதரப்பு ஆலோசனைக்காக நானும், புதினும் ஒரே காரில் பயணிக்கிறோம். அவருடனான ஆலோசனைகள் எப்போதுமே ஆழமான புரிதலைக் கொண்டவை." எனக் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில், அமெரிக்கா இந்தியா மீது 50 சதவீத வரி விதித்தது. அதற்கு ரஷ்யாவுடனான நட்பை, அங்கிருந்து இந்தியா அதிகளவு கச்சா எண்ணெய் வாங்குவதை சுட்டிக் காட்டியது. இந்நிலையில், ரஷ்ய அதிபருடன் பிரதமர் மோடியின் இந்த சந்திப்பு முக்கியத்துவம் பெறுகிறது. உலக நாடுகளின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. 'ஹாங்கி எல்-5' சொகுசு கார்: ஏற்கெனவே, சீன அதிபர் ஜி ஜின்பிங், 'ஹாங்கி எல்-5' என்ற அதிநவீன சொகுசு காரை பயன்படுத்தி வருகிறார். இதில் பல்வேறு பாதுகாப்பு அம்சங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்த நிலையில், ஷாங்காய் மாநாட்டில் பங்கேற்பதற்காக சீனா வந்துள்ள பிரதமர் மோடியின் பயணத்துக்கு சீன அதிபர் பயன்படுத்தும் 'ஹாங்கி எல்-5' கார் வழங்கப்பட்டுள்ளது. ரஷ்ய அதிபர் புதின் உட்பட 20-க்கும் மேற்பட்ட உலக நாடுகளின் தலைவர்கள், மாநாட்டில் பங்கேற்றுள்ள நிலையில், மோடியின் பயணத்துக்கு மட்டுமே சீன அதிபரின் கார் வழங்கப்பட்டிருப்பது முக்கியத்துவம் பெற்றுள்ளது.

# 2 மாவோயிஸ்டுகள் கைது

ராஞ்சி, செப். 02-

ஜார்க்கண்டில் 2 மாவோயிஸ்டுகளை போலீசார் கைது செய்தனர்.

சத்தீஷ்கார், மராட்டியம், ஜார்க்கண்ட் போன்ற மாநிலங்கள் நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகளின் ஆதிக்கம் அதிகமாக உள்ளது. இந்த நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகளை ஒடுக்கும் நடவடிக்கையில் மாநில சிறப்பு தனிப்படை போலீசாருடன் இணைந்து மத்திய ரிசர்வ் போலீசாரும் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக, கடந்த சில மாதங்களாக நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகளை ஒழிக்கும் நடவடிக்கையில் மத்திய அரசு தீவிரம் காட்டி வருகிறது. மேலும், அடுத்த ஆண்டு மார்ச் 31ம் தேதிக்குள் நாட்டில் நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகளை முழுவதும் ஒழிக்க மத்திய அரசு காலக்கெடு நிர்ணயித்துள்ளது.

இதன் காரணமாக நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகளுக்கு எதிராக பாதுகாப்புப்படையினர் அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். அதேபோல், கைது நடவடிக்கையையும் பாதுகாப்புப்படையினர் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இந்நிலையில், ஜார்க்கண்ட் மாநிலம் மேற்கு சிங்பம் மாவட்டம் சரண்டா வனப்பகுதியில் மாவோயிஸ்டுகள் நடமாட்டம் இருப்பதாக பாதுகாப்புப்படையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. தகவலின் அடிப்படையில் விரைந்து சென்ற பாதுகாப்புப்படையினர் தீவிர சோதனை நடத்தினர். அப்போது, வனப்பகுதியில் பதுங்கி இருந்த மாவோயிஸ்டுகள் 2 பேரை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட மாவோயிஸ்டுகளிடமிருந்து துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

### பறிமுதல் செய்த

# தமிழ்நாடு மீனவர்களின் படகுகளை அடித்து நொறுக்கிய இலங்கை அரசு

ராமேசுவரம், ஆக. 02-

பறிமுதல் செய்த தமிழக மீனவர்களின் படகுகளை இலங்கை அரசு அடித்து உடைத்துள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ராமேசுவரம், பாம்பன், மண்டபம், ஜெகதாபட்டினம், கோட்டைபட்டினம் உள்ளிட்ட தமிழக கடலோர பகுதிகளில் இருந்து மீன்பிடிக்க படகுகளில் தமிழக மீனவர்கள் செல்கின்றனர். அவ்வாறு கடலில் மீன்பிடிக்கும் போது எல்லை தாண்டி சென்றதாக அவ்வப்போது இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களை கைது செய்வதும், அவர்களின் படகுகளை பறிமுதல் செய்வதும் தொடர்ந்து வருகிறது.

அதன்படி தமிழக மீனவர்களுக்கு சொந்தமான 200-க்கும் மேற்பட்ட படகுகள் இலங்கை கடற்படை வசம் உள்ளன. 100-க்கும் மேற்பட்ட படகுகள் இலங்கை யாழ்ப்பாணம் மயிலிட்டி துறைமுக பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளன. இதில் தமிழக மீனவர்களின் 33 படகுகளை இலங்கை அரசு அரசுடைமை ஆக்கியுள்ளது.

மேலும் அந்த படகுகளை உடைத்து அகற்றவும் சில மாதங்களுக்கு முன்பு இலங்கை அரசு உத்தரவிட்டது. இதற்கிடையே மயிலிட்டி துறைமுக பகுதிக்கு இந்த வாரத்தில் இலங்கை ஜனாதிபதி நேரில் ஆய்வு செய்ய இருப்பதாக கூறப்படுகிறது. அவரது வருகையையொட்டி மயிலிட்டி துறைமுக பகுதியை தூய்மைப்படுத்தும் பணிகள் தீவிரம் அடைந்து உள்ளது.

இதையடுத்து அங்கு அரசுடைமையாக்கப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்ட தமிழக மீனவர்களின் 30-க்கும் மேற்பட்ட படகுகள் பொக்லைன் எந்திரம் மூலம் உடைக்கப்பட்டு வருகின்றன. பின்னர் படகுகளின் மரக்கட்டைகளை டிராக்டர்களில் ஏற்றி அச்சுவேலியில் உள்ள மரபேட்டை தொழிற்சாலைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இதுதொடர்பான வீடியோ, புகைப்படங்கள் வெளியானதை பார்த்து தமிழக மீனவர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

### விநாயகர் சிலைகள் கரைப்பு:

# பட்டினப்பாக்கம் கடற்கரையில் 40 டன்கள் குப்பைகள் அகற்றம்

சென்னை, செப். 02-

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு பட்டினப்பாக்கம் கடற்கரையில் 40 டன் குப்பைகள் அகற்றப்பட்டதாக மாநகராட்சி தெரிவித்துள்ளது.

இந்தியா முழுவதும் விநாயகர் சதுர்த்தி விழா கடந்த 27-ந் தேதி கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிலைகள் வைக்கப்பட்டு வழிபாடு நடத்தப்பட்டது.

இந்து முன்னணி மற்றும் பல்வேறு அமைப்புகள் சார்பில் வைக்கப்பட்ட இந்த சிலைகளுக்கு கடந்த 5 நாட்களாக பூஜை செய்யப்பட்டன.

இந்தநிலையில் சென்னையில் நேற்று முன்தினம் விநாயகர் சிலைகள் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு பட்டினப்பாக்கம், காசிமேடு, எண்ணூர், திருவொற்றியூர், பாலவாக்கம் உள்ளிட்ட கடற்கரைகளில் கரைக்கப்பட்டன. காலை 11.30 மணி முதலே விநாயகர் சிலைகள் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு நீர்நிலைகளில் கரைக்கப்பட்டன.

அதன்படி மயிலாப்பூர், கீழ்ப்பாக்கம், திருவல்லிக்கேணி, கோயம்பேடு, அண்ணா நகர், கொளத்தூர், பூக்கடை, புளியந்தோப்பு, வண்ணாரப்பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் வழிபாட்டுக்காக வைக்கப்பட்ட விநாயகர் சிலைகள் ஆட்டோக்கள் மினி லாரிகள் மற்றும் லாரிகளில் வைத்து ஊர்வலமாக புறப்பட்டு பட்டினப்பாக்கம் கடற்கரையை நோக்கி வந்தன.

ஊர்வலத்தின் முன்னும் பின்னும் மேள தாளங்கள், தாரை தப்பட்டைகள் முழங்க வாகனங்களில் ஒலிபெருக்கி முழங்க விநாயகர் பாடல்கள் மற்றும் விநாயகர் கோஷங்கள் விண்ணதிர முழங்க விநாயகர் சிலைகள் ஆடி அசைந்து பட்டினப்பாக்கம் சீனிவாசபுரம் கடற்கரையை வந்தடைந்தன.

அங்கு 2 ராட்சத கிரேன்கள் மற்றும் ஒரு பொக்லைன் எந்திரமும் தயார் நிலையில் நிறுத்தப்பட்டிருந்தன. கடற்கரை மணற்பரப்பில் விநாயகர் சிலைகளை எளிதாக நகர்த்துவதற்காக இரும்பினாலான டிராலியும் அமைக்கப்பட்டு இருந்தது.

அதன்படி, பட்டினப்பாக்கம் சீனிவாசபுரத்துக்கு கொண்டுவரப்பட்ட சிலைகள் ராட்சத கிரேன்கள் மூலம் கடலுக்குள் பத்திரமாக இறக்கி கரைக்கப்பட்டன.

இந்த நிலையில், பட்டினப்பாக்கம் கடற்கரையில் விநாயகர் சிலை கரைப்பை அடுத்து தற்போது வரை 40 டன் குப்பைகள் அகற்றப்பட்டுள்ளதாக சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது. கரை ஒதுங்கும் மரச்சட்டங்கள் உள்ளிட்ட குப்பைகளை அகற்றுவது, கிரேன் நிறுத்தத்திற்காக போடப்பட்ட மண் மேடை ஆகியவற்றை அகற்றும் பணிகள் தொடங்கி நடந்து வருகின்றன.

### மதுரை மீனாட்சியம்மன் கோவில் சொத்துகளை மீட்கக்கோரிய வழக்கு

# அரசு அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவு

மதுரை, செப். 02-

மதுரை மீனாட்சியம்மன் கோவில் சொத்துகளை மீட்கவும், பாதுகாக்கவும் கோரிய வழக்கில் தமிழக அரசு அறிக்கை தாக்கல் செய்ய உயர் நீதிமன்ற கிளை உத்தரவு பிறப்பித்துள்ளது.

சேலத்தை சேர்ந்த ராதாகிருஷ்ணன் என்பவர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில், "மதுரை மீனாட்சியம்மன் கோவில் மற்றும் அதன் உப கோவில்களுக்கு சொந்தமான சொத்துகளை முறையாக மீட்டு பராமரிக்கவும், கோயிலை புனரமைத்து விரைவாக குடமுழுக்கு நடத்தவும் உத்தரவிட வேண்டும்." என்று மனுவில் கூறியிருந்தார். இந்த மனு நீதிபதிகள் அனிதா சுமந்த், குமரப்பன் அமர்வு முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில், 2021-ம் ஆண்டு நீதிமன்றம் அனைத்து கோவில் சொத்துகளை மீட்டு பராமரிப்பது தொடர்பாக உத்தரவிட்டும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை." என தெரிவிக்கப்பட்டது.

அதையடுத்து வாதங்களை ஏற்கொண்ட நீதிபதிகள், "2021-ம் ஆண்டு கோவில் சொத்துகளை மீட்டு பாதுகாப்பது தொடர்பாக நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?" என அரசு தரப்பினரிடையே கேள்வி எழுப்பினர். அப்போது, அரசு தரப்பில் பதில் மனு தாக்கல் செய்ய கால அவகாசம் கோரப்பட்டது. அதையடுத்து அரசு தரப்பில் கோரிக்கையை ஏற்றுகொண்ட நீதிபதிகள், 2021-ம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டு வழக்கை செப்டம்பர் 3-ம் தேதிக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டனர்.

### கடும் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட

# ஆப்கானுக்குஸ்தானுக்கு இந்தியா உதவி செய்யும்: ஜெய்சங்கர் உறுதி

புதுடெல்லி, செப். 02-

ஆப்கானிஸ்தான் நிலநடுக்கம் ஏற்பட்டதை தொடர்ந்து அந்த நாட்டு மக்களுக்கு இந்திய உதவி செய்யும் என்று மத்திய வெளியுறுவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானின் கிழக்கே நேற்று முன்தினம் இரவு 11.47 மணிக்கு சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. அந்நாட்டின் நகங்கர் மாகாணத்தின் ஜலாலாபாத் நகரை மையமாக கொண்டு 8 கிலோ மீட்டர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6.0 ஆக பதிவானது.

20 நிமிடம் கழித்து அதே மாகாணத்தில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 4.5 ஆக பதிவானது. அடுத்தடுத்து 2 நிலநடுக்கங்களால் நகங்கர் மாகாணத்தில் பெரும் பாதிப்பு ஏற்பட்டு உள்ளது. வீடுகள், கட்டிடங்கள் இடிந்து விழுந்தன. இரவு நேரத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சிக்கி உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 800 ஆக உயர்ந்து உள்ளது. 2,500 பேர் காயமடைந்து உள்ளனர்.

இந்நிலநடுக்கம் தொடர்ச்சியாக, குனார் மாகாணத்தில் உள்ள 3 கிராமங்கள் முழுமையாக உருக்குலைந்து விட்டது என தலீபான் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணியில் மீட்புப்படை வீரர்கள் ஈடுபட்டுள்ளனர். இந்த தருணத்தில் ஆப்கானிஸ்தானுக்கு இந்தியா ஆதரவு கரம் நீட்டியுள்ளது.

இதேபோன்று ஆப்கானிஸ்தானுக்கு தேவையான உதவியை இந்தியா செய்யும் என்ற உறுதியை மத்திய வெளியுறவு துறை அமைச்சர் ஜெய்சங்கர் வழங்கினார். இதுபற்றி அவர் வெளியிட்டு உள்ள எக்ஸ் வலைதள பதிவில், ஆப்கானிஸ்தானின் குனார் மாகாணத்தில் பேரிழப்பை ஏற்படுத்திய நிலநடுக்கம் ஆழ்ந்த வருத்தத்திற்குரிய விஷயம். அந்நாட்டு மக்களுக்கு எங்களுடைய ஆதரவை தெரிவிக்கிறோம். இந்த தேவையான நேரத்தில் இந்தியா தன்னுடைய உதவியை வழங்கும். பாதிக்கப்பட்ட நபர்களின் குடும்பத்தினருக்கு எங்களுடைய இரங்கல்கள். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வேண்டி கொள்கிறோம் என தெரிவித்து உள்ளார்.

### டெல்லியில் பரவும் பறவை காய்ச்சல்:

# உயிரியல் பூங்காக்களில் கண்காணிப்பு தீவிரம்

டெல்லி, செப். 02-

டெல்லியில் பரவும் பறவை காய்ச்சலால் உயிரியல் பூங்காக்களில் கண்காணிப்புப்பணி தீவிரம் அடைந்துள்ளது.

தலைநகர் டெல்லியில் பறவை காய்ச்சல் பரவி வருகிறது. எச்5என்1 என்ற வகை பறவை காய்ச்சல் வேகமாக பரவி வருகிறது. குறிப்பாக, தேசிய உயிரியல் பூங்கா பறவை காய்ச்சலால் 12 பறவைகள் உயிரிழந்துள்ளன.

இதையடுத்து, டெல்லியில் உள்ள பல்வேறு உயிரியல் பூங்காக்கள் மூடப்பட்டுள்ளன. மேலும், கண்காணிப்புப்பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. பூங்காக்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், பூங்காக்களில் உள்ள பறவைகள், விலங்குகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

### மூளையை தின்னும் அமீபா:

# கேரளாவில் குழந்தை உள்ளிட்ட 2 பேர் பலி

திருவனந்தபுரம்,செப். 02-

கேரளாவில் அமீபிக் மெனிங்கோ என்செபாலிடிஸ் எனப்படும் மூளையை தின்னும் அமீபா நோயால் மூன்று மாதக் குழந்தை உட்பட இரண்டு பேர் உயிரிழந்தனர். இந்த அமீபா பாதிப்புக்கு ஆகஸ்ட் மாதத்தில் கேரளாவில் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

கேரளாவின் கோழிக்கோடு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஆபத்தான மூளைத் தொற்றான அமீபிக் மெனிங்கோஎன்செபாலிடிஸ் எனப்படும் மூளையை தின்னும் அமீபா பாதிப்புக்கு சிகிச்சையில் இருந்த மூன்று மாதக் குழந்தை உட்பட இரண்டு பேர் உயிரிழந்ததாக சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். இதனால், ஆகஸ்ட் மாதத்தில் கேரளாவில் இத்தொற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மூன்றாக உயர்ந்துள்ளது.

கோழிக்கோடு மாவட்டத்தைச் சேர்ந்த ஓமசேரியைச் சேர்ந்த அபுபக்கர் சித்திக்கின் மகனான 3 மாத குழந்தை, ஒரு மாதமாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் அக்குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தது. அதேபோல மலப்புரம் மாவட்டம் கப்பில் பகுதியைச் சேர்ந்த 52 வயது ரம்லாவுக்கு, ஜூலை 8 ஆம் தேதி மூளையை தின்னும் அமீபா பாதிப்புக்கான அறிகுறிகள் கண்டறியப்பட்டது. அவர் முதலில் ஒரு தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் உடல்நிலை மோசமடைந்ததால் கோழிக்கோடு மருத்துவக் கல்லூரிக்கு மாற்றப்பட்டார். அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். முன்னதாக, ஆகஸ்ட் 14 ஆம் தேதி, தாமரச்சேரியைச் சேர்ந்த 9 வயது சிறுமி கோழிக்கோடு மருத்துவமனையில் இதே அமீபா தொற்றால் உயிரிழந்தார்.

சுகாதாரத்துறை அதிகாரிகளின் தகவல்களின்படி, கோழிக்கோடு, மலப்புரம் மற்றும் வயநாடு மாவட்டங்களை சேர்ந்த மேலும் 8 பேர் தற்போது மூளை அமீபா பாதிப்பால் கோழிக்கோடு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அமீபிக் மெனிங்கோ என்செபாலிடிஸ் எனும் மூளையை தின்னும் அமீபா பாதிப்பு அசுத்தமான நீரில் குளிப்பதன் மூலம் ஏற்படுகிறது. இதுவரை, கேரளா முழுவதும் 42 பேர் இந்த வகை அமீபாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கேரளாவில் இந்த பாதிப்பு அதிகரித்து வருவதால், கோழிக்கோடு, வயநாடு மற்றும் மலப்புரம் மாவட்டங்களில் உள்ள கிணறுகள், நீர்நிலைகள் மற்றும் நீர் சேமிப்பு தொட்டிகளில் குளோரினேஷன் செய்ய சுகாதாரத் துறை தொடங்கியுள்ளது. மேலும் இது தொடர்பான விழிப்புணர்வு பிரச்சாரங்களும் நடந்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

### தமிழகத்தில் உள்ள

# நீச்சல் குளங்களை ஆய்வு செய்ய பொது சுகாதாரத்துறை உத்தரவு

சென்னை, செப். 02-

கேரளாவில் மூளையைத் தின்னும் அமீபா தொற்று அதிகரித்து வருவதையடுத்து, தமிழகத்தில் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட அதிகாரிகளுக்கு பொது சுகாதாரத் துறை அறிவுறுத்தியுள்ளது.


இயற்கை நன்னீரில் காணப்படும் இந்த அரிய வகை அமீபா மூக்கின் வழியாக உடலுக்குள் நுழைந்து மூளையைப் பாதிக்கும். கடந்த ஆகஸ்ட் மாதத்தில் மட்டும் கேரளாவில் இதனால் மூவர் உயிரிழந்ததுடன், மேலும் எட்டு பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதனை முன்னிட்டு, தமிழக பொது சுகாதாரத் துறை இயக்குநர் சோமசுந்தரம், மாநிலம் முழுவதும் உள்ள மாவட்ட சுகாதார அதிகாரிகளுக்கு சிறப்பு உத்தரவு பிறப்பித்துள்ளார். குறிப்பாக, மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் உள்ள குளங்கள், நட்சத்திர ஹோட்டல்களின் நீச்சல் குளங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்து சுத்தம் செய்ய வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நீச்சல் குளங்களில் தண்ணீரை இரண்டு நாள்களுக்கு ஒரு முறை மாற்றி, குளோரின் பவுடர் சேர்த்து சுத்திகரிக்க வேண்டும் என்று உரிமையாளர்களுக்கு கட்டாய உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மாசடைந்த நீர்நிலைகளில் குழந்தைகள் விளையாடுவதைத் தவிர்க்க பெற்றோர்கள் எச்சரிக்கப்படுகின்றனர்.

மேலும், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் சென்னையில் வைரஸ் காய்ச்சல் பரவியுள்ளதால், காய்ச்சல் அறிகுறிகள் தென்பட்டவுடன் உடனடியாக மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற வேண்டும் என்று பொதுமக்களுக்கு சுகாதாரத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

### தலைவர்கள் சொல்வதை படிங்க....



தேர்தல் ஆணையம் பா.ஜ.க.வின் பொம்மையாய் செயல்படுவதை உடனடியாக நிறுத்த வேண்டும். முறைகேடாக நீக்கப்பட்ட ஒவ்வொரு வாக்காளரையும் மீண்டும் சேர்க்க வேண்டும். இல்லையெனில் காங்கிரஸ் கட்சி தெருக்களில் இறங்கி குரல் கொடுத்து, போராடி, பாசிச பா.ஜ.க அரசை மக்கள் முன் வெளிச்சம் போட்டு நிறுத்தும்.

- செல்வப்பெருந்தகை



அ.தி.மு.க. அணிகள் இணைய வேண்டும் என்ற சசிகலாவின் கருத்தை வரவேற்கிறேன். பிரிந்து கிடக்கும் சக்தியை ஒன்று சேர்க்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு இருக்கிறேன். வெளிநாட்டு பயணம் மேற்கொண்டுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு வாழ்த்துகள். விஜயுடன் கூட்டணி என்பது எதிர்காலத்தில் எதுவும் நடக்கலாம்.

- ஓ.பன்னீர் செல்வம்



தூய்மைப் பணியாளர்கள்தான் தி.மு.க. அரசை வாக்களித்து தேர்ந்தெடுத்தவர்கள். அவர்களுக்குத்தான் தி.மு.க. அரசு விசுவாசமாக இருக்க வேண்டும். சமூகத்தின் அடித்தட்டு மக்களான தூய்மைப் பணியாளர்களுக்கு தி.மு.க. அரசு துணையாக இருந்து அவர்களின் கோரிக்கைகளை நடைமுறைபடுத்த வேண்டும்.

- அன்புமணி



இந்திய குடியுரிமை திருத்த சட்டத்தை பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டபோது, அதற்கு ஆதரவாக வாக்களித்த அ.தி.மு.க. சிறுபான்மையினருக்கு ஆதரவாக செயல்படுகிறோம் என்று கூறுவதை யாரும் நிச்சயமாக நம்ப மாட்டார்கள். வருகிற சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் போட்டியிட மனிதநேய மக்கள் கட்சிக்கு கூடுதல் தொகுதிகளை கேட்போம்.

- ஜவாஹிருல்லா

## மகளிர் உலகக்கோப்பை தொடர்:
# பட்டம் வெல்லும் அணிக்கு ரூ.39.55 கோடி பரிசுத்தொகை



**பெங்களூரு, செப். 02-**

மகளிர் உலகக்கோப்பை தொடருக்கான பரிசுத்தொகையை ஐ.சி.சி. அறிவித்துள்ளது. அதன்படி பட்டம் வெல்லும் அணிக்கு ரூ.39.55 கோடி பரிசுத்தொகையும்,2வது இடம்பெறும் அணிக்கு ரூ.19.77 கோடியும், அரையிறுதியில் தோல்வி அடையும் அணிகளுக்கு தலா ரூ. 9.88 கோடியும் பரிசுத்தொகையாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**4-வது முறை...**

13-வது மகளிர் ஒருநாள் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டி இந்த மாதம் (செப்டம்பர்) 30-ம் தேதி முதல் நவம்பர் 2-ம் தேதி வரை இந்தியா மற்றும் இலங்கையில் நடக்கிறது. இந்தியாவில் மகளிர் உலகக்கோப்பை அரங்கேறுவது இது 4-வது முறையாகும். இதில் இந்தியா, நடப்பு சாம்பியன் ஆஸ்திரேலியா, பாகிஸ்தான், நியூசிலாந்து, இலங்கை, இங்கிலாந்து, தென்ஆப்பிரிக்கா, வங்காளதேசம் ஆகிய 8 அணிகள் பங்கேற்கின்றன. ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் முடிவில் டாப்-4 இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும்.

**பரிசுத்தொகை...**

இந்தியா மற்றும் இலங்கையின் தலைநகர் கொழும்பிலும் மொத்தம் 31 ஆட்டங்கள் நடத்தப்படுகின்றன. இதன் முதல் ஆட்டத்தில் இந்தியா-இலங்கை அணிகள் மோதுகின்றன. இந்நிலையில் இந்த தொடருக்கான பரிசுத்தொகையை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) அறிவித்துள்ளது. அதன்படி கோப்பையை வெல்லும் அணிக்கு ஏறக்குறைய ரூ 39.55 கோடியும், 2வது இடம்பெறும் அணிக்கு ரூ.19.77 கோடியும், அரையிறுதியில் தோல்வி அடையும் அணிகளுக்கு தலா ரூ. 9.88 கோடியும் பரிசுத்தொகையாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## உங்கள் பாரம்பரியம் எங்களுக்கு அப்பாற்பட்டது:
# ஓய்வு பெற்ற புஜாராவுக்கு பிரதமர் மோடி புகழாரம்



**புதுடெல்லி, செப். 02-**

உங்கள் பாரம்பரியம் எங்களுக்கு அப்பாற்பட்டது என்று கிரிக்கெட் போட்டியில் இருந்து விடை பெற்ற புஜாராவுக்கு பிரதமர் மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

**லண்டன் ஓவலில்...**

இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அரங்கில் ஆகச்சிறந்த தடுப்பாட்டக்காரர்களில் ஒருவராக திகழ்ந்தவர், செதேஷ்வர் புஜாரா. ராகுல் டிராவிட்டுக்கு அடுத்து 'சுவர்' என்று அழைக்கப்பட்ட புஜாரா கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக கடந்த மாதம் (ஆகஸ்ட்) 24-ம் தேதி அறிவித்தார். கடைசியாக 2023-ம் ஆண்டு ஜூன் மாதம் லண்டன் ஓவலில் நடந்த ஆஸ்திரேலியாவுக்கு எதிரான உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டியில் விளையாடினார்.

**முதல்தர போட்டி...**

அதன் பிறகு இளம் வீரர்களின் வருகையால் இந்திய அணியில் இருந்து ஓரங்கட்டப்பட்டார். 2 ஆண்டுகள் ஒதுங்கி இருந்தாலும் முதல் தர கிரிக்கெட் போட்டிகளில் தொடர்ந்து விளையாடினார். இடையில் வர்ணனையாளராகவும் பணியாற்றினார். இனி இந்திய அணியில் தனக்கும் மறுபிரவேச வாய்ப்பு கிடைக்காது என்பதை உணர்ந்த புஜாரா கிரிக்கெட்டுக்கு 'குட்பை' சொல்லி உள்ளார்.

**103 போட்டிகளில்...**

ஆஸ்திரேலிய மண்ணில் முதல் முறையாக இந்தியா டெஸ்ட் தொடரை (பார்டர்-கவாஸ்கர் கோப்பை) வெல்ல முக்கிய பங்காற்றினார். சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டில் 103 போட்டிகளில் விளையாடியுள்ள அவர் 3 இரட்டை சதங்கள் உட்பட 7,195 ரன்கள் குவித்துள்ளார். அதுபோக 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 51 ரன்கள் அடித்துள்ளார்.

**பிரதமர் பாராட்டு..**

இந்த நிலையில் பிரதமர் நரேந்திர மோடி, கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற புஜாராவுக்கு நெகிழ்ச்சியுடன் வாழ்த்து கடிதம் எழுதியுள்ளார். அதில், "அன்புள்ள செதேஷ்வர், உங்கள் கிரிக்கெட் வாழ்க்கையை முடித்துக்கொள்ளும் முடிவை அறிந்தேன். இந்த அறிவிப்பைத் தொடர்ந்து, ரசிகர்களும் கிரிக்கெட் சமூகமும் உங்கள் அற்புதமான சாதனைகளைப் பாராட்டி உள்ளனர். உங்கள் அபாரமான கிரிக்கெட் வாழ்க்கைக்கு என் மனமார்ந்த வாழ்த்துகளையும், உற்சாகமான பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**பேட்டிங் வரிசை...**

குறுகிய வடிவிலான கிரிக்கெட் ஆதிக்கம் செலுத்தும் இந்தக் காலத்தில், நீங்கள் நீண்ட வடிவிலான விளையாட்டின் அழகை நினைவூட்டினீர்கள். உங்கள் அசைக்க முடியாத மனோபாவமும், நீண்ட நேரம் பெரும் கவனத்துடன் பேட்டிங் செய்யும் திறனும் உங்களை இந்திய பேட்டிங் வரிசையின் மையமாக ஆக்கியது. உங்கள் மிகச்சிறந்த கிரிக்கெட் வாழ்க்கை, குறிப்பாக வெளிநாட்டு சவாலான சூழல்களில், அற்புதமான திறமையும் உறுதியும் நிறைந்த தருணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

**உறுதியாக நின்று...**

உதாரணமாக, ஆஸ்திரேலியாவில் நடந்த டெஸ்ட் போட்டிகளில், இந்தியா முதல் முறையாக வரலாற்று சிறப்புமிக்க தொடர் வெற்றியைப் பெற்றபோது, நீங்கள் அடித்தளமாக இருந்தது ரசிகர்களுக்கு எப்போதும் நினைவில் இருக்கும்! மிகவும் வலிமையான பந்துவீச்சு தாக்குதலுக்கு எதிராக உறுதியாக நின்று, அணிக்காக பொறுப்பை ஏற்பது என்றால் என்ன என்பதை நீங்கள் காட்டினீர்கள். உங்கள் வாழ்க்கையில் பல தொடர் வெற்றிகள், சதங்கள், இரட்டை சதங்கள் மற்றும் பாராட்டுகள் இருந்தாலும், உங்கள் இருப்பு அணியினருக்கும் அளித்த அமைதியான உணர்வை எந்த எண்ணிக்கையாலும் அளவிட முடியாது.

**உங்கள் நீண்டகால...**

இது உங்கள் நீடித்த பாரம்பரியமாகும். இது வெறும் எங்களுக்கு அப்பாற்பட்டது. கிரிக்கெட் மீதான உங்கள் ஆர்வம், சர்வதேச கிரிக்கெட் வீரராக இருந்தபோதிலும், சவுராஷ்டிராவுக்காகவோ அல்லது வெளிநாட்டிலோ முதல் தர கிரிக்கெட்டை விளையாடியதிலும் பிரதிபலித்தது. சவுராஷ்டிரா கிரிக்கெட்டுடனான உங்கள் நீண்டகால தொடர்பும், ராஜ்கோட்டை கிரிக்கெட் வரைபடத்தில் இடம்பெறச் செய்த உங்கள் பங்களிப்பும், பகுதியின் ஒவ்வொரு இளைஞருக்கும் பெருமைக்குரியதாக இருக்கும்.

**உங்கள் பயணத்தில்...**

உங்கள் தந்தை, ஒரு கிரிக்கெட் வீரராகவும் உங்கள் வழிகாட்டியாகவும் இருந்தார், உங்களைப் பற்றி பெருமைப்படுவார் என நம்புகிறேன். பூஜாவும், அதிதியும் உங்களுடன் அதிக நேரம் செலவிட முடியும் என்பதில் மகிழ்ச்சியடைவார்கள். அவர்கள் அனைவரும் உங்கள் பயணத்தில் ஆதரவாக பெரும் தியாகங்களைச் செய்துள்ளனர்.

**வர்ணனையாளராக...**

களத்திற்கு அப்பால், உங்கள் ஆழமான பகுப்பாய்வு ஒரு வர்ணனையாளராக கிரிக்கெட் ஆர்வலர்களுக்கு பெரும் மதிப்பைச் சேர்க்கிறது. மேலும் உங்கள் நுண்ணறிவுகளைக் கேட்க அவர்கள் ஆவலுடன் உள்ளனர். கிரிக்கெட்டுடன் தொடர்ந்து தொடர்பில் இருந்து, எழுச்சியடையும் கிரிக்கெட் வீரர்களை ஊக்குவிப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். உங்கள் எதிர்கால பயணத்திற்கு வாழ்த்துக்கள்!" என்று அதில் தெரிவித்துள்ளார்.

# கோப்பையை வென்றது ஓவல்



தி ஹன்ட்ரெட் தொடரை தொடர்ச்சியாக மூன்றாவது முறையாக ஓவல் இன்வின்சிபிலஸ் அணி வென்று சாதனை படைத்துள்ளது. சாம் பில்லிங்ஸ் தலைமையிலான ஓவல் அணி இறுதிப் போட்டியில் 26 ரன்கள் வித்தியாசத்தில் டிரெண்ட் ராக்கெட்ஸ் அணியை வீழ்த்தியது. இங்கிலாந்தில் 100 பந்துகள் கொண்ட கிரிக்கெட் தொடர் தி ஹன்ட்ரெட் எனும் பெயரில் 2021 முதல் நடைபெற்று வருகின்றன. இந்த சீசனில் ஆரவர் தி ஹன்ட்ரெட் இறுதிப் போட்டியில் டேவிட் வில்லி தலைமையிலான டிரெண்ட் ராக்கெட்ஸ் அணியும் சாம் பில்லிங்ஸ் தலைமையிலான ஓவல் இன்வின்சிபிலஸ் அணியும் மோதின.

இந்தப் போட்டியில் முதலில் பேட்டிங் செய்த ஓவல் அணி 100 பந்துகளில் 168/5 ரன்கள் எடுத்தது.

அதிகபட்சமாக வில் ஜாக்ஸ் 72, ஜோர்டான் காக்ஸ் 40 ரன்களும் எடுத்தார்கள். அடுத்து விளையாடிய டிரெண்ட் அணி 142/8 ரன்கள் மட்டுமே எடுத்தது. இந்த அணியில் அதிகபட்சமாக மார்கஸ் ஸ்டாய்னிஸ் 64 ரன்கள் எடுத்தார். தொடர்ச்சியாக மூன்றாவது முறையாக இந்தக் கோப்பையை ஓவல் அணி வென்று அசத்தியுள்ளது.

## இங்கி., வீரரின் திடீர் முடிவு

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னணி ஆல் ரவுண்டரான ஜேமி ஓவர்டான் டெஸ்ட் போட்டிகளில் இருந்து காலவரையற்ற இடைவெளி எடுப்பதாக அறிவித்துள்ளார். இவர் கடைசியாக இங்கிலாந்து - இந்தியா டெஸ்ட் தொடரின் 5-வது போட்டியில் விளையாடினார். இது குறித்து பேசிய அவர், "மிகவும் யோசித்த பிறகு, நான் டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து காலவரையற்ற இடைவெளி எடுக்க முடிவு செய்துள்ளேன். டெஸ்ட் கிரிக்கெட் எனது தொழில்முறை வாழ்க்கைக்கு அடித்தளமாக அமைந்துள்ளது. இதுவரை விளையாட்டில் எனக்குக் கிடைத்த ஒவ்வொரு வாய்ப்புக்கும் நுழைவாயிலாக உள்ளது. நான் விளையாட்டைக் கற்றுக்கொண்ட இடம் இதுதான்.

இருப்பினும், எனது வாழ்க்கையின் இந்த கட்டத்தில் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் அனைத்து வடிவங்களிலும் (டெஸ்ட், ஒருநாள் மற்றும் டி20) முழுமையான அர்ப்பணிப்புடன் இருக்க இனி சாத்தியமில்லை. இனிமேல், எனது கவனம் வெள்ளை பந்து கிரிக்கெட்டில் (டி20 மற்றும் ஒருநாள்) இருக்கும். என்னால் முடிந்தவரை அணிக்காக எல்லாவற்றையும் கொடுப்பேன்" என்று கூறினார்.

## லலித் மீது ஹர்பஜன் காட்டம்

**17** ஆண்டுகளுக்கு பிறகு ஸ்ரீசாந்தின் கன்னத்தில் ஹர்பஜன் சிங் அறையும் சர்ச்சைக்குரிய வீடியோவை ஆஸ்திரேலிய முன்னாள் கேப்டன் மைக்கேல் கிளார்க் உடனான யூடியூப் உரையாடலின் போது, ஐ.பி.எல். முன்னாள் தலைவர் லலித் மோடி பகிர்ந்தார். தற்போது அந்த வீடியோ வைரலாகி வருகிறது. ஆட்டம் முடிந்து வீரர்கள் கைகுலுக்கும் போது, ஹர்பஜன்சிங், ஸ்ரீசாந்தின் கன்னத்தில் தடாலடியாக அடிப்பதும், பிறகு இருவரும் ஒருவரையொருவர் அடிப்பார் போல் பாயும் போது நடுவர்கள், சக வீரர்கள் சமாதானப்படுத்துவதும் அந்த வீடியோவில் இடம் பெற்றுள்ளது. இப்போதும் அவர்கள் எதற்காக மோதிக் கொண்டார்கள், ஹர்பஜன்சிங்கை கோபமூட்டும் வகையில் ஸ்ரீசாந்த் என்ன சொன்னார் என்பது மர்மமாகவே உள்ளது.

இந்நிலையில் இந்த வீடியோவை சுயநல நோக்கங்களுடன் லலித் மோடி வெளியிட்டதாக ஹர்பஜன் சிங் காட்டமாக தெரிவித்துள்ளார். இது குறித்து பேசிய அவர், "வீடியோ கசிந்த விதம் தவறு. அது நடந்திருக்கக் கூடாது. அதன் பின்னால் அவர்களுக்கு ஏதோ சுயநல நோக்கம் இருக்கலாம். அது 18 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஒரு விஷயம். மக்கள் அதனை மறந்துவிட்டார்கள். ஆனால் அவர்கள் அதை மீண்டும் மக்களுக்கு நினைவூட்டுகிறார்கள். எனக்கு மிகவும் வருத்தமாக உள்ளது. நாங்கள் விளையாடிக் கொண்டிருந்தோம். அந்த சமயத்தில் ஒவ்வொருவரின் மனதிலும் ஏதோ நடந்து கொண்டிருந்தது. தவறுகள் நடந்தன, அதற்காக நாங்கள் வெட்கப்படுகிறோம். அது ஒரு துரதிர்ஷ்டவசமான சம்பவம். நான் பலமுறை கூறியிருக்கிறேன். நான் தவறு செய்துவிட்டேன். மனிதர்கள் தவறு செய்கிறார்கள், நானும் ஒரு தவறு செய்தேன். நான் மீண்டும் தவறு செய்தால் என்னை மன்னிக்கும்படி விநாயகரிடம் கேட்டுக் கொண்டேன்" என்று கூறினார்.

## ஜோகோவிச் காலிறுதிக்கு தகுதி

'கிராண்ட்ஸ்லாம்' என்ற உயரிய அந்தஸ்து பெற்ற அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி நியூயார்க் நகரில் நடந்து வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 4-வது சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீரரான செர்பியாவின் ஜோகோவிச், ஜெர்மனியின் ஜான்-லெனார்ட் ஸ்ட்ரப் உடன் மோதினார்.

இதில் தொடக்கம் முதலே சிறப்பாக செயல்பட்ட ஜோகோவிச் 6-3, 6-3 மற்றும் 6-2 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியுள்ளார். இவர் காலிறுதியில் டெய்லர் பிரிட்ஸ் உடன் மோத உள்ளார்.

## தொடரை வென்றது இலங்கை

இலங்கை கிரிக்கெட் அணி ஜிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடியது. இதில் நடைபெற்ற முதல் போட்டியில் இலங்கை வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2-வது மற்றும் கடைசி போட்டி ஹராரேயில் நேற்று நடந்தது. இதில் முதலில் பேட் செய்த ஜிம்பாப்வே 7 விக்கெட்டுக்கு 277 ரன்கள் எடுத்தது. அதிகபட்சமாக பென் கர்ரன் 79 ரன்கள் அடித்தார். இலங்கை தரப்பில் சமீரா 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

பின்னர் இலக்கை நோக்கி ஆடிய இலங்கை அணி 49.3 ஓவர்களில் 5 விக்கெட்டுக்கு 278 ரன் சேர்த்து 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்று தொடரையும் கைப்பற்றியது. தொடக்க ஆட்டக்காரர் பதும் நிசங்கா சதம் (122 ரன்) அடித்தார். ஆட்ட நாயகன் மற்றும் தொடர் நாயகன் விருதை பதும் நிசங்கா தட்டி சென்றார்.

## உலக தடகள போட்டி:
# இந்திய அணியில் நீரஜ் சோப்ரா உள்ளிட்ட 19 பேருக்கு இடம்..!

**புதுடெல்லி, செப். 02-**

உலக தடகள போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் 19 பேருக்கு இடம் கிடைத்துள்ளது.

**ஈட்டி எறிதலில்...**

20-வது உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டி வருகிற 13-ந் தேதி முதல் 21-ந் தேதி வரை ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெறுகிறது. கவுரவமிக்க இந்த போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டது. ஈட்டி எறிதலில் உலக சாம்பியனான நீரஜ் சோப்ரா தலைமையிலான இந்திய அணியில் மொத்தம் 19 பேர் இடம் பெற்றுள்ளனர். நீரஜ் சோப்ராவுடன், சச்சின் யாதவ், யஷ்வீர் சிங், ரோகித் யாதவ் என 4 வீரர்கள் ஈட்டி எறிதலில் திறமையை காட்ட உள்ளனர். உலக தடகள சாம்பியன்ஷிப் ஈட்டி எறிதலில் 4 இந்தியர்கள் பங்கேற்க இருப்பது இதுவே முதல் முறையாகும்.

**'வைல்டு கார்டு'...**

ஒரு நாட்டில் இருந்து 3 வீரர்கள் மட்டுமே ஒரு பந்தயத்தில் கலந்து கொள்ள முடியும். ஆனால் நீரஜ் சோப்ரா நடப்பு சாம்பியன் என்பதால் 'வைல்டு கார்டு' சலுகை மூலம் களம் இறங்குகிறார். இதனால் இந்த பிரிவில் கூடுதலாக ஒரு இடம் கிடைத்துள்ளது. தமிழகத்தை சேர்ந்த பிரவீன் சித்ரவேலும் (டிரிபிள் ஜம்ப்) இடம் பிடித்துள்ளார். 3,000 மீட்டர் ஸ்டீபிள்சேஸ் வீரர் அவினாஷ் சாப்லே இந்த போட்டிக்கு தகுதி பெற்றபோதிலும் உடல்தகுதியுடன் இல்லாததால் அணிக்கு தேர்வு செய்யப்படவில்லை.

## இந்திய அணி விவரம்:

### ஆண்கள்:

நீரஜ் சோப்ரா, சச்சின் யாதவ், யஷ்வீர் சிங், ரோகித் யாதவ் (4 பேரும் ஈட்டி எறிதல்), முரளி ஸ்ரீசங்கர் (நீளம் தாண்டுதல்), குல்வீர் சிங் (5,000 மற்றும் 10,000 மீட்டர் ஓட்டப்பந்தயம்), பிரவீன் சித்ரவேல், அப்துல்லா அபூபக்கர் (இருவரும் டிரிபிள் ஜம்ப்), சர்வேஷ் அனில் குஷாரே (உயரம் தாண்டுதல்), அனிமேஷ் குஜூர் (200 மீட்டர் ஓட்டம்), தேஜாஸ் ஷிர்சி (110 மீட்டர் தடைஓட்டம்), சர்வின் செபாஸ்டியன் (20 கிலோ மீட்டர் நடைப்பந்தயம்), ராம் பாபூ, சந்தீப் குமார் (இருவரும் 35 கிலோ மீட்டர் நடைப்பந்தயம்).

### பெண்கள்:

பருல் சவுத்ரி, அங்கிதா தயானி (இருவரும் 3,000 மீட்டர் ஸ்டீபிள்சேஸ்), அன்னு ராணி (ஈட்டி எறிதல்), பிரியங்கா கோஸ்வாமி (35 கிலோ மீட்டர் நடைப்பந்தயம்), பூஜா (800 மற்றும் 1500 மீட்டர் ஓட்டப்பந்தயம்).

# அ.தி.மு.க ஆட்சி அமைந்ததும் ஜல்லிக்கட்டு காளைக்கு மதுரையில் சிலை வைக்கப்படும்

## திருப்பரங்குன்றத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பேச்சு



**திருப்பரங்குன்றம், செப். 02-**

மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்' முதல் கட்ட எழுச்சிப்பயணத்தை அ.தி.மு.க பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மேட்டுப்பாளையத்தில் கடந்த ஜூலை 7ம் தேதி தொடங்கினார். இந்த எழுச்சிப்பயணத்தின் நான்காம் கட்டத்தின் முதல் நாளான இன்று திருப்பரங்குன்றம், திருமங்கலம், திருச்சுழி ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் மக்களைச் சந்திக்கிறார். முதலில் திருப்பரங்குன்றம் தொகுதிக்குட்பட்ட 16 கால் மண்டபம் அருகே கூடியிருந்த மக்கள் மத்தியில் இபிஎஸ் எழுச்சியுரையாற்றினார்.

அப்போது அவர், ''ஜல்லிக்கட்டுக்கு புகழ்பெற்ற மண்ணில் பேசுகிறேன். அ.தி.மு.க ஆட்சியில் ஜல்லிக்கட்டு அமைப்பைச் சேர்ந்தவர்கள் தான் போட்டியை நடத்தினார்கள். ஆனால், தி.மு.க அரசு ஜல்லிக்கட்டுப் போட்டியை கட்டுப்பாட்டுக்குள் எடுத்துக் கொண்டது. ஜல்லிக்கட்டு டோக்கன் வழங்குவதிலும் லஞ்சம், ஊழல் செய்கிறது இந்த விடியா தி.மு.க அரசு. அ.தி.மு.க அரசு அமைந்ததும் முன்பு எப்படி ஜல்லிக்கட்டு போட்டிகள் நடந்தது போலவே மீண்டும் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஜல்லிக்கட்டு காளைக்கு சிலை அமைக்கக் கோரிக்கை வைத்துள்ளீர்கள், அ.தி.மு.க ஆட்சி அமைந்ததும் கண்டிப்பாக சிலை அமைக்கப்படும்.

மதுரை மாநகராட்சியில் 200 கோடி ரூபாய் ஊழல் நடந்துள்ளது. குடிநீர் வரி, கடை வரி, குப்பை வரியிலும் முறைகேடு செய்திருக்கிறார்கள். இதை நாம் சொல்லவில்லை. அரசு நடத்திய விசாரணையில் வெளிவந்துள்ளது, அதில் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேயரின் கணவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேயரின் ஒத்துழைப்பு இல்லாமல் முறைகேடு நடந்திருக்க முடியாது. எனவே, மதுரை மேயர் கைது செய்யப்பட வேண்டும். மதுரை மேயரைக் காப்பாற்ற தி.மு.க அரசு முயல்கிறது. அ.தி.மு.க அரசு வந்தவுடன் முழு விசாரணை நடத்தி, சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும். இங்கு மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் பல மாநகராட்சிகளில் ஊழல் செய்த பணத்தைப் பிரிப்பதில் தகராறு ஏற்பட்டு, தி.மு.க கவுன்சிலர்களே மேயருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருகிறார்கள். காஞ்சிபுரம், நெல்லை, கோவையிலும் இவ்வாறு நடந்துள்ளது. மற்ற நகர்ப்புற பகுதிகளிலும் ஊழல்கள் நடந்துள்ளது. அ.தி.மு.க. ஆட்சி அமைந்ததும் முறையாக விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

பொருளாதாரக் குற்றப்பிரிவுக்கு ஒரு டிஜிபி, தீயணைப்புத் துறைக்கு ஒரு டிஜிபி என 8 டிஜிபிக்களுக்கும் ஒவ்வொரு பொறுப்பு உள்ளது. அப்படி பொறுப்புமிக்க 8 டிஜிபிக்கள் விழாவில் பங்கேற்கவில்லை என்றால் இந்த அரசு எப்படி நடக்கும்? காவல் துறையிலேயே சரிவு ஏற்பட்டுள்ளது. நாட்டை ராணுவம் பாதுகாக்கிறது, மக்களை காவல்துறை பாதுகாக்கிறது. மக்களைக் காக்கிற காவல்துறையின் டிஜிபி பதவியைக் கூட உரிய காலத்தில் நியமிக்க முடியாத அளவுக்கு திமுக அரசு சென்றுவிட்டது. தகுதிவாய்ந்த டிஜிபியை நியமிக்க வேண்டும் என்று நாம் சொல்லியும் கூட தி.மு.க அரசு கேட்கவில்லை.

மக்கள் வேலைக்காக, உணவுக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அம்மா உணவகத்தை கூட மூடப்பார்க்கிறார்கள். முழுமையாக பொருட்கள் கொடுப்பதில்லை, ஊழியர் எண்ணிக்கை குறைத்தனர். இவர்களா ஏழை மக்களைக் காப்பாற்றுவார்கள்?

2011க்கு முன்பு தி.மு.க ஆட்சியையும், 2011க்கு பின் அ.தி.மு.க ஆட்சியையும் ஒப்பிட்டு பாருங்கள். இன்று போதை பொருள் விற்காத இடமே இல்லை. போதை பொருள் தாராளமாகக் கிடைக்கிறது. இளைஞர்கள் சீரழிகிறார்கள், நான் பல முறை சொல்லியும் முதல்வர் கண்டுகொள்ளவில்லை. அதனால் போதை மாநிலமாக உருவாகிவிட்டது.

மின்கட்டணம் இந்த ஆட்சியில் 67% உயர்த்திவிட்டனர். தொழிற்சாலை, கடைகளுக்கு பீக் ஹவர் கட்டணம் என்று தனியே வசூலிக்கிறார்கள். அப்போதும் மின்சார வாரியம் கடனில்தான் தத்தளிக்கிறது. குடிநீர் வரி, வீட்டு வரி, கடை வரி என எல்லா வரிகளையும் 100% முதல் 150% வரை உயர்த்திவிட்டனர். போதாக்குறைக்கு குப்பைக்கும் வரி போட்ட ஒரே அரசு தி.மு.க அரசுதான்.

விலைவாசியைக் கட்டுப்படுத்த தி.மு.க அரசு முயலவில்லை. ஏழை நடுத்தர மக்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அ.தி.மு.க ஆட்சியில் விலைவாசி உயரும்போது விலை கட்டுப்பாட்டு நிதி என்று 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, அதன்மூலம், அண்டை மாநிலங்களில் எங்கு குறைந்த விலையில் பொருட்கள் கிடைக்கிறதோ அங்கிருந்து கொள்முதல் செய்து, கூட்டுறவு சங்கங்கள் மூலம் தமிழக மக்களுக்குக் கொடுத்தோம்.

ஆனால் முதல்வருக்கு அவரது குடும்பத்தைப் பற்றி மட்டுமே சிந்தனை. அவர் நாட்டு மக்களைப் பற்றி கவலைப்படவில்லை. 51 மாத காலத்தில் விலை குறைக்க நடவடிக்கை எடுக்கவில்லை. கொரோனா, புயல், வறட்சி ஆகியவற்றிலும் விலைவாசி உயராமல் பார்த்துக் கொண்டது அ.தி.மு.க. அரசு. எம்.ஜி.ஆர், அம்மா ஏழைகளை நேசித்தார்கள், எப்போதெல்லாம் துன்பம் ஏற்படுகிறதோ, அதிலிருந்து விடுபடும் அளவுக்கு ஆட்சி செய்தார்கள்.

திருப்பரங்குன்றம் தொகுதியில், 24 மணிநேரம் அரசு மருத்துவமனை, பள்ளிகள் தரம் உயர்த்துதல், முல்லைப் பெரியாறு திட்டம், போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வு, பொறியியல் கல்லூரி, மருத்துவ ஆராய்ச்சி நிலையம், வட்டாட்சியர் அலுவலகம் என்று நிறைய திட்டங்கள் கொடுத்திருக்கிறோம்.

திருப்பரங்குன்றம் மலைக்கு ரோப் கார் வசதி செய்வதாக தி.மு.க.வினர் சொன்னார்கள். அதை செய்யவில்லை, கிரிவலப்பாதை மேம்படுத்தப்படும் என்றார்கள், செய்யவில்லை. அவனியாபுரம் பைபாஸ் முதல் நெல்பேட்டை வரை உயர்மட்ட பைபாஸ் பாலம் கட்டப்படும் என்றார்கள், செய்யவில்லை. விரகனூர் ரவுண்டானா உயர்மட்ட பாலம் கட்டுவோம் என்று சொன்னார்கள், செய்யவில்லை. தி.மு.க. ஆட்சியில் திருப்பரங்குன்றத்தில் பாதாள சாக்கடைத் திட்டம் ஆமை வேகத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அ.தி.மு.க அமைந்ததும் விரைவுபடுத்தி முடித்துக்கொடுக்கப்படும்.

இந்தப்பகுதியில் மல்லிகைப் பூ சாகுபடி அதிகம் நடக்கிறது. சில காலகட்டத்தில் மல்லிகைப் பூ விலை வீழ்ச்சி அடைவதால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். அந்த விலை வீழ்ச்சியை சரிக்கட்ட உங்கள் ஆதரவுடன் அடுத்தாண்டு அ.தி.மு.க அரசு அமைந்ததும், இப்பகுதியில் மல்லிகை சென்ட் தொழிற்சாலை அமைக்கப்படும். மக்களைக் காப்போம் தமிழகத்தை மீட்போம். பைபை ஸ்டாலின்'' என்று சூளுரைத்தார்.

## இ.பி.எஸ். கூட்டத்தில்
# ஆம்புலன்ஸ் ஓட்டுநரை தாக்கிய வழக்கில் நான்கு பேருக்கு இடைக்கால முன்ஜாமீன்

**மதுரை, செப். 02-**

திருச்சி துறையூரில் எடப்பாடி பழனிச்சாமி பிரச்சாரக் கூட்டத்தில் 108 ஆம்புலன்ஸ் வேன் மற்றும் ஓட்டுநர் தாக்கப்பட்ட வழக்கில் அ.தி.மு.க.வினர் 4 பேருக்கு இடைக்கால முன்ஜாமீன் வழங்கி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருச்சி மாவட்டம் துறையூரில் ஆகஸ்ட் 24-ம் தேதி அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி பங்கேற்ற பிரச்சாரப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அப்போது அங்கு வந்த 108 ஆம்புலன்ஸ் தடுத்து நிறுத்தப்பட்டது. மேலும், ஆம்புலன்ஸ் ஓட்டுநர் தாக்கப்பட்டார். இந்த சம்பவம் தொடர்பாக அ.தி.மு.க.வைச் சேர்ந்த 10 பேர் மீது துறையூர் போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர். இதில் துறையூரைச் சேர்ந்த பாலமுருகவேல் என்ற அமைதி பாலு, விக்கி என்ற விவேக், தீன தயாளன், கலிங்க முடையான்பட்டியைச் சேர்ந்த பொன் காமராஜ் ஆகியோர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் முன்ஜாமீன் கோரி மனு தாக்கல் செய்தனர். அதில், அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், தமிழக எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி, திருச்சி துறையூர் பேருந்து நிலையம் அருகே ஆகஸ்ட் 24-ம் தேதி அன்று மாலை சுமார் 6.30 மணியளவில் அரசியல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டார். அப்போது அப்பகுதிக்கு 108 ஆம்புலன்ஸ் வந்தது.

பின்னர் 108 ஆம்புலன்ஸ் வேனையும், அதன் ஓட்டுநரையும் தாக்கியதாக துறையூர் காவல் நிலைய போலீஸார் எங்கள் மீது வழக்குப் பதிவு செய்தனர். எங்களுக்கும் ஆம்புலன்ஸ் தாக்கப்பட்ட சம்பவத்துக்கும் தொடர்பில்லை. எனவே முன்ஜாமின் வழங்க வேண்டும்' எனக் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதி ஸ்ரீமதி அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில், எடப்பாடி பழனிசாமியின் பொதுக் கூட்டங்களுக்கு வேண்டும் என்றே ஆம்புலன்ஸ்களை அனுப்பி வைத்து இடையூறு செய்கின்றனர் என வாதிடப்பட்டது. இதற்கு அரசு தரப்பில் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது. பின்னர் நீதிபதி, மனுதாரர்கள் 4 பேருக்கும் இடைக்கால முன்ஜாமீன் வழங்கப்படுகிறது. மனு தொடர்பாக துறையூர் காவல் ஆய்வாளர் பதிலளிக்க உத்தரவிட்டு வழக்கு விசாரணையை செப்.8-ம் தேதிக்கு ஒத்தி வைத்து உத்தரவிட்டார்.

# சினிமா CINI செய்திகள்

## 'கடுக்கா' திரைவிமர்சனம்



வேலை வெட்டி இல்லாத நாயகன் விஜய் கௌரிஷ், தன் வீட்டுக்கு அருகே புதிதாக குடிவரும் நாயகி ஸ்மேஹாவுக்கு காதல் தொல்லை கொடுக்கிறார். மறுபக்கம், விஜய் கௌரிஷின் நண்பர் ஆதர்ஷும் ஸ்மேஹாவை கல்யாணம் செய்துகொள்ள விரும்புவதாக அவரிடம் தெரிவிக்கிறார். விஜய் கௌரிஷின் காதலை ஏற்றுக் கொள்ளும் ஸ்மேஹா, ஆதர்ஷையும் காதலிப்பதாக சொல்கிறார். நண்பர்கள் இருவரும் ஒரே பெண்ணை காதலிப்பது தெரியாமல் காதல் மயக்கத்தில் இருக்கிறார்கள். இந்நிலையில், இருவரும் தனித்தனியாக ஸ்மேஹாவை சந்தித்து பேசும்போது, இருவரும் முட்டாளாக்கப்பது தெரிய வருகிறது. அவர் அப்படி செய்ய காரணம் என்ன, என்பதை எதார்த்தமாகவும், நகைச்சுவையாகவும் சொல்லும் படமே 'கடுக்கா. நாயகனாக நடித்திருக்கும் விஜய் கௌரிஷ் அவரது நண்பராக வரும் ஆதர்ஷ் மற்றும் நாயகி ஸ்மேஹா மூவவரும் அழகான நடிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். எழுதி இயக்கியிருக்கும் எஸ்.எஸ்.முருகரசு, இளைஞர்களின் எதார்த்தமான வாழ்வியலை நகைச்சுவையாகவும் பெண்கள் எதிர் கொள்ளும் பிரச்சனையை அழுத்தமாகவும் பதிவு செய்திருக்கிறார். படம் ஆரம்பம் முதல் இறுதி வரை நகைச்சுவையாக நகர்ந்தாலும், இறுதியில் பார்வையாளர்களின் இதயத்தை கனக்க செய்யும் வகையில் முக்கியமான பிரச்சனையை பற்றி பேசி படத்தை முடித்து பாராட்டு பெறுகிறார். மொத்தத்தில், 'கடுக்கா' ஓகே ரகம்.

## அடுத்த வாரம் வெளியாகும் 'யோலோ'




*MR Motion Pictures* சார்பில் மகேஷ் செல்வராஜ் தயாரிப்பில், இயக்குநர் S. சாம் இயக்கத்தில், புதுமுகம் தேவ் நாயகனாக நடிக்க, ரொமான்ஸ் காமெடி ஜானரில், உருவாகியுள்ள திரைப்படம் யோலோ. வரும் செப்டம்பர் 12 ஆம் தேதி திரைக்கு வரவுள்ள இப்படத்தின் இசை மற்றும் டிரெய்லர் வெளியீட்டு விழா சமீபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பேசிய இயக்குநர் ஆர். கே. செல்வமணி, எனக்கு முதல் படத்துக்குச் சம்பளம் 14,000 தான். ஆனால் அடுத்த படத்துக்குச் சம்பளம் ஒரு கோடி ரூபாய். அதனால் முதல் படத்துக்குச் சம்பளத்துக்கு அலையாதீர்கள். முதல் படத்தோட பட்ஜெட் என்னவோ அது தான் உங்கள் சம்பளம் . ஏனெனில் என்னை நம்பி ஒரு தயாரிப்பாளர் 1 கோடி போடுகிறார் என்றால் அது தான் என் சம்பளம். அப்படி இயக்குநர்கள் நீங்கள் நினைத்தால்தான் அடுத்து ஒரு கோடி ரூபாய் சம்பளம் வாங்க முடியும். பின்னர் இயக்குநர் சாம் பேசுகையில், அமீர் சார் ஒரு சிங்கம் மாதிரி. அவருடன் வேலை செய்வது சவாலானதாக இருந்தது. அவர் கடின உழைப்பாளி. தயாரிப்பாளரின் பணத்தை வீணாக்கக் கூடாது என்பதை அவரிடம் கற்றுக் கொண்டேன். அவரால்தான் புதுமுகங்களை வைத்து படம் எடுக்க எனக்கு தைரியம் வந்தது என்றார்.

## இந்த வாரம் வெளியாகும் 'காந்தி கண்ணாடி'



ரணம் படத்தை இயக்கிய ஷெரிப் தற்போது இயக்கியிருக்கும் படம் காந்தி கண்ணாடி. இப்படத்தை ஆதிமூலம் கிரியேஷன்ஸ் சார்பில் ஜெய் கிரண் தயாரித்திருக்கிறார். விவேக் - மெர்வின் இசையமைக்க, பாலாஜி கே.ராஜா ஒளிப்பதிவு செய்திருக்கிறார். பாலா நாயகனாக நடிக்க, நாயகியாக நமிதா கிருஷ்ணமூர்த்தி நடித்திருக்கிறார். இவர்களுடன் இயக்குநர் பாலாஜி சக்திவேல் மற்றும் அர்ச்சணா, நிகிலா சங்கர், ஜீவா சுப்பிரமணியன், அமுதவாணன், மனோஜ் பிரபு, மதன் உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள். வரும் செப்டம்பர் 5 ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ள நிலையில், இந்த படத்தின் பத்திரிகையாளர்கள் சந்திப்பு நிகழ்வு சமீபத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் பேசிய பாலா, "காரைக்காலில் சாதாரண குடும்பத்தில் பிறந்து வளர்ந்த நான் இன்று இங்கு நின்று பேசுகிறேன் என்றால் அதற்கு மிக முக்கிய காரணம் அமுதவாணன் அண்ணன் தான். காரைக்கால் பாலாவாக இருந்த நான் காந்தி கண்ணாடி பாலாவாக உயர்வதற்கு, எந்தவித பிரதி பலனும் எதிர்பார்க்காமல் என்னை அரவணித்து அழைத்து சென்ற அமுதவாணன் அண்ணனுக்கு என் நன்றி. என்னைப் பற்றி நல்ல செய்திகளாக வெளியிட்டு என் முன்னேற்றத்திற்கு உதவியாக இருக்கும் ஊடகத்தினருக்கும் நன்றி.

## 'குற்றம் புதிது' திரைவிமர்சனம்




போலீஸ் உதவி ஆணையர் மதுசூதனன் ராவின் மகள் சேஷ்விதா கனிமொழி, பணி முடித்துவிட்டு இரவு நேரத்தில் வீடு திரும்பும் போது மாயமாகி விடுகிறார். மறுநாள் அப்பகுதியில் இளம் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டு கிடப்பதாக தகவல் வருகிறது. இதற்கிடையே, தான் ஒரு பெண்ணை கொலை செய்துவிட்டதாக நாயகன் தருண் விஜய் போலீஸில் சரணடைகிறார். விசாரணையில் மேலும் இரண்டு கொலைகள் செய்திருப்பதாக சொல்கிறார். அப்படி அவர் கூறிய இரண்டு பேரும் உயிருடன் இருக்க, காவல்துறைக்கு தலை சுற்றுகிறது. இப்படி புது வடிவிலான கிரைம் சஸ்பென்ஸ் திரில்லர் ஜானரில் சொல்வதே 'குற்றம் புதிது படத்தின் கதை. அறிமுக நாயகன் தருண் விஜய், முதல் படத்திலேயே அபாரமாக நடித்துள்ளார். கொலை செய்ததையே ஒரு குழந்தையை போல் ஒப்புக்கொள்ளும் காட்சியில் கைதேர்ந்த நடிகராக பளிச்சிடுகிறார். நாயகி சேஷ்விதா கனிமொழி, கண்களாலே உணர்வுகளை கடத்தி விடுகிறார். மதுசூதனன் ராவ், ராம்ஸ், நிழல்கள் ரவி, பாய்ஸ் ராஜன் ஆகியோர் தங்களது அனுபவமான நடிப்பு மட்டுமல்ல கரண் பி.க்ருபாவின் பாடல்களும், பின்னணி இசையும் திரைக்கதை ஓட்டத்திற்கு பலம் சேர்த்திருக்கிறார்கள். எழுதி இயக்கியிருக்கும் நோஹா ஆம்ஸ்ட்ராங், ஒரு பெண் காணாமல் போகும் சம்பவத்தை மையக்கருவாக வைத்துக்கொண்டு, யூகிக்க முடியாத திருப்பங்கள், விறுவிறுப்பான திரைக்கதை, வேகமான காட்சியமைப்பு என்று புதுவிதமான கிரைம் திரில்லர் ஜானர் படத்தை சிறப்பாக கொடுத்திருக்கிறார்.

## 'பாம்' இசை வெளியீட்டு விழா



ஜெம்பிரியோ பிக்சர்ஸ் சுதா சுகுமார் மற்றும் சுகுமார் பாலகிருஷ்ணன் தயாரிப்பில், அர்ஜுன் தாஸ், ஷ்வாத்மிகா ராஜசேகர் நடிக்கும் படம் பாம். செப்டம்பர் 12 ஆம் தேதி திரைக்கு வரவுள்ள இப்படத்தின் இசை மற்றும் டிரெய்லர் வெளியீட்டு விழா, சமீபத்தில் நடைபெற்றது. அப்போது ஷரைலி பாலகிருஷ்ணன் பேசியதாவது... அன்புதான் நம்மை எல்லோரையும் ஒன்றிணைக்கிறது என்ற மையக்கருவை அடிப்படையாக கொண்டு இந்தப் படம் உருவாகி இருக்கிறது என்றார். இயக்குநர் ரா பார்த்திபன் பேசியதாவது. அர்ஜுன் தாஸைப் பார்த்தால் ஹீரோவை மையமாக வைத்துப் படமெடுக்கத் தோன்றுகிறது. தயாரிப்பாளருக்கு இந்தப்படம் மிகப்பெரிய வெற்றிப்படமாக அமையட்டும் என்றார். அர்ஜுன் தாஸ் பேசுகையில், இந்தப்படத்தில் நான் லீட் இல்லை, விஷால் அவர் டீம் தான் லீட். நான் ஒரு குட்டி பார்ட். ஷிவாத்மிகா அருமையாக நடித்துள்ளார், அவருடன் வேலை பார்த்தது சந்தோஷம். விஷால் கதை சொன்னவுடன் – "நான் தான் பண்ணனுமா எனக் கேட்டேன். எல்லோரும் சொல்லியும் என்னை நம்பி இப்படத்தை தந்ததற்கு நன்றி. இப்படம் கண்டிப்பாக அனைவருக்கும் பிடிக்கும் என்றார்.

## லோகா சேப்டர் 1 சந்ரா



படத்தின் ஆரம்பத்திலேயே மிகப்பெரிய சண்டையிலிருந்து தப்பித்து, பெங்களூர் வருகிறார் கல்யாணி. அங்கு அவர் தன் அடையாளத்தை மறைத்து மக்களோடு மக்களாக வாழ்கிறார். அதே ஊரில் இரவு நேரங்களில் சிலரை கடத்தி உடல் உறுப்பு திருடும் கும்பல் சுற்றி திரிய, அதில் ஒருவருடன் கல்யாணிக்கு மோதல் ஏற்படுகிறது. அவரை கல்யாணி புரட்டி எடுக்கிறார். கல்யாணி யார், எதற்காக இங்கே வந்துள்ளார் என்ற பல பரபரப்புகளே மீதிக்கதை. கல்யாணி ஆரம்பத்தில் தன் சக்தி வெளியே தெரியகூடாது என பொறுத்து பொறுத்து சென்றாலும், ஒரு கட்டத்தில் அவர் தன் சக்தியை வெளிக்கொண்டு வரும் இடத்தில் மாஸ் காட்டுகிறார். கல்யாணி காதலராக நஸ்லான் வந்து போகிறார். படத்தில் வில்லனாக வருவது சாண்டி மாஸ்டர் தான், அவரும் படம் முழுவதும் ஒரு ஆணாதிக்க திமிருடன் வருகிறார். ஒளிப்பதிவு, கல்யாணி ஹீரோக்களுக்கு நிகராக ஸ்டண்ட் காட்சியில் கலக்கியுள்ளார். படத்தின் ஆரம்பம் ஆமர்க்களம் என்றாலும் கடைசியில் சுவாரஸ்யம் சற்று குறைந்து போகிறது. .

# திருமங்கலம் தொகுதியில் எடப்பாடி பழனிசாமி எழுச்சி பயணம்: முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் தலைமையில் உற்சாக வரவேற்பு

### அம்மா கோவிலில் அலைகடலென திரண்ட மக்கள் மத்தியில் எடப்பாடியார் எழுச்சி உரை

**திருமங்கலம்,செப்.02-**

மதுரை புறநகர் மேற்கு மாவட்டம் திருமங்கலம் சட்டமன்ற தொகுதியில் அ.தி.மு.க பொதுச் செயலாளர் எடப்பாடியார் மேற்கொண்ட எழுச்சி பயணத்தின் போது சட்டமன்ற எதிர்கட்சி துணைத் தலைவர், முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் தலைமையில் எழுச்சிப் பயண

வழிநெடுகிலும் பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் திரண்டு வந்து உற்சாக வரவேற்பு கொடுத்தனர்.இதையடுத்து

டி.குன்னத்தூர் அம்மா கோவிலில் அலைகடலென திரண்டிருந்த லட்சக்கணக்கான மக்கள் மத்தியில் எடப்பாடியார் எழுச்சி உரையாற்றினார்.

கழக பொதுச்செயலாளர், முன்னாள் முதலமைச்சர், சட்டமன்ற எதிர்கட்சி தலைவர் எடப்பாடியார் நான்காம் கட்ட சுற்றுப்பயணமாக மதுரை மாவட்டத்தில் தனது எழுச்சி பயணத்தை நேற்று மாலை திருப்பரங்குன்றத்திலிருந்து அதிரடியாக தொடங்கினார். இதனை தொடர்ந்து திருமங்கலம் சட்டமன்ற தொகுதியில் எழுச்சிப் பயணம் மேற்கொண்ட கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடியாருக்கு கப்பலூர் டோல் கேட் துவங்கி திருமங்கலம் நகரம் உள்ளிட்ட பல இடங்கள் வழியாக டி.குன்னத்தூர் அம்மா கோவில் வரையில் சாலையின் இருபுறங்களிலும் சட்டமன்ற எதிர்கட்சி துணைத் தலைவர், முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் ஏற்பாட்டின் பேரில் கழக கொடி தோரணங்கள், வாழை மரங்கள், டிஜிட்டல் பேனர்கள், வரவேற்பு பதாகைகள், கட் அவுட்கள் வைத்தும் தாரை தப்பட்டைகள் மேளதாளங்கள் முழங்கிட அதிர்வெடிகள் வெடித்து வானவேடிக்கைகள் நடத்தி கிரேன்கள் மூலம் ராட்சத மலர் மாலைகள் அணிவித்து வரலாறு காணாத வரவேற்பு அளிக்கப் பட்டது. மேலும் வழி நெடுகில் கரகாட்டம், ஒயிலாட்டம், மயிலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், செண்டை மேளம் மற்றும் பல்வேறு கிராமிய கலை நிகழ்ச்சிகளும், திரளான பெண்கள் பூசணிக்காய்களை ஏந்தி ஆரத்தி எடுத்தும், பிரச்சார பேருந்தின் மீது மலர்களை தூவி வெற்றிக் குலவையிட்டும், விவசாயிகள் தலைக்கு மேல் துண்டை சுழற்றி நடனமாடியும், முக்கிய கோவில்களிலிருந்து பூரண கும்ப மரியாதை செய்து பிரசாதம் வழங்கியும் எடப்பாடியாருக்கு அன்புடன் வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து மக்கள் வெள்ளத்தில் நீந்தியபடி திருமங்கலம் நகருக்கு வருகை தந்த கழக பொதுச் செயலாளர் எடப்பாடியாருக்கு தேவர் திருமகனார் சிலை அருகில் சட்டமன்ற எதிர்கட்சி துணைத் தலைவர் ஆர்.பி.உதயகுமார் வழிகாட்டுதலின் பேரில், திருமங்கலம் நகர் கழகச் செயலாளர் ஜே.டி.விஜயன் தலைமையிலும், முன்னாள் நகர்மன்ற தலைவர் உமா விஜயன், முன்னாள் நகர் மன்ற துணைத் தலைவர் சதீஸ் சண்முகம் முன்னிலையிலும் கழக பொதுச் செயலாளர் எடப்பாடியாருக்கு கட்சி நிர்வாகிகள்,பொதுமக்கள் உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கானோர் எழுச்சியுடன் திரண்டு வந்து விண்ணதிரும்படி கோஷங்களை எழுப்பி மலர்களை தூவி உற்சாக வரவேற்பு அளித்தனர்.இதனை தொடர்ந்து டி.குன்னத்தூரிலுள்ள அம்மா கோவிலுக்கு எழுச்சிப் பயணமாக வருகை தந்த கழக பொதுச் செயலாளர் எடப்பாடியாருக்கு மதுரை புறநகர் மேற்கு மாவட்ட கழகம் மற்றும் கழக அம்மா பேரவை சார்பில் சட்டமன்ற எதிர்கட்சி துணைத் தலைவர், முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் தலைமையில் லட்சக்கணக்கானோர் திரண்டு வந்து மேளதாளங்கள் முழங்கிட, வானவேடிக்கையுடன் எழுச்சிமிகு வரவேற்பு வரவேற்பு அளிக்கப் பட்டது. இந்த வரவேற்பினை அன்போடு ஏற்றுக் கொண்ட எடப்பாடியார் அம்மா கோவிலில் உள்ள இருபெரும் தெய்வங்களான புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர், புரட்சித் தலைவி அம்மா அவர்களது திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அப்போது எடப்பாடியார் வாழ்க, புரட்சித் தமிழர் வாழ்க என கோஷமிட்ட அ.தி.மு.க.வினர் 2026 தேர்தலில் வெற்றி பெற்று எடப்பாடி யாரை முதலமைச்சர் அரியணையில் அமர்த்திடுவோம் என்று சூளுரைத்தனர். இதனை தொடர்ந்து டிஜிட்டல் திரைகள், ராட்சத பேனர்கள், மின்விளக்கு அலங்காரங்கள், கழக கொடி தோரணங்களுடன் இரவினில் பகல் போன்று ஜொலித்த அம்மா கோவில் வளாகத்தில் திரண்டிருந்த லட்சக்கணக்கான பொதுமக்கள் மத்தியில் கழக பொதுச் செயலாளர் எடப்பாடியார் எழுச்சி உரையாற்றினார்.

அதில் குறிப்பாக இன்றைய தி.மு.க. ஆட்சியின் அவலங்களையும், கடந்த அ.தி.மு.க. அரசின் செய்த சாதனைகளை விளக்கி உரை நிகழ்த்திய எடப்பாடி யார் மீண்டும் 2026 ஆண்டில் ஆட்சிக்கு வரும் போது திருமங்கலம் தொகுதி மக்களுக்கு செய்ய வேண்டிய திட்டங்கள் குறித்த அறிக்கையை வெளியிட்டு சிறப்புரையாற்றினார். இதனிடையே திருமங்கலம் தொகுதி டி.குன்னத்தூர் அம்மா கோவிலில் நடைபெற்ற எடப்பாடியாரின் எழுச்சி பயணத்தில் லட்சக்கணக்கான மக்கள் திரண்டு வந்த நிகழ்வு மதுரையின் இரண்டாம் சித்திரை திருவிழா போன்று காணப் பட்டது. இந்த எழுச்சிப் பயணத்தில் கழக இன்னாள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், கழக மாநில நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழக அம்மா பேரவை நிர்வாகிகள், மதுரை புறநகர் மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், நகர ஒன்றிய பேரூர் பகுதி கிளை மற்றும் வார்டு கழகச் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். 2026 ஆண்டில் எடப்பாடியார் தமிழக முதலமைச்சராக வர வேண்டும் என்ற லட்சிய முழக்கத்தோடு லட்சக்கணக்கான மக்கள் பங்கேற்ற இந்த எழுச்சி பயணம் அரசியல் வரலாற்றில் மாபெரும் திருப்பு முனையை ஏற்படுத்தும் வகையில் அமைந்திடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



**மதுரை புறநகர் மேற்கு மாவட்டத்தில் எழுச்சிப்பயணம் மேற்கொண்டு திருமங்கலம் நகருக்கு வருகை தந்த அ.தி.மு.க பொதுச் செயலாளர் எடப்பாடியாருக்கு, முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் வழிகாட்டுதலின் பேரில் நகர் கழகச் செயலாளர் ஜே.டி.விஜயன் தலைமையில் முன்னாள் நகர்மன்ற தலைவர் உமா விஜயன், முன்னாள் நகர்மன்ற துணைத் தலைவர் சதீஷ் சண்முகம் முன்னிலையில் ஆயிரக்கணக்கானோர் திரண்டு வந்து பூங்கொத்து கொடுத்தும், மீனாட்சி அம்மன் திருவுருவப்படம் மற்றும் வெற்றிவாள் வழங்கியும் மலர்களை தூவி எழுச்சிமிகு வரவேற்பளித்தனர்.**

# அழகர்கோவில் மலைப்பகுதியில் பிளாஸ்டிக் கழவுகள் அகற்றும் பணி



**நத்தம்,செப்.02-**

திண்டுக்கல் மாவட்ட வனச்சரகத்திற்குட்பட்ட அழகர்கோவில் பழமுதிர் சோலை பகுதியில் திண்டுக்கல் மாவட்ட வன அலுவலர் ராஜ்குமார் அவர்களின் அறிவுறுத்தலின்படி பிளாஸ்டிக் இல்லாத காடு என்ற தலைப்பில் பிளாஸ்டிக் பொருட்கள் அகற்றும் பணி நடந்தது. இதற்கு அழகர்கோவில் வனச்சரக அலுவலர் சுந்தரவேல் தலைமை தாங்கினார். தொடர்ந்து பள்ளி,கல்லூரி மாணவர்கள், திருக்கோவில் பணியாளர்கள், தன்னார்வலர்கள் மற்றும் அழகர்கோவில் வனச்சரக ஊழியர்கள் இணைந்து மலை உச்சியில் உள்ள ராக்காயி அம்மன் கோவில் முதல் அழகர் கோவில் அடிவாரம் வரை மலைப்பாதையில் இருந்த பிளாஸ்டிக் கழிவுகளை மூன்று குழுக்களாக சென்று அகற்றினர்.பின்னர் சேகரிக்கப்பட்ட கழிவுகள் தூய்மைப் பணியாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# முதுகுளத்தூர் பகுதியில் 1,760 கி. கடத்தல் ரேசன் அரிசி அதிகாரிகளால் பறிமுதல்

**முதுகுளத்தூர்,செப்.02-**



முதுகுளத்தூர் பகுதியில் கடத்திய ரேசன் அரிசியை பரமக்குடி அருகே அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

நேற்று மதியம் 12 மணி அளவில் கடலாடியில் இருந்து முதுகுளத்தூர் வழியாக பரமக்குடியை நோக்கி ரேஷன் அரிசி கடத்தப்படுவதாக வந்த தகவல் அறிந்து முதுகுளத்தூர் வட்ட வழங்கல் அலுவலர் மாரிமுத்து மற்றும் தாலுக என்ஜினீயர் சரவணன் ஆகியோர் பின் தொடர்ந்து சென்றபோது அரிசி கடத்திய நபர்கள் வேகமாக சென்று விட்டனர். இது குறித்து பரமக்குடி குடிமை பொருள் தனி வருவாய் ஆய்வாளர் கார்த்திகேயனுக்கு தகவல் தெரிவித்தனர். பரமக்குடி அதிகாரிகள் வாகனத்தை தேடி சென்ற போது அரிசி கடத்திய நபர்கள் சிவங்கை மாவட்டம் இளையான்குடி குமரக்குறிச்சி அருகே உள்ள கண்மாய் அருகே சுமார் 1760 கிலோ அரிசி (39 சாக்கு பை )கொட்டி சென்றுவிட்டனர் .

அரிசி மூட்டைகளை கைப்பற்றி பரமக்குடி தமிழ் நாடு நுகர் பொருள் வாணிப கிடங்கில் ஒப்படைத்தனர்.

# கப்பலூர் சிட்கோவில் ஆதார் சிறப்பு முகாம் தொடக்கம்

**திருமங்கலம்,செப்.02-**

கப்பலூர் தொழிலதிபர்கள் சங்கம்,மதுரை மெஜஸ்டிக் அரிமா சங்கம் மற்றும் இந்திய தனித்துவ அடையாள ஆணையம் சார்பில் சிட்கோவில் உள்ள கப்பலூர் தொழிலதிபர்கள் சங்க கூட்ட அரங்கினில் 6 நாட்கள் நடைபெறவுள்ள ஆதார் சிறப்பு ஆதார் முகாம் துவங்கியுள்ளது.இந்த முகாமின் துவக்க விழாவிற்கு கப்பலூர் தொழிலதிபர்கள் சங்கத்தின் தலைவர் பி.என்.ரகுநாதராஜா தலைமை வகித்தார்.ஏராளமானோர் கலந்து கொண்ட இந்நிகழ்வினில் மதுரை மாநகர் மத்திய குற்றப்பிரிவு உதவி ஆணையர் எஸ்.எஸ்.வினோதினி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு முகாமினை தொடங்கி வைத்து பேசினார்.

இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தின் மதுரை மேலாளர் கே.ரவிச்சந்திரன்,செயல் மேலாளர் சதீஷ்வாசிமலை ஆகியோர் சிறப்பாளர்களாக கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.இந்நிகழ்வினில் கப்பலூர் தொழிலதிபர்கள் சங்க துணை தலைவர் ஆர்.ராமசாமி, கௌரவ செயலாளர் ஆர்.வாசுதேவன், இணைச் செயலாளர் கே.கார்த்திகேயன், பொருளாளர் எஸ்.இளங்கீரன் மற்றும் மதுரை மெஜஸ்டிக் அரிமா சங்க தலைவர் ஜெ.சரவணன், செயலாளர் டி.சிவராமன், பொருளாளர் வி.ராமசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.நேற்று துவங்கி 6ம் தேதி வரை நடைபெறுகின்ற இந்த ஆதார் சிறப்பு முகாமில் சிட்கோ தொழிலாளர்கள் அவர்களது குடும்பத்தினர் மற்றும் பொதுமக்கள் பங்கேற்று பயனடைந்திடுமாறு கப்பலூர் தொழிலதிபர்கள் சங்கத்தின் தலைவர் பி.என்.ரகுநாதராஜா தெரிவித்தார்.

# கலெக்டர் சுகபுத்ரா தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



**விருதுநகர், செப். 02-**

விருதுநகர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் சுகபுத்ரா தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், இலவச வீட்டுமனைப்பட்டா மற்றும் பட்டா மாறுதல், குடும்ப அட்டை, வேலை வாய்ப்பு, விபத்து நிவாரணம், மாற்றுத்திறனாளிகள், நலிந்தோர் நலத்திட்டம் மற்றும் விதவை உதவித்தொகை, திருமண உதவித்தொகை, முதியோர் உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக மனுக்கள் பெறப்பட்டது. மேலும், மாற்றுத்திறனாளிகள் மற்றும் மூத்தகுடி மக்களுக்காக அமைக்கப்பட்டுள்ள சிறப்பு அமருமிடத்திற்குச் சென்று, மாவட்ட ஆட்சித்தலைவர் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார். இக்கூட்டத்தில், திருச்சுழி ஊராட்சி ஒன்றியம், வடக்குநத்தம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் சத்துணவு சமையலராக பணிபுரிந்த எம்.சுகுமாரி என்பவர் பணிக்காலத்தில் மரணமடைந்ததை தொடர்ந்து, அவரின் வாரிசுதாரரான மகள் தமிழரசி என்பவருக்கு திருச்சுழி ஊராட்சி ஒன்றியத்தில் காலியாக உள்ள கீழப்பட்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் சத்துணவு அமைப்பாளர் பணியிடத்திற்கு கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணையினையும், பின்னர் ராஜபாளையம் வட்டம், சுந்தரராஜபுரம் கிராமத்தைச் சேர்ந்த ஆனந்தகுமார் என்பவர் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டு உயிரிழந்ததால் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ், ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் அவரது வாரிசுதாரரான தாயார் சமுத்திரம் என்பவருக்கு ஓய்வூதியத்திற்கான ஆணையினையும்.

ராஜபாளையம் வட்டம், மங்காபுரம் கிராமத்தைச் சேர்ந்த (லேட்) கருப்பசாமி என்பவர் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டு உயிரிழந்ததால் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ், ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் அவரது வாரிசுதாரரான திருமதி குருவம்மாள் என்பவருக்கு ஓய்வூதியத்திற்கான ஆணை மற்றும் இலவச வீட்டுமனை பட்டாவினையும், காரியாபட்டி வட்டம், கீழத்துலுக்கன்குளம் கிராமத்தைச் சேர்ந்த (லேட்)ராஜேந்திரன் என்பவர் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டு உயிரிழந்ததால் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் அவரது வாரிசுதாரரான உடையக்காள் என்பவருக்கு ஓய்வூதியமும் மற்றொரு வாரிசுதாரரான துரைசாமி என்பவருக்கு இலவச வீட்டு மனைப்பட்டாவினையும் மாவட்ட கலெக்டர் சுகபுத்ரா வழங்கினார். இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி பிரதௌஸ் பாத்திமா, தனித்துணை கலெக்டர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திரு.காளிமுத்து, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திரு.பாலாஜி, அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கென்ஸ்டார், இந்தியாவின் முதல் 5-ஸ்டார் மதிப்பீடு பெற்ற மின் சிக்கன ஏர் கூலர்களை அறிமுகப்படுத்துகிறது

**பாண்டிச்சேரி, செப் 02-**

இந்தியாவின் முன்னணி வீட்டு உபயோக சாதன உற்பத்தியாளர்களில் ஒருவரான கென்ஸ்டார், இந்தியாவின் முதல் 5-ஸ்டார் பிஇஇ மதிப்பீடு பெற்ற மின் சிக்கன ஏர் கூலர்களின் புதிய பவர் ஆப் 5 அணிவரிசையை குருகிராமில் அறிமுகப் படுத்தியுள்ளது. இக்கூலர்கள் 5 வருட உத்தரவாதத்துடன் வருவதால், வாடிக்கையாளர்களுக்கு நீடித்த நம்பிக்கையையும் மனநிம்மதியையும் வழங்குகின்றன.இப்புதிய ஏர் கூலர்களின் ரேஞ்ச், பிஎல்டிசி மேக்ஸ் தொழில்நுட்பம், குவாட்ரா ஃப்ளோ டெக்னாலஜி, ஹைட்ரோ டென்ஸ் மெஷ் தேன்கூடு கூலிங் பேட்கள் மற்றும் ஹெவி டியூட்டி டபுள் பால் பேரிங் மோட்டார் ஆகிய நவீன அம்சங்களை உள்ளடக்கியது.

இது சமரசமற்ற குளிரூட்டும் செயல்திறன் மற்றும் மிகச் சிறந்த மின் சிக்கனத்தை ஒரே நேரத்தில் வழங்கும் திறனை கொண்டது.இது குறித்து கென்ஸ்டாரின் தலைமை நிர்வாக அதிகாரி சுனில் ஜெயின் தெரிவித்தார்.இந்த பிஇஇ 5-ஸ்டார் மதிப்பீடு பெற்ற கூலர்கள் கென்ஸ்டாரின் நிலைத்தன்மை மற்றும் தரத்தைப் பற்றிய வலுவான அர்ப்பணிப்பின் சான்றாக இருக்கின்றன. எங்கள் தயாரிப்புகள் நம் வாடிக்கையாளர்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் நோக்கத்துடன் வடிவமைக்கப்படுகின்றன.மேலும்கென்ஸ்டாரின் நேஷனல் சேல்ஸ் ஹெட் சந்தோஷ் பாம்ரே கூறினார்.இந்த உயர் செயல்திறன் கூலர்கள், நமது வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தும். இது இந்திய சந்தையில் புதிய தரநிலையை அமைக்கக்கூடிய ஓர் அற்புத முன்னேற்றம்.

# புதுச்சேரியில் பியூர் இவி காலடி எடுத்து வைத்து, மின்சார வாகனப் புரட்சியை வேகப்படுத்துகிறது

**புதுச்சேரி, செப் 02-**

இந்தியாவின் முன்னணி மின்சார இருசக்கர வாகன உற்பத்தியாளர்களில் ஒருவரான பியூர் இவி, புதுச்சேரியில் தனது புதிய ஷோரூமின் பிரம்மாண்ட துவக்கத்தை பெருமையுடன் அறிவித்துள்ளது. தென்னிந்தியாவில் தனது இருப்பைப் பலப்படுத்தும் பியூரின் இலக்கை நோக்கி எடுக்கப்பட்ட முக்கியமான ஒரு முன்னேற்றமாக இந்த விரிவாக்கம் அமைகிறது. டோர் நம்பர் 56, கே.ஆர். காம்ப்ளெக்ஸ், 100 அடி சாலை, சுந்தராஜா நகர், ஐ.ஓ.பி பிராந்திய அலுவலகம் அருகில், புதுச்சேரி ஆகிய இடத்தில் அமைந்துள்ள இந்த ஷோரூமில் இபுளூட்டோ 7ஜி மேக்ஸ்மற்றும் இ-ட்ரிஸ்ட் எக்ஸ்போன்ற பிரபல மின்சார இருசக்கர வாகனங்களைக் கொண்ட பியூர் இவியின் முழுமையான வரிசை காட்சிப்படுத்தப்படும். புதுச்சேரி மக்களுக்கு ஒப்பற்ற மின்சார ஓட்ட அனுபவத்தை பியூர் இவி வழங்கத் தயாராக உள்ளது.புதிய ஷோரூமில் நவீன மின்சார ஸ்கூட்டர்கள் மற்றும் பைக் களுடன், வீடுகள் மற்றும் வணிகங்களுக்கு சுத்தமான மின்சாரத் தீர்வுகளை வழங்கும் பியூர் பவர் என்ற எரிசக்தி சேமிப்பு தயாரிப்புகளும் காட்சிப்படுத்தப்படும். இந்த ஷோரூம் துவக்கம், இந்தியா முழுவதும் தனது வலையமைப்பை விரிவாக்கும் பியூர் இவியின் துரிதமான வளர்ச்சி திட்டத்தின் சான்றாகும். உள்ளூர் ஆராய்ச்சி மற்றும் உற்பத்திக்கு முக்கியத்துவம் அளித்து, புதுமைகளை முன்னெடுத்து, வாடிக்கையாளர்கள் நிலையான தேர்வுகளைச் செய்ய ஊக்குவிப்பதில் பியூர் இவி அர்ப்பணிப்புடன் செயல்படுகிறது.

அடுத்த 30 மாதங்களில் 250 புதிய டீலர்ஷிப்புகளைத் துவக்கி, நாடு முழுவதும் 320-க்கும் மேற்பட்ட ஷோரூம்களை உருவாக்குவதே பியூரின் விரிவான வளர்ச்சி திட்டம். நீண்ட தூர மின்சார வாகனங்களுக்கு அதிகரித்து வரும் கோரிக்கை, நிறுவனங்கள் மற்றும் பி2பி துறைகளின் ஏற்றுக்கொள்வது, அரசின் ஆதரவு கொள்கைகள் மற்றும் மக்களின் விழிப்புணர்வு ஆகியவை இந்த வளர்ச்சியை முன்னெடுக்கின்றன.புதுச்சேரியில் புதிய ஷோரூம் துவக்கத்துடன், சுத்தமான போக்குவரத்து மற்றும் இந்தியாவின் எரிசக்தி சுயமரியாதையை உறுதிப்படுத்தும் பணியில் பியூர் இவி முன்னணி பங்கு வகிக்கிறது.




மதுரை புறநகர் மேற்கு மாவட்டம் திருமங்கலம் நகருக்கு எழுச்சி பயணமாக வந்த கழக பொதுச் செயலாளர் எடப்பாடியாருக்கு பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டு வந்து மலர்களை தூவி உற்சாக வரவேற்பளித்தனர். அப்போது பிரச்சார வாகனத்தில் முன்னாள் அமைச்சர்கள் ஆர்.பி.உதயகுமார், சி.விஜயபாஸ்கர், ஆர்.காமராஜ், மதுரை கிழக்கு மாவட்டச் செயலாளர் வி.வி.ராஜன் செல்லப்பா ஆகியோர் உள்ளனர்.



மதுரைக்கு எழுச்சி பயணம் மேற்கொள்ள வந்த அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்ற மாநில துணை செயலாளர் எம்.எஸ்.பாண்டியன் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்.

# கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் ராமநாதபுரம் மாவட்டத்தில் மக்கள் குறைதீர் கூட்டம்



**ராமநாதபுரம்,செப்.02-**

ராமநாதபுரத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் சிம்ரன்ஜீத்சிங் காலோன் தலைமையில் நடந்தது.

ராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் பொதுமக்களிடம் பல்வேறு கோரிக்கைகள் குறித்த 310 மனுக்கள் பெற்று மனுதாரரின் முன்னிலையில் மனுக்களை விசாரணை செய்து தொடர்புடைய அலுவலர்களிடம் மனுக்களை வழங்கி உரிய நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். இக்கூட்டத்தில் வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித் தொகை, தனிநபர் வீடு வழங்கும் திட்டம், குடிநீர் இணைப்பு வழங்குதல் உள்ளிட்டவை தொடர்பாக பொதுமக்கள் மனுக்களை அளித்தனர். மாவட்ட கலெக்டர் தெரிவிக்கையில், ஒவ்வொரு வாரமும் பொதுமக்களிடம் பெறக்கூடிய மனுக்களுக்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டு ஒருமாத காலத்திற்குள் மனுதாரர்களுக்கு உரிய தீர்வு வழங்கிட வேண்டும் எனவும், தீர்வு வழங்க முடியாத மனுக்கள் நிலை குறித்து மனுதாரர்களிடம் அலுவலர்கள் எடுத்துரைக்க வேண்டும் எனவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும் பொதுமக்கள் வழங்கும் மனுக்களுக்கு துறைசார்ந்த அலுவலர்கள் சிறப்பு கவனம் எடுத்து செயல்பட வேண்டுமென தெரிவித்தார்.

தொடர்ந்து தமிழகம் முழுவதும் 2211 அரசு பள்ளிகளில் நூற்றாண்டு திருவிழா நடைபெற்றதையொட்டி, ராமநாதபுரம் மாவட்டத்தில் 21 அரசு பள்ளிகளில் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. இந்த நூற்றாண்டு விழாவில் மண்டபம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி ராமேஸ்வரம் எண்:1ல் முன்னால் மாணவர்கள், ஊர் பொதுமக்கள் மற்றும் பெற்றோர்கள் அதிகளவில் பங்கேற்று சிறப்பாக கொண்டாடப்பட்டதையொட்டி, இப் பள்ளி முதலாம் இடமாக தேர்வு செய்யப்பட்டு அதற்கான பாராட்டுச்சான்று மற்றும் நினைவு பரிசினை மாவட்ட கலெக்டர் சிம்ரன் ஜீத் சிங் காலோன் தலைமையாசிரியரிடம் வழங்கி பாராட்டினார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.கோவிந்தராஜலு, மாவட்ட சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் கிருஷ்ணகுமாரி, மாவட்ட வழங்கல் அலுவலர் மணிமாறன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) பிரின்ஸ் ஆரோக்கிய ராஜ் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# 2025-இல் இந்தியர்கள் கலாச்சார சுற்றுலாவை அதிகம் தேர்வு செய்கிறார்கள்: ஸ்கைஸ்கேனர் தகவல்

**சென்னை, செப் 02-**

2025-ல், இந்திய பயணிகள் கலாச்சார அனுபவங்களை மையமாகக் கொண்டு பயணத் திட்டங்களை அமைத்துக் கொள்கிறனர் என்று ஸ்கைஸ்கேனர் வெளியிட்ட கலாச்சார சுற்றுலா அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 82% இந்தியர்கள் பாரம்பரியம் மற்றும் உள்ளூர் விழாக்களை அனுபவிக்க விரும்புகிறார்கள்; இதில் மில்லெனியல்ஸ் (84%) மற்றும் ஜெனரேஷன் இசட் (80%) பெருமளவில் கலந்துகொள்கின்றனர். 93% பேர் பிரபலமல்லாத இடங்களுக்குச் செல்ல தயாராக இருக்கிறார்கள் – ஆனால் உண்மையான பாரம்பரிய அனுபவம் கிடைக்கவேண்டும் என்பதே அவர்களின் விருப்பம். கொல்கத்தாவின் துர்கா பூஜை, பர்சானாவின் லத்மார் ஹோலி, கேரளாவின் ஓணம் ஆகியவை மிக அதிக ஆர்வத்தைப் பெற்ற விழாக்களாக உள்ளன. மேலும், 76% பேர் பாரம்பரிய நிகழ்வுகளை முன்னிட்டு பயணத் திட்டங்களை மாற்றியுள்ளனர். வாராணசி, ஜெய்ப்பூர், ஹம்பி போன்ற வரலாற்று தளங்கள் மற்றும் கேரளா, ராஜஸ்தான் போன்ற மாநிலங்கள் கலாச்சார ஹாட்ஸ்பாட்களாக மாறியுள்ளன.

இந்திய பயணிகள் இப்போது பார்வையிலிருந்து அனுபவத்திற்கு மாறியுள்ளனர் என்று ஸ்கைஸ்கேனர் நிறுவனத்தின் டிராவல் டிரெண்ட்ஸ் நிபுணர் நீல் கோஷ் கூறுகிறார். உணவுப் பயணங்கள், கிராமிய கலாச்சாரம், பாதுகாப்பு, செலவுப் பரிசீலனை ஆகியவை முக்கிய தீர்மான காரணிகள் ஆகும். இந்தப் புதிய போக்கு, இந்திய சுற்றுலாத்துறையின் எதிர்காலத்தை வடிவமைக்கிறது என்று டாக்டர் அதிதி ராவத், பஹ்லே இந்தியா ஃபவுண்டேஷனின் இணை நிபுணர் தெரிவிக்கிறார்.

# ஆசிரியர்கள் பணியில் தொடர, பதவி உயர்வுக்கு 'டெட்' தேர்வு கட்டாயம்

## சுப்ரீம் கோர்ட் அதிரடி தீர்ப்பு

**புதுடெல்லி, செப். 02-**

ஆசிரியர் பணியில் தொடர, பதவி உயர்வு பெற தகுதித் தேர்வு கட்டாயம் என்று சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது. டெட் தேர்வு எழுத விரும்பாதோர் வேலையை விட்டு வெளியேறலாம். அல்லது சலுகைகளுடன் கட்டாய ஓய்வு பெறலாம் என்றும் சுப்ரீம் கோர்ட் கூறியுள்ளது.

அரசு உதவி பெறும் தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் சிறுபான்மை கல்வி நிறுவனங்களுக்கு ஆசிரியர் தகுதி தேர்வு கட்டாயமா ? என்பது தொடர்பான வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் விசாரணை செய்யப்பட்டது. நீதிபதி தீபான்கர் தத்தா தலைமையிலான அமர்வு வழக்கை விசாரித்தது. இந்த விசாரணையின போது, அரசு உதவி பெறும் தனியார் கல்வி நிறுவனங்கள், சிறுபான்மை கல்வி நிறுவனங்களுக்கு ஆசிரியர் தகுதி தேர்வில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும் அதை கட்டாயப்படுத்தக் கூடாது என்று வாதம் வைக்கப்பட்டது. குறிப்பாக சிறுபான்மை கல்வி நிறுவனங்களை பொறுத்த வரைக்கும் அரசியல் சாசனம் அவர்களுக்கு வழங்கி இருக்கக்கூடிய உரிமையின் அடிப்படையில் செயல்பட அனுமதிக்க வேண்டும் என்று வாதிடப்பட்டது அதேபோல ஓய்வு பெறக்கூடிய நிலையில் இருக்கும் ஆசிரியர்கள் மற்றும் தகுதி தேர்வு கட்டாயப்படுத்துவதற்கு முன்பாக பணியில் சேர்ந்து பணியாற்றும் ஆசிரியர்களை பொறுத்த வரைக்கும் டெட் தேர்ச்சி கட்டாயம் என்று ஆக்கப்படுவதனால் பாதிப்படைவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் இந்த வழக்கின் விசாரணை முடிவடைந்து தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டிருந்தது. இதனைதொடர்ந்து நீதிபதி திபான்கர் தாத்தா தலைமையிலான அமர்வு ஆசிரியர் தகுதி தேர்வு தொடர்பான வழக்கில் நேற்று தீர்ப்பு வழங்கியது.

அந்த தீர்ப்பில், அரசு உதவிபெறும் பள்ளிகளில் ஆசிரியர்கள் பணியில் தொடர அல்லது பதவி உயர்வு பெற ஆசிரியர் தகுதித் தேர்வு கட்டாயம் என்று தீர்ப்பளித்தது. இருப்பினும் பல்வேறு சூழல்களை கருத்தில் கொண்டு, ஓய்வு பெறும் வயதை எட்ட 5 ஆண்டுகள் மட்டுமே உள்ள ஆசிரியர்கள் பணியில் தொடரலாம் என்றும் அதேவேளையில், ஓய்வு பெற 5 ஆண்டுகளுக்கு அதிகமாக காலம் உள்ள பணியாற்றும் ஆசிரியர்கள் தாங்கள் தொடர்ந்து பணியாற்ற டெட் தேர்வில் தகுதி பெற வேண்டும்.

இல்லையெனில் அவர்கள் தங்களது வேலையை விட்டு வெளியேறலாம் அல்லது ஓய்வு பெறும்போது கிடைக்கும் இறுதி சலுகைகளை பெற்றுகொண்டு கட்டாய ஓய்வு பெறலாம் என நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். அதேவேளையில், அரசு உதவி பெறும் சிறுபான்மை கல்வி நிறுவனங்களில் டெட் தேர்வை அரசு கட்டாயப்படுத்த முடியுமா?, அது அவர்களின் உரிமைகளை பாதிக்குமா? என்ற அம்சங்களை குறித்து விசாரிப்பதற்காக இந்த வழக்கை உயர் அமர்வுக்கு மாற்ற வேண்டும் என சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதிக்கு பரிந்துரைப்பதாகவும் தங்களது தீர்ப்பில் நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

# நத்தத்தில் இந்து முன்னணி சார்பில் விநாயகர் சிலைகள் ஊர்வலம்



**நத்தம், செப். 02-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம்-கோவில்பட்டியில் இருந்து இந்து முன்னணி சார்பில் நேற்று மாலையில் விநாயகர் சிலைகள் ஊர்வலம் நடந்தது.இதற்கு மாவட்ட செயலாளர் மணிமாறன் தலைமை தாங்கினார்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சதீஷ்,மாவட்ட செயற்குழு உறுப்பினர் செந்தில்வேலு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.நகர தலைவர் வீரமணி வரவேற்றார்.இதில் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த விநாயகர் சிலைகள் பூமாலைகளால் அலங்கரிக்கபட்ட வாகனங்களில் ஒலிபெருக்கி ஓசையுடன் மேளதாளம் முழங்க, ஆட்டம் பாட்டத்துடன், நத்தம்- கோவில்பட்டி ஆஞ்சநேயர் கோவிலில் தொடங்கிய இந்த விநாயகர் சிலைகள் ஊர்வலம்

தர்பார் நகர், பஸ்நிலையம், மூன்றுலாந்தர், அவுட்டர் சாலை, வழியாக அம்மன் குளத்தை சென்றடைந்தது. பின்னர் அங்கு விநாயகர் சிலைகளுக்கு பூஜைகள் தீபாராதனைக்கு பின்னர் அம்மன் குளத்தில் போய் கரைக்கபட்டது. இதில் சுமார் 30-க்கும் மேற்பட்ட சிலைகள், ஊர்வலத்தில் பங்கேற்றன.இதில் இந்து முன்னணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். பாதுகாப்பு ஏற்பாடுகளை மாவட்ட போலீஸ் துணை சூப்பிரண்டு சங்கர்,இன்ஸ்பெக்டர் சிவராமகிருஷ்ணன் மேற்பார்வையில் 100-க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.இதில் நத்தம் சுற்று வட்டாரங்களிலிருந்து ஏராளமானவர்கள் வந்திருந்து ஆங்காங்கே விநாயகரை தரிசனம் செய்தனர்.

# ஓய்வூதியதாரர்கள் புதிய மருத்துவ காப்பீட்டு திட்ட குறைதீர் கூட்டம்: கலெக்டர் சுகபுத்ரா


**விருதுநகர், செப். 02-**

ஓய்வூதியதாரர்கள் புதிய மருத்துவ காப்பீட்டு திட்ட குறைதீர் கூட்டம் மாவட்ட கலெக்டர் சுகபுத்ரா தலைமையில் நடந்தது. புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவ செலவினத் தொகையை திரும்பக் கோரும் இனங்களின் மீது தீர்வு காணும் பொருட்டும், மனுக்கள் மற்றும் அசல் ஆவணங்கள் விடுபட்ட மனுக்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும், அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் தொடர்பான குறைதீர்கூட்டம் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக மக்கள் குறைதீர்க்கும் கூட்ட அரங்கில் 18.09.2025 அன்று முற்பகல் 11 மணியளவில் நடைபெற உள்ளது.

அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் புதிய மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் விண்ணப்பித்து அதன் மீது விருதுநகர், இணை இயக்குநர், மாவட்ட மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் மற்றும் குடும்ப நலம்; மற்றும் இன்சூரன்ஸ் நிறுவனத்தால் ஆவணங்கள் கோரப்பட்டிருக்கும் பட்சத்தில் மேற்படி கூட்டத்தில் தகுந்த ஆவணங்களுடன் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் சுகபுத்ரா தெரிவித்துள்ளார்.

# தங்கம் விலை மீண்டும் புதிய உச்சம்: 1 கிராம் ரூ.10 ஆயிரத்தைநெருங்கியது

**சென்னை, செப். 02-**



சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று (திங்கள் கிழமை) வரலாறு காணாத புதிய உச்சத்தை தொட்டுள்ளது. ஒரு கிராம் ரூ.10,000-ஐ நெருங்கியுள்ளது. சென்னையில் நேற்று (செப்.1) 22 காரட் ஆபரணத் தங்கம் கிராமுக்கு ரூ.85 உயர்ந்து ஒரு கிராம் ரூ.9,705-க்கு விற்பனையானது. பவுனுக்கு ரூ.680 உயர்ந்து ஒரு பவுன் ரூ.77,640-க்கு விற்பனையானது. இது நகை வாங்குவோர் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. திருமண சீசன், அடுத்த நவராத்திரி, தீபாவளி எனப் பண்டிகை காலமும் வரும் என்பதாலும், சர்வதேச வர்த்தக நிலவரத்தாலும் தங்கம் விலை குறைய வாய்ப்பில்லை என்று நிபுணர்கள் கணிக்கின்றனர். தங்கம் விலை சர்வதேச அளவிலான பொருளாதாரம் மற்றும் சந்தை நிலவரத்துக்கு ஏற்பவே நிர்ணயமாகிறது. அந்த வகையில், அமெரிக்கா இந்தியா மீது 50 சதவீத வரி விதித்துள்ள நிலையில் அதன் தாக்கம் இந்திய வர்த்தக துறையில் பல்வேறு தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

அதன்படி, சென்னையில் நேற்று (செப்.1) 22 காரட் ஆபரணத் தங்கம் கிராமுக்கு ரூ.85 உயர்ந்து ஒரு கிராம் ரூ.9,705-க்கு விற்பனையானது. பவுனுக்கு ரூ.680 உயர்ந்து ஒரு பவுன் ரூ.77,640-க்கு விற்பனையானது. தங்கம் விலையை தொடர்ந்து வெள்ளி விலையும் அதிரடியாக உயர்ந்து விற்பனையானது. கிராமுக்கு ரூ.2-ம், கிலோவுக்கு ரூ.2 ஆயிரமும் உயர்ந்து, ஒரு கிராம் ரூ.136-க்கும், ஒரு கிலோ ரூ.1 லட்சத்து 36 ஆயிரத்துக்கும் விற்பனையானது. இதன் மூலம் வெள்ளி விலையும் புதிய உச்சத்தை தொட்டுள்ளது.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்

# ஜெர்மனியின் 3 நிறுவனங்களுடன் ரூ.3,201 கோடி முதலீட்டிற்கு ஒப்பந்தம்

**கொலோன், செப். 02-**

தமிழ்நாட்டிற்கு புதிய முதலீடுகளை ஈர்த்திடும் வகையில் ஜெர்மனி நாட்டின் மூன்று நிறுவனங்களுடன் 3201 கோடி ரூபாய் முதலீட்டில் சுமார் 6250 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

**ஜெர்மன், இங்கிலாந்து....**

இதுகுறித்து தமிழக அரசு சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தமிழ்நாட்டினை, 2030-ம் ஆண்டிற்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயர்த்திட வேண்டும் என்ற இலக்கினை அடைந்திடவும், அதிக முதலீடுகளை ஈர்த்திடவும், தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கிடவும் தமிழ்நாடு அரசு பல்வேறு முன்னெடுப்புகளை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில், தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்த்திட அரசு முறை பயணமாக ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கு தமிழ்நாடு முதல்வர் 30.8.2025 அன்று சென்னையிலிருந்து புறப்பட்டுச் சென்றார்.

**உற்சாக வரவேற்பு...**

ஜெர்மனி நாட்டின் டசெல்டோர்ஃப் சர்வதேச விமான நிலையம் சென்றடைந்த முதல்வர் மு.க.ஸ்டாலினை இந்தியத் தூதரகத்தின் பொறுப்பாளர் அபிஷேக் துபே உள்ளிட்ட அலுவலர்கள் அன்புடன் வரவேற்றனர். மேலும், ஜெர்மனி வாழ் தமிழர்களும் முதல்வர் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். தமிழ்நாடு முதல்வர் 31.8.2025 அன்று ஜெர்மனி நாட்டின் கொலோன் நகரில் நடைபெற்ற மாபெரும் தமிழ்க் கனவு ஜெர்மனி வாழ் தமிழர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

**6250 நபர்களுக்கு...**

அதன் தொடர்ச்சியாக, நேற்று (1.9.2025) டசெல்டோர்ஃப் நகரில் நார் பிரெம்ஸ், நார்டெக்ஸ் குழுமம், இ.பி.எம்.-பாப்ஸ்ட் ஆகிய நிறுவனங்களுடன் 3201 கோடி ரூபாய் முதலீட்டில் சுமார் 6250 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் தமிழ்நாடு முதல்வர் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், தமிழ்நாடு முதல்வர் , பி.எம்.டபுள்யூ குழும நிறுவன உயர் அலுவலர்களுடன் தமிழ்நாட்டில் அந்நிறுவனத்தின் விரிவாக்கப் பணிகள் மேற்கொள்வது குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

**காஞ்சிபுரத்தில்...**

ஜெர்மனி நாட்டின், முனிச் நகரைத் தலைமையகமாக கொண்ட நார் பிரெம்ஸ் நிறுவனம், தமிழ்நாட்டில் காஞ்சிபுரம் மற்றும் சென்னையில் 2000 கோடி ரூபாய் முதலீட்டில் சுமார் 3500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில், ரயில்வே கதவுகள் மற்றும் பிரேக்கிங் அமைப்புகளுக்கான அதிநவீன வசதியை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இத்திட்டம் தமிழ்நாட்டின் வேகமாக வளர்ந்து வரும் ரயில்வே கூறுகள் மற்றும் மேம்பட்ட பொறியியல் சுற்றுச்சூழல் அமைப்பை மேலும் வலுப்படுத்தும்.

**ரூ.1000 கோடி முதலீடு...**

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அதன் தற்போதைய ஆலையை விரிவுபடுத்தும் வகையில் 1000 கோடி ரூபாய் முதலீட்டில் சுமார் 2,500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த விரிவாக்கம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி மற்றும் பசுமை தொழில்மயமாக்கலில் தமிழ்நாட்டின் தலைமையை வலுப்படுத்துகிறது.

**201 கோடி ரூபாய்....**

இந்நிறுவனம் சென்னையில் அதன் உலகளாவிய திறன் மையத்தை விரிவுபடுத்தவும், தமிழ்நாட்டில் அதன் உற்பத்தியை அடுத்த 5 ஆண்டுகளில் 201 கோடி ரூபாய் முதலீட்டில் விரிவுபடுத்தவும், சுமார் 250 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையிலும் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இ.பி.எம்.-பாப்ஸ்ட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அதுல் திரிபாதி கையெழுத்திட்டார். இவ்வாறு தமிழக அரசு சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மதுரைக்கு எழுச்சி பயணம் மேற்கொள்ள வந்த அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிச்சாமிக்கு மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட அ.தி.மு.க. செயலாளர் வி.வி.ராஜன் செல்லப்பா எம்.எல்.ஏ. மாலை அணிவித்து வரவேற்றார். அருகில் முன்னாள் அமைச்சர்கள் செல்லூர் கே.ராஜூ, பா.வளர்மதி, ஆர்.பி.உதயகுமார் மற்றும் டாக்டர் சரவணன், வி.வி.ஆர்.ராஜ்சத்யன், வக்கீல் ரமேஷ் ஆகியோர் உள்ளனர்

## பண்டிகை ஷாப்பிங் கொண்டாட்டத்தில் ஷாப்ஸி

**சென்னை, செப் 02-**

வரவிருக்கும் பண்டிகைக் காலத்திற்கு பாரதம் தயாராகி வரும் நிலையில், ஷாப்ஸி பை ஃபிளிப்கார்ட் அதன் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட ஷாப்பிங் கொண்டாட்டத்தையும் ஆண்டின் மிகப்பெரிய விற்பனையையும் கொண்ட கிராண்ட் ஷாப்ஸி மேளாவை மீண்டும் கொண்டுவருகிறது.

ஷாப்சி மற்றும் பிளிப்கார்ட் மார்க்கெட்பிளேஸின் வணிகத் தலைவர் கபில் திராணி கூறினார், விரிவான தேர்வுகளுடன் ஒப்பிடமுடியாத மலிவு விலையை இணைக்க வடிவமைக்கப்பட்ட ஜி.எஸ்.எம், குடும்பங்கள் சமரசம் இல்லாமல் கொண்டாட உதவுகிறது. அதே நேரத்தில் விற்பனையாளர்கள் அடுக்கு 2, 3 மற்றும் 4 நகரங்களில் மில்லியன் கணக்கான புதிய வாடிக்கையாளர்களை அடைய ஒரு சக்தி வாய்ந்த தளத்தை வழங்குகிறது. இந்த பதிப்பு பண்டிகை ஷாப்பிங்கை மிகவும் மகிழ்ச்சியாகவும், உள்ளடக்கியதாகவும், உண்மையிலேயே மதிப்பு சார்ந்ததாகவும் மாற்றும் என்று நாங்கள் நம்புகிறோம் " என்று கூறினார்.

ஷாப்சியின் ஆர்வம் அதிகரித்துள்ளதாலும், பண்டிகைக் காலத்தில் தங்கள் அன்புக்குரியவர்களை மகிழ்விக்க விரும்பும் வாடிக்கையாளர்கள் இருப்பதாலும், இந்தியா முழுவதும் உள்ள குடும்பங்கள் பட்ஜெட்டுக்குள் ஷாப்பிங் செய்ய ஷாப்சி உதவுகிறது. இந்த ஆண்டு, ஃபேஷன், வாழ்க்கை முறை, வீடு மற்றும் அழகு என பல்வேறு பிரிவுகளில் 1 கோடிக்கும் மேற்பட்ட தயாரிப்புகளை ஜி.எஸ்.எம் கொண்டு வருகிறது - மதிப்பு உணர்வுள்ள வாங்குபவர்களை மகிழ்விப்பதற்காக சிந்தனையுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. பொருந்தக்கூடிய விலைகளுடன் விதிவிலக்கான மதிப்பை ஜி.எஸ்.எம் வழங்கும், இது பண்டிகை ஷாப்பிங்கை முன்னெப்போதையும் விட அதிக பலனளிக்கும்.

## ஆர்தா செலக்ட் ஃபண்ட்ஸ் பங்குகளை வாங்குவதில் முதலீட்டாளர்கள் ஆர்வம்

**கோவை, செப் 02-**

ஆர்தா இந்தியா வென்ச்சர்ஸ் நிறுவனம் வெற்றியாளர்களுக்கு மட்டும் என்னும் ஆர்தா செலக்ட் ஃபண்ட் பங்குகள் விற்பனை நிறைவு பெற்றதாக இன்று அறிவித்தது. குறிப்பிட்ட இலக்கான ரூ.330 கோடியை கடந்து 131 சதவீதம் அதிகரித்து இந்த பங்குகள் மீது முதலீட்டாளர்கள் ரூ.432 கோடியை முதலீடு செய்துள்ளதாக இந்நிறுவனம் கூறியுள்ளது. இதன் காரணமாக இதன் நிர்வாகத்தின் கீழ் உள்ள சொத்து மதிப்பானது ரூ.1200 கோடியை கடந்து மைல் கல் சாதனை படைத்துள்ளது.ஆர்தா வென்ச்சர் பண்ட் I, ஆர்தா கான்டினூம் ஃபண்ட் மற்றும் விரைவில் தொடங்கப்படவுள்ள ஏவிஎப் II ஆகியவற்றில் ஆர்தாவின் தற்போதைய போர்ட்போலியோவான 135க்கும் மேற்பட்ட நிறுவனங்களில் இருந்து சிறந்த 15% செயல்திறன் கொண்ட நிறுவனங்களில் ஆர்தா செலக்ட் ஃபண்ட் மூலம் திரட்டிய நிதியை இந்நிறுவனம்முதலீடு செய்ய உள்ளது. இந்த நிதி அடுத்த நான்கு ஆண்டுகளில் 12–14 வெற்றியாளர் நிறுவனங்களுக்கு அதன் வளர்ச்சியை துரிதப்படுத்த, சந்தை வரம்பை விரிவுபடுத்தவும் தலா ரூ.20 கோடியை முதலீடு செய்யும். இந்நிறுவனம் ஏற்கனவே முதலீடு செய்த 33 நிறுவனங்கள் இன்று வரை சிறப்பான வளர்ச்சியை கண்டு வருகின்றன. இந்தியாவில் பல்வேறு நிறுவனங்கள் மூலதனம் மற்றும் செயல்பாட்டு ஆதரவு இல்லாததால் முடங்கிக் கிடக்கின்றன என்பதை கருத்தில் கொண்டு அதைப் போக்கும் வகையில் இந்த ஃபண்ட் திட்டத்தை ஆர்தா இந்தியா வென்ச்சர்ஸ் வெளியிட்டுள்ளது. இது குறித்து ஆர்தா வென்ச்சர் பண்ட் மற்றும் ஆர்தா செலக்ட் ஃபண்ட்டின் நிர்வாக பங்குதாரர் அனிருத் ஏ.தமானி கூறுகையில், எங்களின் மிகவும் நம்பிக்கைக்குரிய நிறுவனங்களில் அந்த நிறுவனங்களின் விரிவாக்கப் பணிக்காக நாங்கள் இந்த நிதியை முதலீடு செய்ய இருக்கிறோம். இந்தியாவில் நம்பிக்கைக்குரிய முயற்சிகள் ஏராளமாக உள்ளன.ஆனால் இதில் பெரும்பாலானவை மூலதனம் காரணமாக முடங்கிக் கிடக்கின்றன. அதைப் போக்கும் வகையில் இந்த நிதி பயன்படுத்தப்படும். நிறுவனர் உரிமையையும் கவனத்தையும் பாதுகாக்கும் அதே வேளையில், உலகளவில் போட்டியிட எங்கள் வெற்றியாளர்கள் நிறுவனங்களுக்கு உத்வேகத்தையும், மூலதன வழிகாட்டுதல் மற்றும் செயல்பாட்டு ஆதரவு ஆகியவற்றையும் நாங்கள் வழங்க தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்தார்.ஆர்தா செலக்ட் ஃபண்ட்டில் இந்திய குழும அலுவலகங்கள் மற்றும் மிக அதிக நிகர மதிப்புள்ள தனிநபர்கள் நிதியின் மூலதனத்தில் 80 சதவீதம் முதலீடு செய்துள்ளனர். மீதமுள்ள 20 சதவீதத்தில் சிங்கப்பூர், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், மொரிஷியஸ், ஹாங்காங், ஆப்பிரிக்கா மற்றும் அமெரிக்க ஸ்பான்சர் ஏஐவிஆகிய நாடுகளில் உள்ள உலகளாவிய வரையறுக்கப்பட்ட கூட்டு நிறுவனங்களில் இருந்து கிட்டத்தட்ட 10 சதவீத நிதி கிடைத்துள்ளது.

## ஆருஷ் 25 நிகழ்வின் கீழ் வெற்றிகரமாக நிறைவடைந்த எஸ்ஆர்எம் ரன் 9.0 மாரத்தான்

**காட்டாங்குளத்தூர், செப் 02-**

காட்டாங்குளத்தூரில் உள்ள எஸ்ஆர்எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் தனது தேசிய அளவிலான தொழில்நுட்ப-மேலாண்மை திருவிழாவான ஆருஷ் 25-ன் ஒரு பகுதியாக, எஸ்ஆர்எம் ரன் 9.0 என்ற மாரத்தான் ஓட்ட நிகழ்வை வெற்றிகரமாக நடத்தியது.பூஜ்ஜியக் கழிவுக்காக மாரத்தான் ஓட்டம்' என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு நடைபெற்ற இந்த நிகழ்வில், மாணவர்கள், பேராசிரியர்கள், முன்னாள் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட, 2,600-க்கும் மேற்பட்டோர் ஆர்வத்துடன் பங்கேற்றனர். மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களால் 2007-ல் தொடங்கப்பட்ட ஆருஷ் திருவிழா, அன்று முதல் புத்தாக்கம் மற்றும் சமூகப் பொறுப்புணர்வுக்கான ஒரு தளமாகத் தொடர்ந்து இருந்து வருகிறது. இதன் 11-வது பதிப்பின் போது முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட எஸ்ஆர்எம் ரன், தற்போது ஒரு முதன்மை நிகழ்வாகவளர்ச்சி கண்டு மக்கள் மத்தியில் பிரபலமடைந்திருக்கிறது.

தென்னிந்தியாவின் முதல் உலக கெட்டில்பெல் சாம்பியனான விக்னேஷ் ஹரிஹரன் சிறப்பு விருந்தினராக இந்நிகழ்வில் கலந்துகொண்டார். இவருடன் எஸ்ஆர்எம்-ன் பெருமைமிகு விளையாட்டு வீரர்களான ஆர்.பரமேஸ்வர கோவிந்த், சத்திய குரு பி, செல்வி, ஜி.கோபிகா மற்றும் செல்வி எம்.அக்ஷயா ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக கலந்துகொண்டனர். பார்லே அக்ரோ நிறுவனத்தின் தாராள ஆதரவு எஸ்ஆர்எம் ரன் 9.0 நிகழ்வை வெற்றிகரமானதாக ஆக்கியதில் முக்கியபங்களிப்பை வழங்கியிருந்தது. இந்நிகழ்வின் மகத்தான வெற்றியைப் பற்றி குறிப்பிடுகையில், எஸ்ஆர்எம் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் சி. முத்தமிழ்ச்செல்வன், புத்தாக்கத்தையும் சமூக விழிப்புணர்வையும் இணைப்பதில் தங்கள் கல்வி நிறுவனத்தின் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்தினார். எஸ்ஆர்எம் பதிவாளர் டாக்டர் எஸ். பொன்னுசாமி மற்றும் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் முதல்வர் டாக்டர் லீனஸ் ஜேசு மார்ட்டின் ஆகியோர் பங்கேற்பாளர்களையும், நிகழ்வின் ஏற்பாட்டாளர்களையும் பாராட்டினர்.

### பயங்கரவாதம் மனிதகுலத்திற்கு எதிரானது:

# பாக்., பிரதமர் முன்னிலையில் பிரதமர் நரேந்திரமோடி பேச்சு



**பெய்ஜிங், செப். 02-**

பயங்கரவாதம் மனிதகுலத்திற்கு எதிரானது என்றும், பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் இரட்டை வேடம் போடுவதை ஏற்க முடியாது என்றும் பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரிப் முன்னிலையில் பிரதமர் நரேந்திரமோடி திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாடு சீனாவின் தியான்ஜின் நகரில் நேற்று முன்தினம் தொடங்கியது. இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் மோடி சீனா சென்றுள்ளார். மாநாட்டுக்கு வருகை தந்த பிரதமர் மோடியை சீன அதிபர் ஜின்பிங் வரவேற்றார். இந்த மாநாட்டுக்கு இடையே பல்வேறு உறுப்பு நாடுகளின் தலைவர்களை பிரதமர் மோடி சந்தித்தார்.

இந்த மாநாட்டில் பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரிப், நேபாள பிரதமர் கே.பி.ஒலி, மாலத்தீவு அதிபர் முகமது முய்சு, எகிப்து பிரதமர் முஸ்தபா மட்போலி, வியட்நாம் பிரதமர் பாம் மின் சின், மியான்மரின் மூத்த ராணுவ அதிகாரி மின் ஆங் லையிங், பெலாரஸ் அதிபர் அலெக்சாண்டர் லுகாஷெங்கோ, தஜிகிஸ்தான் அதிபர் இமோமாலி ரஹ்மான், கஜகஸ்தான் அதிபர் டோகாயேவ் உள்ளிட்ட தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இதனிடையே மாநாட்டிற்கு வருகை தந்த ரஷ்ய அதிபர் புதினை பிரதமர் மோடி சந்தித்தார். இந்த சந்திப்பின் போது சீன அதிபர் ஜின்பிங், ரஷிய அதிபர் புதின் மற்றும் இந்திய பிரதமர் மோடி ஆகியோர் ஒருவரோடு ஒருவர் சிரித்துப் பேசி கலந்துரையாடினர். சமீபத்தில் இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகள் மீது ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்க அரசு வரிவிதிப்பு உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டது. குறிப்பாக இந்தியாவுக்கு 25 சதவீதம் வரி விதித்த டிரம்ப், உக்ரைன் மீது தாக்குதல் நடத்தி வரும் ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதால், இந்தியா மீதான வரியை 50 சதவீதமாக உயர்த்தினார். இந்த சூழலில், இன்று ரஷியா, இந்தியா மற்றும் சீனாவின் தலைவர்கள் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவது முக்கியவத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

இதனை தொடர்ந்து ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாடு தொடங்கியது. இந்த மாநாட்டில் பேசிய பிரதமர் மோடி, பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் குறித்தும், இந்தியாவின் நிலைப்பாட்டிற்கு ஆதரவாக இருந்த நாடுகள் குறித்தும் பேசினார். பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரிப் முன்னிலையிலேயே பிரதமர் மோடி இந்த கருத்துகளை முன்வைத்தார். இந்த மாநாட்டில் பிரதமர் மோடி பேசியதாவது;-

“எந்தவொரு நாட்டின் வளர்ச்சிக்கும் பாதுகாப்பு, அமைதி மற்றும் ஸ்திரத்தன்மை ஆகியவை அடிப்படையாகும். ஆனால் பயங்கரவாதமும், பிரிவினைவாதமும் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. எனவே அது வேரறுக்கப்பட வேண்டும். பயங்கரவாதம் என்பது ஒரு நாட்டின் பாதுகாப்பிற்கு மட்டுமல்ல, அனைத்து மனிதகுலத்திற்கும் எதிரான சவாலாகும்.

எந்த நாடும், எந்த சமூகமும், எந்த குடிமகனும் அதிலிருந்து தன்னை பாதுகாப்பாக கருதிக் கொள்ள முடியாது. எனவே, பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் இந்தியா ஒற்றுமையை வலியுறுத்தியுள்ளது. கூட்டுத் தகவல் நடவடிக்கை மூலம் அல்கொய்தா மற்றும் அதனுடன் தொடர்புடைய பயங்கரவாத அமைப்புகளை எதிர்த்துப் போராட இந்தியா முன்முயற்சி எடுத்தது.

பயங்கரவாத இயக்கங்களுக்கு கிடைக்கும் நிதியை தடை செய்வதோடு, அதன் மூலங்களை கண்டறிந்து களையெடுத்து வருகிறோம். 4 சகாப்தங்களாக தீவிரவாத நடவடிக்கைகளால் இந்தியா பாதிக்கப்பட்டுள்ளது. சில நாடுகள் பயங்கரவாதத்திற்கு வெளிப்படையாக ஆதரவளிப்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியுமா? பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் இரட்டை வேடம் போடுவதை ஏற்க முடியாது.

பயங்கரவாதத்தின் கோரமான முகத்தை பஹல்காமில் அண்மையில் இந்தியா பார்த்தது. இது இந்தியாவின் ஆன்மா மீதான தாக்குதல் மட்டுமல்ல, மனிதநேயத்தை நம்பும் ஒவ்வொரு நாட்டிற்கும் எதிரான வெளிப்படையான சவால். நெருக்கடியான காலகட்டத்தில் இந்தியாவிற்கு ஆதரவு தெரிவித்த நாடுகளுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்

**ENROLLMENT NOTICE**

After 10 days of the publication of this notice and within 3 months there after I, L.LAKSHMI NARAYANAN, S/O S.LAKSHMANAN, Aged 35 years, permanently residing at 221/129, Middle Street, Visuvasapuram, Bodinayakanur Taluk, Theni district, Tamilnadu intend having my enrollment as an advocate moved before the Bar Council of Tamilnadu & Puducherry, Bar Council Buildings, High Court campus, Chennai-104. Those who have any valid objections may, notify the same to the Bar Council within 10 days.

L.LAKSHMI NARAYANAN

---

மாண்புமிகு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்.
திருமங்கலம்.
ஓ.மு.எண்.3231/2025/ஆ2

ராதாகிருஷ்ணன், த/பெ.முத்துக்குமரன்
2/147,கீழஉரப்பனூர்
இந்திராகாலனி, உரப்பனூர் அஞ்சல்
திருமங்கலம் வட்டம், மதுரை மாவட்டம்.
------- மனுதாரர்

--- எதிர் ---

உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்
திருமங்கலம், மதுரை மாவட்டம்.
-------------- எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரராகிய நான்,எனது தாயார் சிட்டம்மாள்,க/பெ.முத்துக்குமரன் என்பவர் கடந்த 01.07.1995-ம் தேதி மதுரை மாவட்டம்,திருமங்கலம் வட்டம்,கீழஉரப்பனூர் கிராமம், இந்திராகாலனியில் உள்ள வீட்டில் வைத்து இறந்ததை பதிவு செய்து உத்தரவிட வேண்டி திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீதான விசாரணைக்கான வாய்தா வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், திருமங்கலம் முன்பாக நடைபெறுகிறது.இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30தினங்களுக்குள் காலை 11.00மணிக்கு மேற்படி கனம் திருமங்கலம் உட்கோட்ட நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம்.

மனுதாரர்
ராதாகிருஷ்ணன்
இந்திராகாலனி, கீழஉரப்பனூர்.

---

மாண்புமிகு சார்பு நீதிமன்றம்.
திருமங்கலம்.
E.P.No:70/2023 in Arb.Case.
TNR:27/2021

M/s.ஸ்ரீராம் ட்ரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்
(அதன் பவர் ஏஜென்ட் R.ஆனந்தகுமார் மூலமாக)
------- மனுதாரர்

--------எதிரிடை---------

முத்துலட்சுமி, க/பெ.மகாமணி
192,மன்னர் திருமலை தெரு
பாலாஜி நகர், திருப்பரங்குன்றம்
மதுரை-625005.
--------- 1-ம் எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி வழக்கில் மனுதாரர், 1-ம் எதிர்மனுதாரர் மீது மேற்படி நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கும் நிறைவேற்றல் மனுவில் 1-ம் எதிர்மனுதாரர் ஆஜராவதற்கு எதிர்வரும் 03.09.2025-ம் தேதி வாய்தா போடப்பட்டுள்ளது.அன்றைய தினம் மேற்படி நீதிமன்றத்தில் தாங்கள் காலை 10.30 மணிக்கு நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது என்றும் தவறும் பட்சத்தில் ஒருதலைப் பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

K.கருணாகரன் M.A.,B.L.,
K.வீரணன் B.A.,B.L.,
வழக்கறிஞர்கள், திருமங்கலம்.

---

வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
இராமநாதபுரம்

செல்லத்துரை, த/பெ. வேலு,
1/47- தெய்வசீலை நல்லூர்
திருஉத்திரகோசமங்கை அஞ்சல்
கீழக்கரை வட்டம்
இராமநாதபுரம் மாவட்டம்.
.... மனுதார்

-எதிர்-

பிறப்பு / இறப்பு பதிவாளர்
தாலுகா அலுவலகம்
கீழக்கரை
.... எதிர்மனுதார்

அறிவிப்பு

எனது தாயார் லேட். முனியம்மாள் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை வட்டம் தெய்வசீலைநல்லூர் கிராமம் கதவு எண். 1/47 என்ற முகவரியில் வைத்து கடந்த 07.01.1998 அன்று இறந்து போனார், அப்போது எனது அறியாமையின் காரணமாக எனது தாயாரின் இறப்பை எதிர்மனுதார் அலுவலகத்தில் பதிவு செய்யாமல் விடுபட்டு போனது தற்போது எனது தாயார் லேட். முனியம்மாள் அவர்களின் இறப்பை எதிர்மனுதார் அலுவலக பிறப்பு/இறப்பு பதிவேட்டில் இறப்பை பதிவு செய்ய உத்தரவிட கோரி இராமநாதபுரம் வருவாய்கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்து கொள்ளலாம் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

மனுதாரர்

---

மாண்புமிகு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்.
திருமங்கலம்.
ந.க.எண்.1949/2025/தே

ரா.பெரியகருப்பையா
த/பெ.ராமமூப்பர்
2/25,கிழக்குத்தெரு, பேய்க்குளம்
கிராமம், கள்ளிக்குடி வட்டம்
மதுரை மாவட்டம்.
------- மனுதாரர்

--- எதிர் ---

உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்
திருமங்கலம், மதுரை மாவட்டம்.
-------------- எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரராகிய நான்,எனது தந்தை பெ.ராமமூப்பர்,த/பெ.பெருமாள் மூப்பர் என்பவர் கடந்த 13.11.1997-ம் தேதி மதுரை மாவட்டம், கள்ளிக்குடி வட்டம், பேய்க்குளம் கிராமத்தில் உள்ள வீட்டில் வைத்து இறந்ததை பதிவு செய்து உத்தரவிட வேண்டி திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீதான விசாரணைக்கான வாய்தா வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், திருமங்கலம் முன்பாக நடைபெறுகிறது.இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30தினங்களுக்குள் காலை 11.00மணிக்கு மேற்படி கனம் திருமங்கலம் உட்கோட்ட நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம்.

மனுதாரர்
ரா.பெரியகருப்பையா
பேய்க்குளம் கிராமம்.

---

உயர்திரு வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், மேலூர், (இருப்பு நரசிங்கம்பட்டி மேலூர்)
ஓ.மு.எண் : 6069/2025/அ.3

M.பாலமுருகன்,
S/o.மகாலிங்கம்,
40,எம்.டி.எஸ்.காலனி 1வது தெரு,
பள்ளபட்டி,
திண்டுக்கல் மாவட்டம்.
..... மனுதாரர்

//எதிரிடை //

உயர்திரு. சார்பதிவாளர் அவர்கள்
மேலூர்
....... எதிர்மனுதாரர்

மனுதார் M.பாலமுருகன் என்பவரின் தகப்பனார் A.மகாலிங்கம் பிள்ளை 08.05.2001-ம் தேதியில் மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், உறங்கான்பட்டி கிராம வீட்டில் இறந்ததை அவரது இறப்பை உறங்கான்பட்டி கிராம பதிவேட்டில் பதிவு செய்யக்கோரி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்து மனு சான்றிதழ் வழங்க கோரி உள்ளேன். இது குறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இன்றிலிருந்து 15 தினங்களுக்குள் மேற்படி மேலூர் வருவாய் கோட்டாட்சியர் ( இருப்பு நரசிங்கம்பட்டி மேலூர்) அலுவலகத்தில் தெரிவிக்கவும் என இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

M.பாலமுருகன்
மனுதாரர்

---

உயர்திரு வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், மேலூர், (இருப்பு நரசிங்கம்பட்டி மேலூர்)
ஓ.மு.எண் : 6079/2025/அ.3

அ.சின்னப்பொண்ணு
W/o. அழகு, D/o. மணி,
187,நடுத்தெரு, அலங்கம்பட்டி,
கம்பூர் கிராமம், மேலூர் வட்டம்.
மதுரை மாவட்டம்.
..... மனுதாரர்

//எதிரிடை //

உயர்திரு. சார்பதிவாளர் அவர்கள்
கருங்காலக்குடி
....... எதிர்மனுதாரர்

மனுதாரர் அ.சின்னப்பொண்ணு என்பவரின் தகப்பனார் மூ.மணி 10.06.2003-ம் தேதியில் மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், கம்பூர் கிராமம், அலங்கம்பட்டி, நடுத்தெரு கிராம வீட்டில் இறந்ததை அவரது இறப்பை கம்பூர் கிராம பதிவேட்டில் பதிவு செய்யக்கோரி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்து மனு சான்றிதழ் வழங்க கோரி உள்ளேன். இது குறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இன்றிலிருந்து 15 தினங்களுக்குள் மேற்படி மேலூர் வருவாய் கோட்டாட்சியர் ( இருப்பு நரசிங்கம்பட்டி மேலூர்) அலுவலகத்தில் தெரிவிக்கவும் என இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

அ.சின்னப்பொண்ணு
மனுதாரர்

---

வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம்
திண்டுக்கல்.
ந. க. எண்.5713/2025/ஆ6
இ.ப. வ.எண்.247/2021/ஆ6

குமார், த/பெ.ரத்தினம்,
6/137, கிழக்கு தெரு,
பெருமாள் கோவில் தெரு,
நெல்லூர், சித்தரேவு கிராமம்,
ஆத்தூர் வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்.
..மனுதாரர்

எதிர்

வருவாய் கோட்டாச்சியர் மற்றும்
உட்கோட்ட நடுவர் நீதிமன்றம்
திண்டுக்கல்.
....எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி நிர் மனுதாரரின் தாயார் செல்வராணி கடந்த 20.06.1993 ம் தேதி மட்டப்பாறை கிராமத்தில் உள்ள வீட்டில் இறந்துவிட்டதை திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் வேண்டி மனு தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றத்தில் பதிவு செய்ய மேற்படி இறப்பு சம்பந்தமாக யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் எதிர்வரும் 30 தினங்களுக்குள் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்து கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்படும் என்பதை அறியவும்.

வருவாய் கோட்டாட்சியர்
திண்டுக்கல்.

---

மாண்பமை சார்பு நீதிமன்றம் வேடசந்தூர்
ஐ.ஏ.நிர்: 5,6,7/2025 in
ஓ.எஸ். நிர்: 140/2015

1. பெருமாள்
2. ஜெயலட்சுமி
... மனுதாரர்கள்/ வாதிகள்

1. முத்துச்சாமி
2. ஜெயக்கொடி
....17,18புரோபோஸ்ட் எதிர்மனுதாரர்கள்
17,18 புரோபோஸ்ட் பிரதிவாதிகள்

மேலே கண்ட மனுதாரர்கள்/ வாதிகள் மேலே கண்ட 17,18 புரோபோஸ்ட் எதிர்மனுதாரர்கள்/ புரோ போஸ்ட் பிரதிவாதிகளின் தாயார் சின்னபொன்னு உள்ளிட்ட பலர் மீது குஜிலியம்பாறை தாலுகா, நாகையா கோட்டை கிராமத்தில் உள்ள அயர்ன் சர்வே 665ல் கண்ட 4.41 ஏக்கர் சம்பந்தமாக பாகப்பிரிவினை வழக்கு தொடர்ந்து O.S.:140/2015 என்ற எண்ணுள்ள அசல் வழக்கு வேடசந்தூர் சார்பு நீதிமன்றத்தில் நடந்து வந்ததில் சின்னபொன்னு காலமாகி விட்டதால் அவரது மக்களான நாகையகோட்டை வைவேஸ் புரத்தைச் சேர்ந்த மேலே கண்ட முத்துச்சாமி, ஜெயக்கொடியை சின்னபொன்னு வாரிசாக சேர்த்து அதில் முத்துச்சாமி, ஜெயக்கொடி வருகைக்கு 10-9-2025-ல் வாய்தா போடப்பட்டுள்ளது. எனவே ஏதேனும் ஆட்சேபனையிருப்பின் 10/9/2025 அன்று காலை 10 மணி அளவில் மேலே கண்ட வேடசந்தூர் சார்பு நீதிமன்றத்தில் ஆஜராகி ஆட்சேபிக்க வேண்டியது. தவறும் பட்சத்தில் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும்.

V. கிருஷ்ணன், B.Sc., BL.,
அட்வகேட், திண்டுக்கல்.

Printed Published and Owned
by S.Manimaran,
Printed at Manimaran
Printers at 9, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
RNI Regn. No.61494 / 94



மதுரை மாநகர் மாவட்டத்திற்கு எழுச்சி பயணம் மேற்கொள்ள வந்த அ.தி.மு.க. பொதுச்செயலா எடப்பாடி கே.பழனிச்சாமிக்கு மாநகர் மாவட்ட மகளிர் அணி செயலாளர் சுகந்தி அசோக் மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள் வரவேற்பு அளித்தனர்.





'மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்' முதல் கட்ட எழுச்சிப்பயணத்தின் 4-ம் கட்டத்தின் முதல் நாளான நேற்று மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட செயலாளர் வி.வி.ராஜன்செல்லப்பா எம்.எல்.ஏ. தலைமையில் திருப்பரங்குன்றம் தொகுதிக்குட்பட்ட 16 கால் மண்டபம் அருகே நடந்த கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி எழுச்சியுரையாற்றினார்.



மதுரைக்கு எழுச்சி பயணம் மேற்கொள்ள வந்த அ.தி.மு.க. பொது செயலாளர் எடப்பாடி பழனிச்சாமிக்கு மதுரை மாநகர் மாவட்ட வடக்கு இரண்டாம் பகுதி அதிமுக செயலாளர் வி.கணேசன் தலைமையில் வடக்கு இரண்டாம் பகுதி நிர்வாகிகள் வரவேற்பு அளித்தனர்



மதுரையில் எழுச்சி பயணம் மேற்கொள்ள வந்த அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு அ.தி.மு.க. மாநில மருத்துவர் அணி செயலாளர் டாக்டர் சரவணன் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்.



மதுரைக்கு எழுச்சி பயணம் மேற்கொள்ள வந்த அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு திருமங்கலத்தில் முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் தலைமையில் சாமி வேடம் அணிந்து வரவேற்பு அளித்த காட்சி.





காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் ஒன்றியத்திற்கு உட்பட்ட ஏகனாம்பேட்டை ஊராட்சியில் 'நலன் காக்கும் ஸ்டாலின்' சிறப்பு மருத்துவ முகாமினை மாவட்ட கலெக்டர் கலைச்செல்வி பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மருத்துவ பணிகள் இணை இயக்குனர் ஹிலாரினா ஜோசிட்டா நளினி, மாவட்ட சுகாதார அலுவலர் செந்தில் ஆகியோர் உடன் இருந்தனர்.



திருவொற்றியூர் மண்டலம் 7 வது வட்டத்திற்கு உட்பட்ட ராஜாஜி நகர் நேரு தெருவில் தெருவிளக்கு, குடிநீர் பிரச்சினை நிரந்தர தீர்வு, மற்றும் சாலை வசதி ஏற்படுத்தி கொடுத்த 7 வது வட்ட மாமன்ற உறுப்பினர் டாக்டர் கே.கார்த்திக்மற்றும் அ.தி.மு.க.வினருக்கு பொதுமக்கள் நன்றி கூறினார்கள். அப்போது இளைஞர் பாசறைசெயலாளர் ராஜேஷ் தலைமையில் வட்டசெயலாளர் எம்.கண்ணன் ஆகியோர் உடன் இருந்தார்.



சென்னை மாநகராட்சி திருவொற்றியூர் மண்டலம் எண்ணூரில் மழை நீர் கால்வாய் பணிகளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு செய்தார். அப்போது அவருடன் சட்டமன்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் மாதவரம் எஸ்.சுதர்சனம், டாக்டர் கலாநிதி வீராசாமி, கே.பி.சங்கர், பகுதி செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன், மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு உட்பட பலர் உடன் இருந்தனர்.

# சென்னை துறைமுகம் தொகுதி வால்டாக்ஸ் சாலையில் குளிரூட்டப்பட்ட புதிய பேருந்து நிறுத்தம் அமைப்பதற்கான பணி

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்



**சென்னை,செப்.02**

சென்னை துறைமுகம் சட்டமன்ற தொகுதி, வால்டாக்ஸ் சாலையில் வட சென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்படவுள்ள குளிரூட்டப்பட்ட பேருந்து நிறுத்தத்திற்கான பணியினை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கேசேகர்பாபு தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, அமைச்சர் பி.கே.சேகர்பாபு வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளான வால்டாக்ஸ் சாலை, ஒத்தவாடை தெருவில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.7 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் சமுதாய நலக்கூடத்தின் கட்டுமான பணிகளையும், வால்டாக்ஸ் சாலை, தண்ணீர் தொட்டி தெருவில் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் இரத்த சுத்திகரிப்பு நிலையம், 844 புதிய அடுக்கு மாடி குடியிருப்புகள், விளையாட்டுத் திடல், சமூக நலக்கூடம், மாநகராட்சி அச்சகம் என "ஒருங்கிணைந்த வளாகம்" கட்டுமான பணிகளையும் மற்றும் ஸ்டான்லி அரசு மருத்துவமனை சாலையில் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் 776 புதிய அடுக்கு மாடி குடியிருப்புகளுக்கான பணிகளையும் மேயர்.ஆர்.பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்.தயாநிதி மாறன் மற்றும் அரசு உயர் அலுவலர்களுடன் நேரில் ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மேயர் ஆர். பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்.தயாநிதி மாறன், சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மண்டலக்குழுத் தலைவர் திரு.ஸ்ரீராமுலு, எம்டிசி இணை மேலாண் இயக்குநர் ராகவன், பொது மேலாளர் (இயக்கம்) .நெடுஞ்செழியன், தலைமை பொறியாளர் மகாவிஷ்ணு, கண்காணிப்பு பொறியாளர்.பாலமுருகன், உள்ளாட்சித் பிரதிநிதிகள். எஸ்.முரளி, அபாரன்ஜி, ரவிச் சந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் தாஹா நவீன், பரிமளம், மாநகராட்சி மற்றும் சி.எம்.டி.ஏ அலுவலர்கள் உடனிருந்தனர்.

தின பூமி
நாளிதழில்
விளம்பரம்
செய்து
பயன்
பெறுங்கள்



தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குனர் அலுவலகத்தில் சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண் சென்னை பெருநகர காவல் கூடுதல் ஆணையர்கள், இணை ஆணையர்கள் உடன் தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் வெங்கடராமனை சந்தித்து வாழ்த்துக்கள் தெரிவித்தும், சென்னை பெருநகர காவல் அதிகாரிகளை அறிமுகம் செய்து வைத்து வாழ்த்துக்கள் பெற்றார்.



சென்னை கொளத்தூர் பூம்புகார் நகரில் கட்டப்பட்டு வரும் கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் புதிய கட்டிடம் ராஜாஜி நகரில் கட்டப்பட்டு வரும் மூத்த குடிமக்கள் உறைவிடத்தின் கட்டுமான பணிகளை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.உடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஷ்ரதர், கூடுதல் ஆணையர் ஹரிப்ரியா, இணை ஆணையர் கவெனிதா கலந்து கொண்டனர்.

# புதுவண்ணாரப்பேட்டை பகுதியில் கூலி தொழிலாளியிடம் கத்திமுனையில் வழிப்பறியில் ஈடுபட்ட 3 பேர் கைது

**சென்னை செப் 02-**

சென்னை, புதுவண்ணாரப்பேட்டை, ஜீவா நகர் பகுதியில் வசித்து வரும் டேவிட், என்பவர் கூலி வேலை செய்து வருகிறார். இவர் கடந்த 30 ந் தேதி அன்று கூலி வேலைக்கு சென்றுவிட்டு, இரவு மேற்படி அவரது வீட்டிற்கு முன்பு நின்று பேசிக்கொண்டிருந்த போது, அங்கு வந்த லோகேஷ் உட்பட 4 பேர் சேர்ந்து, மேற்படி டேவிட்டை வழிமறித்து, அவரிடம் பணம் கேட்கவே, டேவிட் பணம் தரமுடியாது என்று கூறியுள்ளார். அப்போது மேற்படி 4 பேரும் சேர்ந்து, டேவிட்டை தகாத வார்த்தைகள் பேசி, கத்தியால் தாக்கிவிட்டு, அவர் சட்டைப்பையில் வைத்திருந்த பணம் ரூ.850/-ஐ பறித்துக் கொண்டு, நால்வரும் தப்பிச் சென்றனர். தாக்குதலில் இரத்த காயமடைந்த டேவிட் ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று, மேற்படி சம்பவம் குறித்து, புதுவண்ணாரப்பேட்டை காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். புதுவண்ணாரப்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகள் 1.லோகநாதன், அவரது தம்பி 2.ராஜி (எ) மஸ்தான், 3.நரேஷ்குமார், ஆகிய 3 பேரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து குற்ற செயலுக்கு பயன்படுத்திய 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி லோகநாதன் என்பவர் மீன்பிடி துறைமுகம் காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளி என்பதும், இவர் மீது ஏற்கனவே 2 கொலைமுயற்சி, வழிப்பறி, கஞ்சா, திருட்டு உட்பட 23 குற்ற வழக்குகள் உள்ளதும், எதிரி ராஜி மீது 1 கொலை வழக்கு உள்ளதும், எதிரி நரேஷ்குமார் மீது 2 திருட்டு உட்பட 3 குற்ற வழக்குகள் உள்ளதும் தெரியவந்தது.

மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட மற்றொரு தலைமறைவு எதிரியை பிடிக்க காவல் குழுவினர் தீவிர தேடுதலில் ஈடுபட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட எதிரிகள் மூவரும் விசாரணைக்கு பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

# 2,054 விநாயகர் சிலைகள் அமைதியான முறையில் கரைக்கப்பட்டது: போலீசாருக்கு கமிஷ்னர் அருண் பாராட்டு

**சென்னை செப் 02-**

தமிழ்நாட்டில் கடந்த 27.ந் தேதி அன்று விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு, பல்வேறு இந்து அமைப்புகள் மற்றும் பொதுமக்கள், காவல் துறை அனுமதி பெற்று, சென்னை பெருநகர காவல் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது இடங்களில் 1,519 விநாயகர் சிலைகளை நிறுவி உரிய வழிகாட்டுதல் நெறிமுறைகளை கடைபிடித்து வழிபாடு செய்து வந்தனர். வழிபாடு செய்யப்பட்ட விநாயகர் சிலைகள் நேற்று முன் தினம் காவல்துறையால் அனுமதிக்கப்பட்ட வழித்தடங்களில் வாகனங்களில் ஏற்றி ஊர்வலமாக எடுத்துச் சென்று 1.பட்டினப்பாக்கம், சீனிவாசபுரம் 2.நீலாங்கரை, பல்கலை நகர், 3.காசிமேடு மீன்பிடி துறைமுகம், 4.திருவொற்றியூர், பாப்புலர் எடைமேடை பின்புறம் ஆகிய 4 கடற்கரைகளில் கரைக்க அனுமதி வழங்கப்பட்டது.

சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண், உத்தரவின்பேரில், கூடுதல் காவல் ஆணையாளர்கள், இணை ஆணையளர்கள், துணை ஆணையளர்கள், உதவி ஆணையளர்கள் கண்காணிப்பில் காவல்துறையினர் விநாயகர் சிலைகளுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கியும், சட்டம் மற்றும் ஒழுங்கு நிகழ்வுகள் ஏதுமின்றி தகுந்த பாதுகாப்புடன் நேற்று முன் தினம் விநாயகர் ஊர்வல பாதைகளிலும், கடற்கரைகளிலும் சிலைகளை கரைப்பதற்கும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து காவல்துறையினர் அரும்பங்காற்றினர். மேலும் காவல்துறை அனுமதிக்கப்பட்ட மேற்கண்ட 4 சிலை கரைப்பு இடங்களிலும் விநாயகர் சிலைகளை கடலில் கரைக்க பெருநகர மாநகராட்சி உதவியுடன் 2 ராட்சத கிரேன்கள் உட்பட 8 கிரேன்கள், 8 ஜேசிபி இயந்திரங்கள், டிராலிகள் பயன்படுத்தப்பட்டும், 8 கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டு, பைனாகுலர் மூலம் கண்காணித்தும், 54 கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டும் மற்றும் 13 டிரோன் கேமராக்கள் மூலம் கண்காணித்தும், அவசர உதவிக்கு 7 ஆம்புலன்ஸ் வாகனங்கள், 3 தீயணைப்பு வாகனங்கள் நிறுத்தப்பட்டும், மற்றும் மீட்பு பணிக்காக கடலோர பாதுகாப்பு படையினரின் 2 கப்பல்களுடன் கடலோர காவல் படையினர் மற்றும் நீச்சல் தெரிந்த தன்னார்வலர்களுடன் படகுகள் தயார் நிலையிலும் நிறுத்தி வைக்கப்பட்டு, சிறப்பான முறையில் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டது. விநாயகர் சிலை ஊர்வல பாதைகள் மற்றும் மேற்படி சிலை கரைக்கும் இடங்களில், சட்டம் மற்றும் ஒழுங்கு, போக்குவரத்து, சிறப்பு பிரிவு, ஆயுதப்படை, ஆயுதப்படையின் அதிவிரைவுப் படை, தமிழ்நாடு சிறப்பு படை என 16,500 காவல் அதிகாரிகள் மற்றும் 1,500 ஊர்க்காவல் படையினரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.நேற்று முன் தினம் சென்னை பெருநகர காவல் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வழிபாடு செய்த 1,411 விநாயகர் சிலைகளும், தாம்பரம் காவல் ஆணையரகத்திற்குட்பட்ட இடங்களில் வழிபாடு செய்த 408 விநாயகர் சிலைகளும், ஆவடி காவல் ஆணையரகத்திற்குட்பட்ட இடங்களில் வழிபாடு செய்த 235 விநாயகர் சிலைகளும் என மொத்தம் 2,054 விநாயகர் சிலைகள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, 1.பட்டினப்பாக்கம், சீனிவாசபுரம், 2.நீலாங்கரை, பல்கலை நகர் 3.காசிமேடு, மீன்பிடி துறைமுகம், 4.திருவொற்றியூர், பாப்புலர் எடைமேடை பின்புறம் ஆகிய இடங்களில் உள்ள கடலில் அமைதியான முறையில் கரைக்கப்பட்டது.இதில் பட்டினப்பாக்கம், சீனிவாசபுரத்தில் 1,199 விநாயகர் சிலைகளும், நீலாங்கரை பல்கலை நகரில் 611 விநாயகர் சிலைகளும், காசிமேடு மீன்பிடி துறைமுகத்தில் 216 விநாயகர் சிலைகளும், திருவொற்றியூர், பாப்புலர் எடை மேடை பின்புறம் 14 சிலைகளும் அடங்கும். ஏற்கனவே 30.ந் தேதி அன்று 108 விநாயகர் சிலைகள் கரைக்கப்பட்டுள்ளன.



மதுரவாயல் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மேல் நிலைப்பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ தொடங்கி வைத்தார். உடன்மண்டலக் குழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன், பகுதி துணை செயலாளர் வே.மதியழகன், வட்ட செயலாளர்கள் த.ரமேஷ், எஸ்.ஜி.மாதவன், உள்ளனர்.

# பட்டினப்பாக்கம் கடற்கரையில் 40 டன் குப்பைகள் அகற்றம்: மாநகராட்சி தகவல்

**சென்னை செப் 02-**

சென்னை பட்டினப்பாக்கம் கடற்கரையில் விநாயகர் சிலை கரைப்பை அடுத்து நேற்று முன் தினம் இரவு வரை 40 டன் குப்பைகள் அகற்றப்பட்டுள்ளதாக மாநகராட்சி தகவல் அளித்துள்ளது. கரை ஒதுங்கும் மரச்சட்டங்கள் உள்ளிட்ட குப்பைகளை அகற்றுவது, கிரேன் நிறுத்தத்திற்காக போடப்பட்ட மண் மேடை ஆகியவற்றை அகற்றும் பணிகள் நேற்று காலை தொடங்கி நடந்து வருகின்றன.

# அம்பத்தூர் தொழிற்பேட்டையில் ரூ.50 லட்சம் மதிப்பிலான மதுபாட்டில்கள் எரிந்து நாசம்

**சென்னை செப் 02-**

சென்னை அம்பத்தூர் தொழிற்பேட்டையில் ரூ.50 லட்சம் மதிப்பிலான மதுபாட்டில்கள் எரிந்து நாசமாகியது. கோவையில் இருந்து 24,000 மதுபாட்டில்களை ஏற்றி வந்த லாரியில் தீப்பிடித்தது. அம்பத்தூர் டாஸ்மாக் குடோனில் லாரியில் தீப்பிடித்ததில் 24,000 மதுபாட்டில்கள் எரிந்து நாசமாகியது. மதுபாட்டில்கள் ஏற்றி வந்த லாரி மீது மின்கம்பி அறுந்து விழுந்ததில் தீவிபத்து ஏற்பட்டது.

# சிறந்த பெண் குழந்தைக்கான விருது: விண்ணப்பங்கள் வரவேற்பு

## சென்னை கலெக்டர் ரஷ்மி சித்தார்த் ஜகடே தகவல்

**சென்னை செப் 02-**

சிறந்த பெண் குழந்தைக்கான விருது 2025-2026-க்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது - சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஷ்மி சித்தார்த் ஜகடே தகவல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-சென்னை மாவட்டத்தில் பெண் குழந்தைகளின் சமூக முன்னேற்றத்திற்காக சிறப்பாக பங்காற்றும் 13 வயது முதல் 18 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் தேசிய பெண் குழந்தை தினமான ஜனவரி 24-ல் மாநில அரசின் விருது வழங்குவதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் இணையதளம் மூலம் வரவேற்கப்படுகின்றது. பெண் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கவும், அனைத்து பெண் குழந்தை தொழிலாளர் முறையை ஒழிக்கவும், பெண் குழந்தை திருமணங்களை தடுக்கவும், பெண் கல்வியை பாதுகாப்பதற்கும், வீரதீர செயல் புரிந்த 18 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகளுக்கு தேசிய பெண் குழந்தைகள் தினமான ஜனவரி -24 –ல் மாநில அரசின் விருதாக பாராட்டு பத்திரம் மற்றும் ஒரு இலட்சத்திற்கான காசோலையும் வழங்கப்படும்.

இவ்விருதிற்கான தகுதிகள் பிற பெண் குழந்தைகளின் கல்விக்கு உதவுதல் பெண் குழந்தை தொழிலாளர் ஒழிப்பு பெண் குழந்தை திருமணத்தை தடுத்தல் மற்றும் தவிர்த்தல் வேறு ஏதாவது வகையில் சிறப்பான/தனித்துவமான சாதனை செய்திருத்தல் பெண்களுக்கு எதிரான சமூக அவலங்கள், மூடநம்பிக்கைகள் ஆகியவற்றிற்கு தீர்வு காண்பதற்கு ஓவியங்கள், கவிதைகள் மற்றும் கட்டுரைகள் மூலமாகவோ விழிப்புணர்வை ஏற்படுத்தியிருத்தல் ஆண்கள் மட்டுமே சாதிக்க முடியும் என்பதை போன்ற செயல்களை பெண்களாலும் சாதிக்க முடியும் என்று சாதித்திருத்தல் மேற்காணும் தகுதிகள் கொண்ட பெண் குழந்தைகளை கண்டறிந்து முதன்மை கல்வி அலுவலர், மாவட்ட கல்வி அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர், காவல் துறை மற்றும் குழந்தைகளுக்கான பணிபுரியும் சிறந்த தொண்டு நிறுவனம் இவ்விருதிற்கு தகுதியான பெண் குழந்தைகளை கண்டறிந்து விருதிற்கான முன்மொழிவு மற்றும் பரிந்துரை செய்து இவ்வலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மாவட்ட தேர்வுக்குழு மூலம் தேர்வு செய்யப்பட்டு பரிந்துரைக்கப்பட்டவர்களை மாநில தேர்வுக்குழு மூலம் கூர்ந்தாய்வு செய்து தகுதியானவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

இவ்விருதிற்கு விண்ணப்பிக்க http://awards.tn.gov.in என்ற இணையதளத்தில் 29.11.2025-ற்குள் விண்ணப்பம் செய்திடுமாறும், இணையதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விண்ணப்பிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் கையேடு தயாரிப்பு குறித்த விளக்கம் மற்றும் படிவம் (தமிழ் மருதம் எழுத்துரு)-ல் பூர்த்தி செய்து உரிய கருத்துருவை

தமிழ்-3 நகல்கள் மற்றும் ஆங்கிலத்தில் கருத்துரு-3 நகல்களை மாவட்ட ஆட்சியரகம், சிங்காரவேலனார் மாளிகை, 8வது தளத்தில் செயல்படும் மாவட்ட சமூக நல அலுவலகத்தில் 01.12.2025 அன்று மாலை 4.00 மணிக்குள் ஒப்படைக்க வேண்டும் என சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் ரஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்துள்ளார்.

# சென்னை மாநகராட்சி பகுதிகளில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்

## இன்று 13 வார்டுகளில் நடைபெறுகிறது

**சென்னை,செப்.02**

சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் நாளை (02.09.2025) திருவொற்றியூர் மண்டலம் (மண்டலம் –1), வார்டு-14ல் திருவொற்றியூர் நெடுஞ்சாலை, சி.எஸ்.ஐ. தேவாலயத்திற்கு அருகிலுள்ள திறந்தவெளி மைதானம், மாதவரம் மண்டலம் (மண்டலம்–3), வார்டு-32ல் சூரப்பட்டு, சண்முகபுரத்தில் உள்ள சமூதாய நலக்கூடம், தண்டையார்பேட்டை மண்டலம் (மண்டலம்-4), வார்டு-44ல் பெரம்பூர், துளசிங்கம் தெருவில் உள்ள எஸ்.கே.என்.எஸ்.பி. எம்.சி. விவேகானந்தா வித்யாலயா இளநிலை கல்லூரி, இராயபுரம் மண்டலம் (மண்டலம்-5), வார்டு-49ல் பழைய வண்ணாரப்பேட்டை, ஜி.ஏ. சாலையில் உள்ள YMCA கட்டடம், திரு.வி.க.நகர் மண்டலம் (மண்டலம்-6), வார்டு-77ல் பழைய ஆடு தொட்டி சாலையில் உள்ள வார்டு 77 அலுவலகம், அம்பத்தூர் மண்டலம் (மண்டலம்-7), வார்டு-89ல் முகப்பேர், முகப்பேர் பிரதான சாலையில் உள்ள சின்னசாமி திருமண மண்டபம், அண்ணாநகர் மண்டலம் (மண்டலம்-8), வார்டு-101ல் கீழ்பாக்கம், கீழ்பாக்கம் கார்டன் காலனியில் உள்ள ஜெ ஜெ அரங்கம், தேனாம்பேட்டை மண்டலம் (மண்டலம்-9), வார்டு-124ல் மைலாப்பூர், ஆர்.கே. மட் சாலையில் உள்ள பி.எஸ். மேல்நிலைப் பள்ளியின் விளையாட்டு மைதானம், கோடம்பாக்கம் மண்டலம் (மண்டலம்-10), வார்டு-135ல் அசோக் நகர், 1வது அவென்யூவில் உள்ள லக்ஷ்மி மஹால், ஆலந்தூர் மண்டலம் (மண்டலம்-12), வார்டு-166ல் நங்கநல்லூர், எம்ஜிஆர் சாலையில் உள்ள ஹரிஹரன் மஹால், அடையாறு மண்டலம் (மண்டலம்-13), வார்டு-180ல் திருவான்மியூர், மருந்தீஸ்வரர் திருமண மண்டபம், பெருங்குடி மண்டலம் (மண்டலம்-14), வார்டு-191ல் ஜல்லடியன்பேட்டை, பாரதியார் சாலையில் உள்ள ஆசான் நினைவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சோழிங்கநல்லூர் மண்டலம் (மண்டலம்-15), வார்டு-194ல் ஈஞ்சம்பாக்கம், கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள கைலாஷ் கார்டன் ஆகிய 13 வார்டுகளில் நடைபெறவுள்ளது.

இந்த முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும். பொதுமக்கள் தங்கள் வார்டுகளில் நடைபெறும் "உங்களுடன் ஸ்டாலின்" முகாமில் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வாகனங்கள் ஓட்டும்
போது செல்போன்
பேசாதே...
பேசுவது எமனாக
இருக்கலாம்


புரட்சித் தமிழரின்
எழுச்சிப் பயணம்
நம்முடைய மதுரை மாநகர் புதூர் பஸ் நிலையம் அருகில் எங்கள்
இயக்கமான அ.இ.அ.தி.மு.க வின் பொதுச்செயலாளரும், தமிழகத்தின்
வருங்கால முதலமைச்சருமான அருமை அண்ணன் புரட்சித்தமிழர்
மாண்புமிகு எடப்பாடியார் அவர்கள்
இன்று மாலை (02.09.2025) 6.30 மணியளவில் வடக்குத் தொகுதி
பொதுமக்கள் அனைவரையும் சந்தித்துப் பேசவுள்ளார்கள்
அரசு பள்ளி மாணவ, மாணவியருக்கு மருத்துவ படிப்பில் 7.5 % இட ஒதுக்கீடு
கொரோனா காலத்தில் விலையில்லா ரேசன் பொருட்கள்
வண்டியூர், செல்லூர், கண்மாய்களை தூர்வாரியது
வைகை ஆற்றின் இரு கரைகளிலும் சாலை
நத்தம் மேம்பாலம்
மாரியம்மன் தெப்பக்குளத்தில் வற்றாத நீர்
மல்டி ஸ்பெசாலிட்டி அரசு மருத்துவமனை
போன்ற திட்டங்களின் மூலம் பயனடைந்த நாம் அனைவரும் மேற்படி
திட்டங்களை நமக்களித்த மாண்புமிகு எடப்பாடியார் அவர்களை
மதுரையின் மாவீரன்
மாண்புமிகு செல்லூரார் அவர்கள்
தலைமையில் நன்றியுடன் வரவேற்போம்.
வாரீர்! வாரீர்!! வாரீர்!!!
K. அசோகன் M.A.B.L.


செப்டம்பர் 3ல்
புரட்சித் தமிழரின்
எழுச்சிப் பயணம்
மக்களை காப்போம்! தமிழகத்தை மீட்போம்!!
எழுச்சி பயணத்திற்கு வருகை தரும்
கழக பொதுசெயலாளர், மாண்புமிகு எதிர்கட்சி தலைவர்
நாளைய தமிழக
முதல்வரே
வருக... வருக...
மதுரை மாநகரின் மணிமகுடம்
மாண்புமிகு
செல்லூர் K ராஜு B.Sc., MLA
கழக அமைப்பு செயலாளர்,
மதுரை மாநகர் மாவட்ட கழக செயலாளர்
அவர்களின் தலைமையில்
அணி திரண்டு வாரீர்! வாரீர்!!
சுகந்தி அசோக்
B.Com., Ex.M.C.,Chairman
தலைமை செயற்குழு உறுப்பினர்
மாவட்ட மகளிரணி செயலாளர்


புரட்சித் தமிழரின்
எழுச்சிப் பயணம்
மதுரை மாநகர்
மாவட்டத்திற்கு
வருகைதரும்
திராவிடப் போராளி
அவர்களே
வருக!
வருக!!
மதுரை மாநகர் மாவட்ட கலைப்பிரிவு


வரவேற்கின்றோம்...
புரட்சித் தமிழரின்
எழுச்சிப் பயணம்
மக்களைக் காப்போம்
தமிழகத்தை மீட்போம்
மதுரை புறநகர் கிழக்கு மாவட்டம்,
மேலூர் சட்டமன்ற தொகுதியில் நடைபெறும்
மக்களைக் காப்போம்!
தமிழகத்தை மீட்போம்!
எழுச்சிப் பயணத்திற்கு வருகை தரும்
மாண்புமிகு
எடப்பாடியாரே!
வருக! வருக!! என அன்புடன் வரவேற்கின்றோம்..
நாள் : 02.09.2025
நேரம் : மாலை 4 மணி
இடம் : மேலூர் பேருந்து நிலையம்
மேலூர் சட்டமன்ற தொகுதி,மதுரை புறநகர் கிழக்கு மாவட்டம்